விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 21 செவ்வாய்க்கிழமை (05.03.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 076

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இலங்கை தூதரகம் முற்றுகை ஆயிரக்கணக்கானோர் கைது


சென்னையில் இலங்கை தூதரகத்தை முற்றுகையிட முயன்ற பழ.நெடுமாறன், வைகோ உட்பட ஆயிரக்கணக்கானோர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தை தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் தலைமையில் 17 கட்சிகளைச் சேர்ந்தோர் நேற்று முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள லயோலா கல்லூரியிலிருந்து நேற்றுக் காலை 11 மணிக்கு ஊர்வலமாகச் சென்று முற்றுகைப் போராட்டத்தில் ஈடுட்டனர்.

ஐ.நாவில் கொண்டு வரப்படும் இலங்கைக்கு எதிரான (19ஆம் பக்கம் பார்க்க)

# மகிந்த மீது நடவடிக்கை கோரி தமிழகத்தில் ஒருவர் தீக்குளித்து சாவு



(சென்னை)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு கோரி தமிழகத்தில் சமூக ஆர்வலர் ஒருவர் தீக்குளித்து உயிரிழந்துள்ளார்.

முன்னாள் இந்திய இராணுவ வீரரும், நாம் தமிழர் கட்சியின் செயற்பாட்டாளருமான இளமணி (வயது 48) என்பவரே இவ்வாறு தீக்குளித்தவராவார்.

தீக்குளித்த நபர் மேலதிக சிகிச்சைக்காக சென்னை கீழ்ப்பாக்கம் அரச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலன் அளிக்காமல் நேற்றிரவு 8.45 மணியளவில் உயிரிழந்தார்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக கோஷமிட்டுக் கொண்டு தன் மீது தீயை வைத்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் சம்பவ இடத்தில் இருந்து மணி மனுவாக எழுதி வைத்திருந்த கடித்தை பொலிஸார் கைப்பற்றினர்.

அந்தக் (19ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய நல்லிணக்கத்தில் கூடுதல் கவனம் தேவை

## இலங்கைக்கு ஐ.நா அறிவுறுத்து



இலங்கை அரசாங்கம் தேசிய நல்லிணக்கம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன் சர்வதேச சமுதாயத்துடன் ஆக்கபூர்வமாக சேர்ந்து இயங்க வேண்டும் என ஐக்கிய நாடுகளின் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் சமரசிங்க நாடு திரும்பினார்



ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைக்கு சென்றிருந்த மனிதவுரிமை தொடர்பான ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சருமான மகிந்த சமரசிங்க நேற்று திங்கட்கிழமை நாடு திரும்பியுள்ளார்.

இலங்கை தொடர்பிலான எந்தவொரு விவகாரமும் இந்த வாரம் கலந்துரையாடப்படாது என்பதனால் அமைச்சர் நாடு திரும்பி விட்டதாக (19ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் நேற்று கடும் மழை மக்கள் அந்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நேற்று பெய்த மழையினை அடுத்து குடாநாட்டின் தாழ்நிலப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

திடீரெனப் பெய்த மழையினால் குடாநாட்டின் பல இடங்களில் வர்த்தக நடவடிக்கைகளும், மக்களின் அன்றாட பணிகளும் பாதிப்படைந்தன.

குறிப்பாக யாழ். நகரில் உள்ள வர்த்தக நிலையங்களும் அங்காடி வியாபார நிலையங்களும் பெரும் பாதிப்பினை எதிர்நோக்கின.

நெல் அறுவடையும் இதனால் பாதிப்படைந்திருந்ததோடு புகையிலை மற்றும் வெங்காயச் செய்கையும் இம் மழையினால் பாதிப்படைந்துள்ளன.

நாவாந்துறை, பொம்மைவெளி, வசந்தபுரம், அரியாலை, குருநகர், காக்கைதீவு ஆகிய தாழ் நிலப் (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் தாமதத்திற்கு நவிபிள்ளை கண்டனம்

அரசாங்கம் வடக்கில் மேற்கொண்டுள்ள உட்கட்டுமான மீளமைப்புக்களை வரவேற்றுள்ள ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, எனினும் அரசாங்கம் பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் மறுசீரமைப்பு விடயங்களில் தாமதத்தை வெளிப்படுத்துகின்றமை தொடர்பில் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

நேற்று மனித உரிமைகள் பேரவையில் வைத்து உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசாங்கம் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்காக, தேசிய செயற்பாட்டுக்குழு ஒன்றை நியமித்துள்ளமை தொடர்பிலும் அவர் வரவேற்பைத் தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் டக்ளஸுக்கு உடல் நலக் குறைவு!

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா உடல்நலக் குறைவு காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

திடீரென ஏற்பட்ட உடல்நலக்குறைவு காரணமாக நேற்று முன்தினம் இரவு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அமைச்சர், நேற்றுக் காலை தனது அலுவலகத்திற்கு திரும்பியிருந்தார்.

இந்த நிலையில் மீண்டும் ஏற்பட்ட உடல் நலக்குறைவு காரணமாக நேற்று முற்பகல் 11.30 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

அமைச்சருக்கு 55 வயது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## ஆட்சி மாற்றத்திற்காகவே குற்றச்சாட்டு முன்வைப்பு

### கிளிநொச்சியில் இராணுவத் தளபதி உரை

இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தவும், ஓர் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவதற்காகவுமே ஜெனிவாவில் மனித உரிமைகளை நாங்கள் மீறியிருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்றது.

ஆனால் நாங்கள் குற்றமற்றவர்கள். எமது இராணுவத்தினர் ஒழுக்கமானவர்கள் என்று இலங்கையின் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் ஜயசூரிய நேற்று கிளிநொச்சியில் கூறியிருக்கின்றார்.

வரவிருக்கின்ற சித்திரை மாதத்து தமிழ் சிங்களப் புத்தாண்டையொட்டி, இராணுவத் தளபதி படையினரைச் சந்தித்து அவர்கள் மத்தியில் உரையாற்றும் இலங்கை மரபுக் கமைய அவர் நேற்று கிளிநொச்சிக்கு விஜ



யம் செய்து அங்குள்ள படையினர் மத்தியில் உரையாற்றினார். (19ஆம் பக்கம் பார்க்க)

## 2 பள்ளிவாசல்கள் மீது தாக்குதல்

மேலும் இரு பள்ளிவாசல்கள் மீது தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று திங்கட்கிழமை கம்பஹா மாவட்டத்திலுள்ள மஹர சிறைச்சாலை வளாகத்தில் அமைந்துள்ள பள்ளிவாசல் மீதும், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள ஒப்பநாயக்க பள்ளிவாசல் மீதும் அடையாளம் தெரியாத நபர்கள் கல்வீச்சு தாக்குதல்களை நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக மஹர சிறைச்சாலை வளாகத்திலுள்ள பள்ளி வாசல் சிறைச்சாலைக்குரிய காணியில் அமைந்திருந்தாலும் உள்ளூர் முஸ்லிம்களே (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சர்வதேச விசாரணை இலங்கை மீது நிச்சயம்

## சம்பந்தன் நம்பிக்கை



(கொழும்பு)

இலங்கையில் போரின் இறுதிக்கட்டத்தில் நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் தொடர்பில் ஐ.நா. மன்ற மனித உரிமைக் கவுன்சில் கடந்த ஆண்டு நிறைவேற்றிய தீர்மானத்தின் மீது இலங்கை அரசு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்ற நிலையில், இது குறித்து மீண்டும் ஒரு தீர்மானம் இந்த ஆண்டு வரும் என்று தாங்கள் எதிர்பார்ப்பதாக, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியிருக்கிறார்.

பி.பி.சி. தமிழோசையிடம் பேசிய இரா.சம்பந்தன், இந்தமாதிரி நடவடிக்கை எடுக்காதன் விளைவுகள் மீண்டும் இப்போது நிறைவேற்றப்பட விருக்கும் தீர்மானத்தில் உள்ளெடுக்கப்படும் என்று தாங்கள் எதிர் பார்ப்பதாக கூறினார்.

இந்த விடயங்கள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கருத்தை வேண்டிய இடங்களுக்குத் தெரிவித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

ஐ.நா. மனிதவுரிமை கவுன்சில் கூட்டத்தில், இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், இலங்கையின் பிரதிநிதி மகிந்த சமரசிங்க தெரிவித்த கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை. எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலாக அவரது உரை அமைய வில்லை மாறாக நிலைமையை குழப்பும் நோக்கிலேயே அது அமைந்திருக்கிறது என்றார் சம்பந்தன்.

ஐ.நா.மன்ற மனிதவுரிமை ஆணையர் உரை மீது குற்றங்களை சுமத்துவதே இந்த உரை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. இலங்கை அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பது பற்றி அது எதுவும் குறிப்பிடவில்லை என்றார் சம்பந்தன். இதை ஏனைய நாடுகள் தெளிவாக புரிந்து கொள்ளும் என்று தாம் நம்புவதாக அவர் கூறினார்.

சர்வதேச விசாரணை குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், நிச்சயமாக இலங்கை அரசு, உள்நாட்டு விசாரணை மூலமாக உண்மையைக் கண்டறியும் என்று யாரும் எதிர் பார்த்தால், அவ்விதமான ஒரு விசாரணை இலங்கையில் நடைபெறுவது சாத்தியம் இல்லை என்றே தற்போது தெளிவாக தெரிவதாக அவர் கூறினார்.

அவ்விதமான உண்மையைக் கண்டறியும் விசாரணைக்கு இலங்கை அரசு எவ்வித ஒழுங்கும் செய்யவில்லை. வெறும் இராணுவ விசாரணை ஒன்றை நடத்தி, தாங்கள் எந்தக் குற்றமும்செய்யவில்லைஎன்றுஅதுகூறிவிட்டது.

இது ஒரு நம்பகமான, சுயாதீனமான விசாரணை அல்ல. எனவே இந்த நிலையில், ஒரு சர்வதேச விசாரணைக்கு இடம் உண்டு. அது இன்று இல்லா விட்டாலும் எதிர்காலத்தில் வந்தேதீரும், இலங்கையின் நடத்தையே வைத்து பார்க்கும் போது அது வருவதை யாரும் தவிர்க்க முடியாது என்றார் சம்பந்தன். (செ-11)




**வீடு விற்பனைக்கு**

சுண்டுக்குளி பகுதியில் இரண்டு பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு

தொடர்பு:- 077 6181216 (2058)

# ஐ.நா. அதிகாரிகளுடன் த.தே.ம. முன்னணி சந்திப்பு


(ஜெனிவா)

ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் அலுவலக அதிகாரிகளுக்கும், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கும் இடையிலான சந்திப்பொன்று நவநீதம் பிள்ளையின் அலுவலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்றது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அலுவலக உயர்மட்ட அதிகாரிகளான ஆசிய, பசுபிக். மத்திய கிழக்கு, வட ஆபிரிக்க விவகாரங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் ஹனி மெகாலி மற்றும் தென்னாசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான றோறி மொங்கோவன் ஆகியோரை தமிழ்த் தேசியக் மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கனடா நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழத்தமிழர்களது ஆதரவாளருமான ஜிம் கனிபியானிஸ் ஆகியோர் சென்று சந்தித்தனர்.

சந்திப்பின்போது இலங்கையில் ஈழத் தமிழ் மக்கள் மீது இல ங்கை அரசாங்கம் மேற்கொண்ட இனப்படு கொலை, போர்க்குற்றங்கள், மனிதத்துவத்திற்கு எதிரான குற்றங்கள்தொடர்பில்முழுமையானசர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணை தேவை என்றும் அவ்வாறான விசாரணை ஒன்றுக்குசாட்சியமளிக்க விரும்பும் மக்கள் சுதந்திர மாக சாட்சியமளிப்பதற்கும், சாட்சியங்கள் பாதுகாக்கப்படுவதற்கும் ஓர் பாதுகாப்பான சூழல் உருவாக்கப்படவும், தற் போதும் தொடர்ந்தும் இடம்பெறும் இன அழிப்பை உடனடியாகத் தடுத்து நிறுத்தவும் ஏதுவாக சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பில் இலங்கையின் அரசியலமைப்பிற்கு வெளியே இடைக்கால நிர்வாகம் ஒன்று உடனடியாக உருவாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியதுடன் அது தொடர்பாகவும் நவநீதம்பிள்ளை அம்மையார் நடவடிக்கை எடுத்து எமது மக்களை அழிவிலிருந்துஉடனடியாகக்காப்பாற்றவேண்டுமென்றும் கஜேந்திரகுமார் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் கடந்த வருடம் ஐ.நாவில் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானம் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படுத்தவில்லை என்றும் மாறாக தமிழ் மக்கள் மீதான அழிப்பை தீவிரப்படுத்துவதற்கான கால அவகாசத் தினையே அரசுக்கு வழங்கியுள்ளது என்றும், இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் உள்ளக விசாரணை என்பதில் எந்தப் பயனும் இல்லை. மாறாக சர்வதேச விசாரணை ஒன்றே தேவை என்றும் வலியுறுத்தியுள்ளார். (செ-11)



# இமையாணன் ம.வி.க. உதைபந்தாட்ட முடிபு

(கரவெட்டி)

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தின் வடமராட்சிக்கு உட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு"இடையிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்டத்தில் நேற்று நடைபெற்ற போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சல் விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் கொற்றாவத்தை றேஞ்சல் விளையாட்டுக்கழகம் 2:1 என்ற கோல் கணகில் வெற்றி பெற்றுள்ளது.

நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகத்தைஎதிர்த்து பொய்கை பாரதி விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் கரண வாய் கொலின்ஸ் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது. (செ-24)

# கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வட பிராந்தியத்தில் இருந்து பதவி உயர்வு பெற்று இலங்கை வங்கியின் கொழும்புத் தலைமைக் காரியாலயத்திற்கு பதவி உயர்வு பெற்ற கே.டி.சுமண சிறி அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு ரில்கோ ஹோட்டலில் இடம்பெறவுள்ளது. (செ)

**YOU WANT TO BE A DOCTOR**

**MD / MBBS DEGREE PROGRAMME**



MEDIUM - ENGLISH, IELTS NO NEED

QUALIFICATION- GC.E A/L BIOLOGY, PHYSICS, CHEMISTRY

DURATION- 5 YEARS./TRANSFER STUDENT FROM B.Sc DEGREE PROGRAME ONLY FOUR YEARS

COMMENCEMENT DATE- 01 JUNE 2013 / 01 SEPT 2013 (LIMITED SEAT....)

RECOGNIZED BY: -SLMC, WHO, UNESCO, GMC

COUNTRIES- UNITED STATES, CANADA, UNITED KINGDOM, EUROPE, SRILANKA, SINGAPORE

மேற்குறிப்பிட்ட MD / MBBS DEGREE PROGRAMME NORTH AMERICAவில் அமைந்துள்ள DOMINICAN REPUBLIC என்னும் நாட்டில் உள்ள ALL SAINTS UNIVERSITYல் இரண்டு அரை( 2 1/2 YEARS) ஆண்டுகள் கல்வி கற்பதுடன் மிகுதி இரண்டு அரை (2 1/2 YEARS) ஆண்டுகள் AMERICA வில் கல்வி கற்க வேண்டும். மொத்தமாக ஐந்து ஆண்டுகள் (FIVE YEARS) கல்வி கற்ற பின்பு நீங்கள் AMERICAவில் DOCTORஆக வேலை பார்ப்ப தற்குரிய WORK PERMIT மூன்று ஆண்டுகளுக்கு (3 YEARS) பெற்றுக் கொடுக்கப்படும். அதனை தொடர்ந்து AMERICAவில் நிரந்தர குடியுரிமை பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு: CANADA, AMERICA, LONDON போன்ற நாடுகளில் இருந்து இலங்கை மாணவர்கள் பலர் இங்கு கல்வி கற்று வருகிறார்கள்.

**RAINBOW TRAVELS**

30/2, THIRD LANE
POWER HOUSE ROAD,
JAFFNA.
TEL: 0212219596, 0778710732

113, CHATHAM ST,
COLOMBO-1
TEL: 2321074

(HOTLINE - 0778980652)

(C-2588)

**1 ஆம் ஆண்டு நினைவு அழைப்பு**



**திருமதி சுந்தையா கமலம்**

அவர்களின் 1ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று 05.03.2013 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற விருப்பதினால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் :
குடும்பத்தினர்

இல.14, கற்குளலேன்,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(2077)

**தசாக கிருக யக்ஞ அழைப்பு**

அன்புடையீர்

நந்தன வருடம் மாசி மாதம் 12-ம் நாள் (24.02.2013) ஞாயிற்றுக்கிழமை சதுர்த்தசித் திருநாளில் அமரத்துவம் அடைந்த

**சபாபதிக்குருக்கள் சதாசிவக்குருக்கள்**

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

தசாகம் :- (05.03.2013) மாசித்திங்கள் 21ம் நாள் செவ்வாய்க்கிழமை
மாசியம் :- (06.03.2013) மாசித்திங்கள் 22ம் நாள் புதன்கிழமை
சபிண்டிகரணம்:-(07.03.2013) மாசித்திங்கள் 23ம் நாள் வியாழக்கிழமை
கிரகயக்ஞம்:-(08.03.2013) மாசித்திங்கள் 24ம் நாள் வெள்ளிக்கிழமை

ஆத்ம சாந்தி வேண்டி நடைபெறும் இந்நிகழ்வுகளில் அனைவரும் கலந்து சிறப்பிப்பதோடு பிரார்த்தனை, சமாராதனை (மதிய போசனம்) நிகழ்வுகளிலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாக்கிய லட்சுமி வாசம்,
இலங்கை நாயகி அம்மன் கோவிலடி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

(2075)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நன்மையும் தீமையும்

ஒருவர் நமக்கு நல்லது செய்கிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். அதை நாம் நீண்ட நாட்கள் மனதில் வைத்து நினைப்பது கிடையாது.

ஆனால், அவரே நமக்கு ஒரு கெடுதல் செய்யட்டும். அதை நாம் அவ்வளவு சுலபமாக மறந்து விட மாட்டோம். என்றாவது ஒருநாள் பழிவாங்க வேண்டும்'' என்று காத்துக் கொண்டிருப்போம்.

இவ்விடயத்தை விளக்குவதற்கு ஒரு கதை கூறப்படுகிறது.

ஒரு கிராமத்தில் விவசாயம் செய்யும் விவசாயி ஒருவன் இருந்தான்.

அவனுக்கு ஒரேயொரு ஆண் குழந்தை இருந்தது. அவனது குடும்பத்திற்கு இதுவே வாரிசாக அமைந்தது. ஒரேயொரு பிள்ளை என்பதால் அவன் மீது விவசாயிக்கு கொள்ளைப் பிரியம்.

ஒருநாள் அந்தப் பிள்ளையை பாம்பொன்று தீண்டி விட்டது. அக்குழந்தை இறந்து போனது.

"மகனை இழந்து விட்டோமே!'' என்ற கவலையில் விவசாயிக்கு அந்தப் பாம்பின் மீது பயங்கர கோபம் ஏற்பட்டது.

உடனே ஒரு கோடரியை கையில் எடுத்தான். அந்தப் பாம்பைத் தேடிப் பிடித்தான். அதன் மேல் ஓங்கி ஒரு போடு போட்டான்.

அவ்வளவுதான்... அந்தப் பாம்பின் வால் துண்டாகியது. ஆனால், பாம்பு வால் இல்லாமல் தப்பி ஓடிவிட்டது.

அதன்பின்னர் இவனுக்கு ஒரே பயம்...

"அடிபட்ட பாம்பல்லவா, பழிவாங்கி விடுமே?'' என்று நினைத்து அவன் பீதி அடைந்தான்.

சில நாட்கள் கடந்த நிலையில் அவன் யோசனை செய்தான். "இப்படியாக எத்தனை நாட் களுக்கு இருப்பது? அந்தப் பாம்புடன் பேசி சமாதானம் செய்து கொள்ளலாம்'' என்று அவன் முடிவுக்கு வந்தான்.

உடனே ஒரு கோப்பையில் பால் எடுத்துக் கொண்டு சென்று பாம்புப் புற்றுக்கு அருகில் வைத்தான். அந்தப் பாம்பு வெளியே வந்தது.

இவன் தான் வந்த விபரத்தைச் சொன்னான்.

அப்போது அந்தப் பாம்பு கூறியது; "இதோ பார்... இனிமேல் நாம் நண்பர்களாவது முடியாத காரியம்.

"நான் உன்னைப் பார்க்கும் போதெல்லாம் அல்லது நினைக்கும் போதெல்லாம்... எனக்கு அறுபட்ட வால் தான் நினைவுக்கு வரும்''

"அதேபோல் நீ என்னைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் இறந்து போன உன் மகனின் நினைவுதான் உனக்கு நிழலாடும்''

"ஒருவர் நமக்குச் செய்யும் தீங்கு நம் மனதில் ஆழமாகப் பதிகிறது. பழிவாங்கும் சுபாவம் தலைதூக்கி நிற்கிறது'' - இப்படியாகக் கூறி விட்டு மீண்டும் அந்தப் பாம்பு புற்றுக்குள் நுழைந்து கொண்டது.

இது பொதுவான உலக இயல்பு.

மற்றவர்கள் நமக்குச் செய்த நல்லதையெல்லாம் சுலபமாக மறந்து விடுகிறோம். ஆனால், அவர்கள் செய்த தீமை நம் மனதில் ஆழமாகப் பதிந்து விடுகிறது.

அது மட்டுமா... பழி வாங்குவதற்குரிய தருணத்தை எதிர்பார்த்து மனம் காத்துக் கொண்டிருக்கும். இத னால் என்ன நடந்தேறுகிறது?...

மனதில் அமைதி இல்லை... எப்போதும் பயந்த சுபாவமாகவே வாழ்கிறோம்.

அதனால் வாழ்க்கையில் மகிழ்ச்சியும் மன அமைதியும் வேண்டும் என்று நினைப்பவர்கள், அடுத்தவர்கள் செய்த தீமைகளை மறந்து வாழ வேண்டும்.

இதேவேளை, அடுத்தவர்கள் செய்யும் நன்மைகளை மறக்கவே கூடாது. அவற்றை நாம் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# இந்திய கல்விக் கண்காட்சி யாழ்.மத்திய கல்லூரியில் இன்று

(யாழ்ப்பாணம்)

இந்திய கல்விக் கண்காட்சி இன்றைய தினம் யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இன்றும் நாளையும் யாழ். மத்திய கல்லூரியில் றோமெயின்குக் மண்டபத்தில் மிகப் பிரம்மாண்டமான இந்தியக் கல்வி கண்காட்சி ஒன்று புதுடில்லியிலிருந்து வருகை தருகின்ற கல்வி ஆலோசகர்கள் யாழ். இந்தியத் துணைத் தூதரகத்துடன் இணைந்து நடத்த இருக்கின்றது.

இக் கல்விக் கண்காட்சியின் ஆரம்ப வைபவத்தில் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராக கலந்து கொண்டு இன்று முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பித்து வைப்பார்.

இக் கல்விக் கண்காட்சியில்,

✷ ஸ்ரீ வெங்கடேஸ்வரா பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி, ஆந்திரப் பிரதேசம்.

✷ கோணாறு லக்ஸ்மண் பொறியியல் கல்லூரி (கே.எல்.பல்கலைக் கழகம்), குந்தூர் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.

✷ சிங்கட் தொழில்நுட்ப கற்கைகள் சமூகம், புனே, மகாராஷ்டிரா.

✷ ஸ்ரீ கிருஷ்ணா நிறுவனங்களின் குழுமம், பெங்களூர், கர்நாடகா.

✷ கிருஷ்ண தேஜா நிறுவனங்களின் குழுமம், திருப்பதி, ஆந்திரப் பிரதேசம்.

✷ நவோதயா கல்வி நிதியம், ராய்சூர்,கர்நாடகா.

✷ இந்தியா லிமிட் கல்வி ஆலோசகர்கள், இந்திய அரச நிறுவனம், புதுடில்லி, நோய்டா ஆகிய இந்திய கல்வி நிறுவனங்கள் பங்கேற்கவுள்ளன.

இந்தக் கல்விக் கண்காட்சியானது கடந்த மாதம் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் தமது உயர்கல்வியை திட்டமிடுவதற்கும் பொருத்தமான கல்வி வழிகாட்டல் அவசியமான, குறிப்பாக வட மாகாண மாணவர்கள் இந்தக் கல்விக் கண்காட்சியில் கலந்து அதிகப் பயன்பெறு முகமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பின்வரும் வேறுபட்ட பாட நெறிகளில் குறிப்பாக பொறியியல், பல் மருத்துவம், தாதியியல், முகாமைத்துவம், விவசாயம், விஞ்ஞானம், கலைப்பாடங்கள் போன்றவற்றில் ஆர்வமுடைய மாணவர்களுக்கு இந்தக் கல்விக் கண்காட்சி ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

இந்தக் கல்விக் கண்காட்சியில் தேவையான தகைமை உடைய மாணவர்கள், இந்தியாவில் கல்வி கற்க ஆர்வமுடையவர்கள் தமது கல்விச் சான்றிதழ்களை இந்தக் கல்விக் கண்காட்சியில் கலந்து கொள்ளும் போது காண்பித்து தமது கல்வி அனுமதியை உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடியும். இந்தக் கல்விக் கண்காட்சி இன்று முற்பகல் 10.30 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரையிலும் நாளை முற்பகல் 10.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரைக்கும் நடைபெறும். (அ-4)

# புதுக்குடியிருப்பில் நூலகம் திறப்பு

முல்லைத்தீவு ஆதார வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள கட்டடத்தில் நூலகம் ஒன்றை புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் திறந்து வைத்துள்ளனர். பொதுமக்கள் மற்றும் மாணவர்களின் வேண்டுகோள்களுக்கிணங்க பத்திரிகை மட்டும் போடப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளதாக சபைச் செயலாளர் கு.மிதிலைநாதன் தெரிவித்தார்.

மேலும் நூலகம் அனைத்து வசதிகளுடனும் அமையப் பெறும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-60)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 170 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 50-80 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 280 | 240 | 300 | 280 |
| தக்காளி | 40-70 | 90 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 60 | 50 | 60 | 60 |
| கரட் | 140 | 150 | 160 | 140 |
| பூசணி | 50 | 40 | 40 | 50 |
| புடோல் | 40 | 80 | 80 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 60-90 | 80 | 70-80 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 85 | 70 | 100 | 90 |
| பாகற்காய் | 140 | 120 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 40-70 | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | -- | 60 | 80 | 80 |
| பயற்றங்காய் | 80 | 90 | 120 | 140 |
| லீக்ஸ் | 160 | 140 | 120 | 120 |
| பீற்றூட் | 70 | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 120 | 120 | 140 | 140 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 600 | -- |
| போஞ்சி | 140 | 140 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 70 | 140 | 100 | -- |
| கீரை - 1 பிடி | 10-20 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 40 | 50 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 50 | 45-50 |
| இராசவள்ளி | 120 | 100 | 120 | 100 |
| வெங்காயப்பூ | 100 | 90 | 140 | 160 |

# இராசி பலன்

05.03.2013
(மாசி 21, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
அட்டமி பிற்பகல் 2.27 மணிவரை
கேட்டை முன்னிரவு 7.36 மணிவரை
இராகுகாலம் 3.25-4.55 மணிவரை
சுபநேரம் 10.55-12.25 மணிவரை
அட்டமி- நவமி.

**மேடம்** மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், வேலைச்சுமை கூடும், உடல் நலனில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**இடபம்** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் கைகூடும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், இனிய தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** உற்சாகத்துடன் பணி புரியும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, பழைய கடனில் ஒரு பகுதியை கொடுக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிரியமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், புண்ணிய கருமங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

**சிங்கம்** தாய்வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், சுப செய்திகள் வந்து சேரும் நாள், மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கன்னி** நீண்டநாளைய கோரிக்கைகள் நிறைவேறலாம், உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், உறவினர் உதவியுண்டு.

**துலாம்** புத்தி சாதுரியமாக நடந்து காரியம் சாதிப்பீர்கள், பெரிய மனிதர்களின் வருகை உண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வாக்கு மேன்மை உண்டு.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், பெரியோர் சந்திப்புண்டு, வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், போசன நன்மையுண்டு.

**தனுசு** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், சயன சுகக்குறைவான நாள், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கும்.

**மகரம்** வாழ்க்கைத்திறன் உயர வழிவகை செய்து கொள்ள வேண்டிய நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும், வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும், அதிர்ஷ்டகரமான நாள்.

**கும்பம்** தூர தேச செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியம் கை கூடும், தன்னம்பிக்கை அதிகரிக்கும், போசன நன்மையுண்டு, உற்சாகமான நாள்.

**மீனம்** மனக் குழப்பம் அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், தேக நலன் சீராகும், கூட்டாளிகள் இணக்கமாக நடந்து கொள்வர், பயணங்களால் பலனுண்டு, தந்தை வழியில் அனுகூலமுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மது மயக்கத்தில் கலகம் விளைவித்த இளைஞர் கைது

(கரவெட்டி)

நெல்லியடி நகரப்பகுதியிலுள்ள மதுபானசாலை ஒன்றிற்கு முன்பாக மது அருந்தி விட்டு குழப்பம் விளைவித்த இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக தெரியவருவது, யாழ்ப்பாணத்தை சேர்ந்த குறித்த இளைஞர் நீண்டகாலமாக கொழும்பில் வசித்து வந்துள்ளார்.

சம்ப்வதினம் குறித்த இளைஞர் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான கையடக்க தொலைபேசி வைத்திருந்ததாகவும் மற்றும் பல இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் அணிந்திருந்ததாகவும் மது தலைக்கேறியதால் வீதிக்கு வந்து அட்டகாசம் புரிந்துள்ளார்.

இதனால் அருகில் இருந்த இராணுவத்தினர் குறித்த இளைஞரை அழைத்து விசாரணை மேற்கொண்டபோது இராணுவத்தினரை அவமதிக்கும் வகையில் தகாத வார்த்தை பிரயோகங்களை மேற்கொண்டுள்ளார்.

அத்துடன் அருகில் உள்ள தேநீர் கடைக்குச் சென்று அங்கும் அட்டகாசம் புரிந்தமையால் இது தொடர்பாக நெல்லியடி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் குறித்த இளைஞரை கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். (அ-3-24)



நன்றி: ஐலண்ட்

# அ.அ. கண்டெடுப்பு

ஊர்காவற்றுறை மேற்கைச் சேர்ந்த பிலிப்ஜெயரட்ணம் வின்சலோசாமிநாதர் என்பவரது தேசிய அடையாள அட்டை (900463138V) மற்றும் இலங்கை வங்கி சேமிப்பு கணக்குப் புத்தகம் என்பன கண்டெடுக்கப்பட்டு *வலம்புரி* காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளலாம்.(அ)




# இந்திய வீட்டுத் திட்டத்திற்கு தெரிவானபோதும் பயனில்லை

## காத்திருப்பதாக மக்கள் விசனம்

(கரவெட்டி)

வன்னியில் இருந்து யுத்தம் நிறைவடைந்த பின் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதி மக்களில் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ள வீட்டுத் திட்டத்திற்கு 300 பயனாளிகள் உள்வாங்கப்பட்டுள்ள போதிலும் அவ்வீட்டுத் திட்டம் இன்னமும் நடை முறைப்படுத்தப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் வீட்டை திருத்தம் செய்வதற்கு 182 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கும் வீடுகள் திருத்திக் கொடுக்கப்படவில்லை.

வடமராட்சி பிரதேசத்தில் யுத்த காலத்தில் இடம்பெயர்ந்து தமது வீடுகளை விட்டு வன்னிக்கு சென்று தற்போது மீளக் குடியேறிய மக்களும் அத்துடன் வீடுகள் இல்லாது மீள் குடியேறிய மக்களும் இவ் வீட்டுத் திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இவ்வீட்டுத்திட்டம் வழங்கப்படுவதற்கு பெயர், விபரங்கள் கோரப்பட்டு பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு சிபார்சு செய்யப்பட்ட போதிலும் பல மாதங்களாகியும் இதுவரை அது தொடர்பான விபரங்களை பயனாளிகள் பெறமுடியாமல் உள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அசமந்த போக்கினால் இம் மக்கள் இன்னமும் வீடுகள் இல்லாமல் குடிசைகளிலும் வாடகை வீடுகளிலும் உறவினர் வீடுகளிலும் வாழ்ந்து சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர் என சுட்டிக்காட்டப்படுகிறது. (அ-3-24)

# உலக வங்கி பிரதிநிதிகள் யாழிற்கு நேற்று விஜயம்

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் பிரதிநிதிகள் குழு யாழ். மாவட்டத்திற்கு நேற்று விஜயத்தை மேற்கொண்டிருந்தது. இந்தத் குழுவினருடன் இலங்கை மத்திய வங்கியின் பிரதிநிதிகள் குழுவினரும் வருகை தந்திருந்தனர்.

உலக வங்கியின் பிரதிநிதிகள் குழுவில் பெற்மெர்சிகோ, பெடர் லூக்சுன், ஜோசெப் ரொபி உள்ளிட்டவர்கள் வருகை தந்திருந்தனர். இந்தக் குழ்வினர் அரியாலை நாவலடிக்கு சென்று இந்திய வீடுகளை பார்வையிட்டதோடு யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் விஜயம் மேற்கொண்டனர்.

இதன்போது யாழ்.போதனா வைத்தியசாலைக்கு தேவையான உதவிகள் குறித்தும் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜாவிடம் கேட்டு அறிந்து கொண்டனர். அத்தோடு வைத்தியசாலையிலுள்ள கட்டடத் தொகுதிகளையும் பார்வையிட்டனர். (அ-4-6)

# வடமராட்சியில் உள்ள இரு பிரதான வீதிகளை புனரமைக்க கோ்ரிக்கை

(கரவெட்டி)

வடமராட்சி பகுதியில் இரு பிரதான வீதிகள் மிகவிரைவில் புனரமைக்கப்பட வேண்டிய நிலை உள்ளதாக அவ்வீதியில் செல்லும் பயணிகளும் அப்பகுதி மக்களும் தெரிவித்துள்ளனர்.

இதில் உடுப்பிட்டி மாலுசந்தி-அல்வாய் வீதி அத்துடன் நெல்லியடி கரணவாய் வீதி என்பன மிகவும் பழுதடைந்தும் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. இவ்வீதியால் அதிகளவான மக்கள் தினமும் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வீதிகளை புனரமைத்து தருமாறு பலதடவைகள் கோரிக்கை முன்வைக்கப்பட்டும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இவ்வீதிகளை புனரமைத்து தருவதாக வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் வீதி அதிகார திணைக்கள அதிகாரியினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அல்வாய் பாலத்தால் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் பாரவூர்தி ஒன்று பயணித்தவேளை பாலம் இடிந்து விழுந்தது.

இன்றுவரை அப்பாலத்தை சீர் செய்யவோ அல்லது புனரமைக்கவோ உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை.

இதனால் அவ்வீதியால் வாகனங்கள் பயணிப்பது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-24)

# தேரரின் பிறந்தநாள் கொண்டாட்டம் யாழில்

(யாழ்ப்பாணம்)

பெல்பொல விபஸ்ஸி தேரரின் பிறந்த தினத்தை முன்னிட்டு இராணுவத்தினரின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் குறித்த தேரரின் பிறந்ததின நிகழ்வு கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஈ.எம்.எம்.கருணாரத்ன, யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜிப்றி மற்றும் இராணுவ அதிகாரிகள், அரச அதிகாரிகள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

சுமார் 3 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் ஒவ்வொரு மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன.

கற்றல் உபகரணங்களைப் பெறுவதற்காக சுமார் 2 மணி நேரத்திற்கு மேலாக மாணவர்களும் பெற்றோர்களும் காத்திருந்ததோடு பலர் கற்றல் உபகரணங்களைப் பெறாமல் திரும்பிச் சென்றிருந்ததையும் அவதானிக்க கூடியதாகவிருந்தது. (அ-6)

# கட்டாக்காலி கால்நடைகள் ஏலவிற்பனை செய்யப்படும்

## பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் முடிபு

(கரணவாய்)

கட்டாக்காலி கால்நடைகளை பிரதேச சபை மற்றும் கமநல சேவை திணைக்களங்களின் சட்டதிட்டத்தின்கீழ் பிடித்து பராமரித்து ஏல விற்பனை செய்யப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சியில் தெற்கு, மேற்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும் கால்நடை உற்பத்தி திணைக்களம், கால்நடை உற்பத்தி மற்றும் அவற்றுக்கான சிகிச்சைகளை சனி, ஞாயிறு தினங்களில் மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு பதிலளித்த கால்நடை திணைக்கள வைத்திய அதிகாரிகள் தமது கால்நடை வைத்தியசாலைக்கு நிகழ்ச்சி திட்ட உதவியாளர்கள், கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தேவை என்றும் வாகன வசதியை ஏற்படுத்தி தருமாறும் கோரிக்கை விடுத்தார்.(அ-60)





கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் இடைவேளை உடற்பயிற்சி நிகழ்வையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ச.சத்தியசீலன் வெற்றியீட்டிய மாணவருக்கு சான்றிதழ் வழங்கி[illegible] பாடசாலை அதிபர் [illegible]சிங்கம், உப அதிபர் ஆகி[illegible] படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த கூட்டமைப்பு ஒத்துழைக்கவில்லையாம்

## அமைச்சர் கெஹலிய கூறுகிறார்

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு கட்சியின் நடவடிக்கைகள் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு தடையாக அமைந்துள்ளதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதிப் பரிந்துரைகளை முழுமையாக அமுல்படுத்துவதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தடை ஏற்படுத்தி வருகின்றது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு இறுதி அறிக்கை பரிந்துரைகளை அரசாங்கம் அமுல்படுத்தவில்லை என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு குற்றம் சுமத்தி வருகின்றது.

எனினும் சில பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஒத்துழைப்பும் அவசியம். அந்த ஒத்துழைப்பை கட்சி வழங்கத் தவறியுள்ளது.

ஆணைக்குழுவின் பரிந்துரைகள் குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் வகையீடு செய்யப்பட்டுள்ளதுடன் குறுகிய காலத் திட்டங்கள் பல ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. சில பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு அரசியல் சாசன திருத்தங்கள் அவசியமானது.

பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்புமாறு பல தடவைகள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளபோதிலும் இந்த அழைப்பினை கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளவில்லை.

பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்புமாறு இந்திய அரசாங்கமும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு வலியுறுத்தியுள்ளது என்றார். (அ-2)

# குடும்ப ஆட்சியால் பயன் ஏற்படாது

## பொன்சேகா தெரிவிப்பு

நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிப்பவர்கள் பொதுமக்களே ஆவர். ஆனால், இலங்கையைப் பொறுத்தமட்டில் குடும்ப ஆட்சியொன்றே இடம்பெற்று வருகின்றது. இந்த ஆட்சியால் பயன் ஏற்படப்போவதில்லை என ஜனநாயக தேசியக்கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பதுளை காலி எலையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

நாட்டில் இன்று எதேச்சதிகார செயற்பாடுகளும் ஊழல்மிக்க ஆட்சியுமே நான் எதிர்க்கட்சியிலிருக்கக் காரணமாகும். தேர்தலின் போது இவ்வாட்சிக்கு எதிராக வாக்களித்த மக்களை விட ஆட்சிக்கு ஆதரவாக வாக்களித்த ஏழை மக்களே சொல்லொணாத் துயரங்களை எதிர்நோக்குகின்றனர். நாடு இன்று வங்குரோத்து நிலையினை அடைந்துவிட்டது. இது ஆட்சியாளர்களுக்கு தெரிவதில்லை. அவர்கள் சுகபோக வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். (அ-2)

# புதுக்குடியிருப்பு சந்தி கடையில் திருட்டு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு சந்தியில் உள்ள பலசரக்கு கடையின் கூரையை பிரித்து உள்நுழைந்த திருடர்கள் பல ஆயிரம் ரூபா பெருட்களை திருடிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

மேற்குறித்த கடை உரிமையாளர் கடந்த சனிக்கிழமை இரவு 9 மணிக்கு கடையைப் பூட்டிவிட்டுமறுநாள்ஞாயிற்றுக்கிழமை கடை திறக்கப்படுவதில்லை என்ற காரணத்தால் விளக்கேற்றுவதற்காக அன்றைய தினம் காலை 9 மணிக்கு சென்ற வேளை கூரை பிரித்து உள்நுழைந்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை திருடர்கள் எடுத்து சென்றமை தெரியவந்துள்ளது.

குறித்த கடை உரிமையாளர் கதிர்காமம் நலன்புரி முகாமில் இருந்து வந்து செப்டெம்பர் மாதம் மீள்குடியேறி தமது நகைகளைவிற்றுமிகவும் கஷ்டத்தின் மத்தியிலேயே கடந்த ஜனவரி மாதம் கடை வியாபாரத்தை ஆரம்பித்திருந்தார்.

சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3)


- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

**2013 February- 2013 July**

24

*தமிழ் மொழி மூலம்*

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
*(B.Sc. Psychology, M.Sc. Psychology)*

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

(C-2586) விண்ணப்ப முடிவுத் திகதி : 10.03.2013


# சட்டவிரோதமாக நாட்டுக்குள் நுழைந்த ஆறுபேர் கைது

சட்டவிரோதமான முறையில் நாட் டுக்குள்பிரவேசித்த ஆறு பேரை மன்னார் கடற்படை அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இரண்டு பேர் இந்தியர்கள் எனவும் மூன்று பேர் இலங் கைப் பெண்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தலைமன்னார் கடற்பரப்பிற்குள் சட்டவிரோதமான முறையில்பிரவேசித்தபோது இவர்கள் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# நுழைவாயில் திறப்பு பிற்போடப்பட்டுள்ளது

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்தபாடசாலைநுழைவாயில் திறப்புவிழா நிகழ்வு தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப் பட்டுள்ளது எனவும் இந்நிகழ்வுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அதிபர் திருமதி எஸ்.ஜெயவீரசிங்கம் அறிவித்துள்ளார். (அ)


## ஆயுர்வேத வைத்தியர்கள், மக்களின் கவனத்திற்கு!



- நீங்கள் இளநரை, முடி உதிர்வு, வாதம், கை, கால் விறைப்பு, மூட்டுவலி, முதுகு வலி, இடுப்பு வலி என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?
- இந்நோய்களுக்குப் பலவழிமுறைகளிலும் தீர்வு தேடிச் சலித்து விட்டீர்களா?
- இந்நோய்களுக்கான தீர்வாக ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்கள் எம்மிடம் உண்டு

## ஆயுர்வேத வைத்தியர்களின் கவனத்திற்கு



- எம்மிடம் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சளி, வறட்டு இருமல் போன்ற பல வகை நோய்களுக்குரிய அரிஷ்ட ஆசவங்கள், குவாதங்கள், சூரணங்கள், சிரப் வகைகளை மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**நீங்கள் நாட வேண்டிய இடம்**

சிவா நறுமணப் பூங்கா
இல - 288, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
தொ.பேசி - 021 222 2567

(சி/2587)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பரமநாதன் லாவண்யா
Bachelor of Arts (Special)

28.02.2013 அன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கலைமாணி (சிறப்பு) பட்டம் பெற்ற பரமநாதன் லாவண்யா அவர்களை மென்மேலும் பல பட்டங்கள் பெற்று நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்.

இல. 28, பொற்பதி வீதி, கொக்குவில்.

மு.உதயகுமார் (உதயன்) குடும்பத்தினர்.

(2071)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>உயரம்: 5'4"<br>கி.பா: 26.25<br>தகைமை/தொழில்: BSc, MSc, Software engineering (தனியார்)<br>தொ.இ: B -1337 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>உயரம்: 4'1"<br>கி.பா: 50.25, 12 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -1351 |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>உயரம்: 5'5"<br>கி.பா: 9<br>தகைமை/தொழில்: BA, ஆசிரியர்<br>தொ.இ: B -1338 | பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சித்திரை 1<br>உயரம்: 5'5"<br>தகைமை/ தொழில்: BSc in Engineering (Eng- Executive)<br>தொ.இ: G-1352 |
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>உயரம்: 5'5"<br>கி.பா: 9.75<br>தகைமை/ தொழில்: A/L, CTB (சாரதி)<br>தொ.இ: B -1340 | பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>உயரம்: 5'7"<br>கி.பா:42.25, 2 இல் செவ்<br>தகைமை/ தொழில்: BCA Dispensori Reading in Pharmacy<br>தொ.இ: G -1353 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4, 7 இல் செவ்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L, AC (Eng) கட்டார் (விவாகரத்தானவர்)<br>தொ.இ: B -1345 | பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம் 2<br>உயரம்:5'<br>கி.பா: 66.5, 7 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -1354 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரன் எமக்கு விடுதலை பெற்று கொடுப்பார் என எதிர்பார்த்தேன்

## மனம் திறக்கிறார் பிரபா எம்.பி

வெறுமனே உரிமை உரிமை என்று சொல்லிக்கொண்டு ஊர் ஊராய் போய் பிரசாரம் செய்வதை விடுத்து எமது சிறார்களுக்கு முழுமையான கல்வியறிவை நாம் கொடுக்க வேண்டும். அடுத்த யுத்தம் ஆயுத யுத்தமாக இருக்காது. மாறாக பொருளாதார யுத்தமாக, அறிவு யுத்தமாக இருக்கவேண்டுமென கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிங்கள மக்களை பார்க்கும் போது நாம் தமிழர்களுக்கு எதிரியாக பார்க்கிறோம். அப்படியில்லை. சிங்கள அரசியல்வாதிகள் சில வேளைகளில் தமிழர்களுக்கு எதிராக இருக்கலாம். ஆனால் சிங்கள மக்கள் தமிழர்களுக்கு சகோதரர்களாக தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சிங்கள மக்களோடு ஐக்கியமாக வாழ வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம். உங்களுக்கு நன்றாக எனது சகோதரர் மனோ கணேசனைப் பற்றி தெரியும். அவர் அரசாங்கத்திற்கு வெளியே இருந்து கொண்டு அரசாங்கத்தை விமர்சித்துக் கொண்டிருக்கிறார். நான் அப்படியில்லை. அரசாங்கத்திற்கு உள்ளே இருந்துகொண்டே அரசாங்கத்தை விமர்சித்துக் கொண்டிருக்கிறேன்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை நான் என்றுமே நல்லவர் என சொன்னதும் கிடையாது. வல்லவர் என்று சொன்னதும் கிடையாது. இதனை சொல்வதற்கு பயப்படுவதுமில்லை. வெட்கப்படுவதும் இல்லை. அதே வேளை அவரை மோசமானவர் என்று சொல்வதும் இல்லை. ஏனெனில் அவர் நல்லவரா கெட்டவரா என்று பார்க்கும் வேலை எனக்கில்லை. எனக்குள்ள ஒரே நோக்கம் எமது தமிழ் சமூகத்திற்கு நல்ல கல்வி சேவை செய்ய வேண்டும் என்பதேயாகும்.

வெறுமனே அவர் நல்லவர், இவர் கெட்டவர் என்று பேசுவதில் எந்த அர்த்தமும் இல்லை. ஆனால் அரசாங்கத்தை விமர்சித்துக் கொண்டு மக்களை வேதனைக்குள்ளாக்கிக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் சேவையில் ஈடுபடாது அரசாங்கத்தை விமர்சித்துக் கொண்டே இருப்பார்கள்.

நாம் அரசாங்கத்தில் இருந்து கொண்டு தமிழர்கள் மீதான மோசமான நடவடிக்கைகளை எடுத்துச்சொல்லி அவர்களை மாற்றி எமது மக்களுக்கு தேவையானவற்றை வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.

தற்போது யுத்தம் முடிந்து விட்டது. இதற்கு முன்னர் பிரபாகரன் எமக்கு விடுதலையை பெற்றுக்கொடுப்பார். எமது சமூகத்திற்கு விடிவு வரும் என எதிர்பார்த்தார்கள். நானும் அதனையே எதிர்பார்த்தேன். எனது மலையக தோழர்களும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். முடிவில் எல்லா வற்றையும் இழந்துவிட்டோம்.

அடுத்த யுத்தம் ஆயுத யுத்தமாக இருக்காது. மாறாக பொருளாதார யுத்தமாக அறிவு யுத்தமாக இருக்கவேண்டும். கல்வியில் எமது சிறார்களை முன்னெடுத்து சென்றாலேயே எமது சமூகம் நாளை தலை நிமிர்ந்து நிற்கும் என தெரிவித்தார். (அ-2)

# கடன் கோரிக்கையை நிராகரித்தது சீனா

(கொழும்பு)

இலங்கையினால் விடுக்கப்பட்ட கடன் கோரிக்கையை சீனா நிராகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெற்றோலிய பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக இலங்கை அரசாங்கம் சீனாவிடமிருந்து 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக கோரியிருந்தது. எனினும் இந்தக் கோரிக்கையை சீனா நிராகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அபிவிருத்தித் திட்டங்களுக்கு மட்டுமே கடன் வழங்கப்படும் என சீனா அறிவித்துள்ளது. அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கான வட்டி வீதம் மிகவும் அதிகமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளில் சீனா மிக முக்கியமான இடத்தை வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் மாத்தள விமான நிலையம், நுரைச்சோலை அனல் மின்நிலையம் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு சீனா கடன் வழங்கியுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# காணாமல் போனோரின் குடும்பங்கள் நாளை கொழும்பில் ஒன்று கூடுவர்

வடகிழக்கு மாகாண காணாமல் போனோர் மற்றும் தடுப்புக் கைதிகள் குடும்பத்தவர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் காணாமல் போனவர்களது மற்றும் தடுப்புக் காவல் கைதிகளது குடும்பத்தவர்கள் நாளை புதன்கிழமை கொழும்பில் ஒன்று கூடவுள்ளனர். வடகிழக்கில் இருந்தும் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும் கடத்தப்பட்டு காணாமல் போனவர்களது மற்றும் விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டிருப்போர்களது குடும்ப உறுப்பினர்கள் இந்த ஒன்றுகூடலில் கலந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அச் செய்திக்கு குறிப்பில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு,

இந்த காணாமல் போனோர் மற்றும் தடுப்புக் கைதிகள் குடும்பத்தவர்களின் ஒன்று கூடலுக்கு ஒத்துழைப்பு வழங்கும் படி வடகிழக்கு மாகாண காணாமல் போனோர் மற்றும் தடுப் புக் கைதிகள் குடும்பத்தவர்களின் சங்க ஒருங்கிணைப்பாளர்கள் விடுத்துள்ள கோரிக்கையை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். இந்த அடிப்படையில் நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் கொழும்பில் இடம்பெற உள்ள இந்த ஒன்றுகூடலுக்கு மக்கள் கண்காணிப்பு குழு முழுமையான ஒத்துழைப்பு வழங்கும்.

வடகிழக்கில் இருந்தும் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும் கடத்தப்பட்டு காணாமல் போனவர்களது குடும்ப உறுப்பினர்களது விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் குடும்ப உறவுகள் இந்த ஒன்று கூடலில் கலந்துகொள்ள வேண்டும் என அழைப்பு விடுக்கிறேன். ஒன்றுகூடல் நிகழ்வின் நிகழ்ச்சி நிரல் பின்னர் அறிவிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# கழுகுகள் வி.கழகம் சம்பியனானது

(தும்பளை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட இவ்வாண்டுக்கான விளையாட்டுப் போட்டியில் நேற்று முன்தினம் கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற கிரிக்கெட் இறுதிப் போட்டியில் கழுகுகள் விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது.

இதில் தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டு கழகமும் கழுகுகள் விளையாட்டுக் கழகமும் மோதிய 6 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 5 பந்து பரிமாற்றங்களில் முதலில் துடுப்பெடுத்தாடிய தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழக அணி 5 பந்து பரிமாற்றங்களில் 29 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய கழுகுகள் விளையாட்டுக் கழக அணி 32 ஓட்டங்களை பெற்று வெற்றியை தனதாக்கிக் கொண்டது. (அ-3-19)

# தே.இ.கூ.சங்கத்தில் அங்கத்துவம் வகிப்போருக்கு சுயதொழில் கடன்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் கூட்டுறவுச் சங்கத்தில் (நிஸ்கோவில்) அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளும் இளைஞர், யுவதிகளுக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்புக்களும் சுயதொழில் கடன் உதவிகளும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது என நிஸ்கோவின் யாழ்ப்பாண பொது முகாமையாளர் வி.பி.பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இயங்கி வருகின்றது. இதன் ஓர் அங்கமாக தேசிய இளைஞர் கூட்டுறவுச் சங்கம் (நிஸ்கோ) அமைந்துள்ளது.

நிஸ்கோவில் 13-30 வயதுக்குட்பட்டவர்கள் 112 ரூபா செலுத்தி அங்கத்த வர்களாக இணைந்து கொள்ளலாம். அவ் வாறு இணைந்து கொள்ளும் இளைஞர், யுவதிகளுக்கு தனியார் துறைகளில் வேலை வாய்ப்பினையும் சுயதொழில் கடன் வழங்கல் மற்றும் அரச அனுமதி பெற்ற வங்கிகள் ஊடாக சுய தொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் செபி திட்டத்தின் கீழ் பிரதேச அபிவிருத்தி வங்கி, மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றின் மூலம் ஒவ்வொருவருக்கும் தலா இரண்டரை இலட்சம் ரூபா கடன் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையிலீடுபட்டு வருகின்றது.

அத்துடன் தொழிற்பயிற்சி சார் பயிற்சிக் கருத்தரங்குகளை பாடசாலை மட்டத்திலும் கிராம சேவையாளர் பிரிவுகளூடாகவும் நடத்தி வருவதுடன் தொழிற்பயிற்சி சார் பயிற்சி வகுப்புக்களையும் நடத்தி வருகின்றது.

அந்த வகையில் கடந்த வருடம் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 51 இளைஞர், யுவதிகள் சுய தொழில் கடன் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு பெயர்ப்பட்டியல் வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான கடன் பெறும் நடவடிக்கை தற்பொழுது இடம் பெற்று வருகின்றது. அரச வங்கிகளூடாக 6 இளைஞர், யுவதிகளுக்கு சுய தொழில் கடன் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. 10 இளைஞர், யுவதிகளுக்கு இரண்டரை இலட்சம் ரூபா தொழில் கடன் வழங்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# இளைஞர் கழகங்களுக்கு இடையிலான குழு நிலைப் போட்டி

(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக இளைஞர் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவின் குழு நிலைப் போட்டிகள் எதிர்வரும் 9 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம்திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 9 ஆம் திகதி ஆண்களுக்கான எல்லே போட்டி காலை 8 மணிக்கு அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்திலும் பெண்களுக்கான கிரிக்கெட் போட்டி மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்திலும் இடம்பெறவுள்ளது.

மறுநாள் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆண்களுக்கான கிரிக்கெட் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்திலும் பெண்களுக்கான எல்லே போட்டி அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்திலும் இடம்பெறவுள்ளது. 11 ஆம் திகதி ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி, 13 ஆம் திகதி பி.ப 3 மணிக்கு பெண்களுக்கான வலப்பந்தாட்டப் போட்டி, எதிர்வரும் 16 ஆம் திகதி பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டி, ஆண்களுக்கான உதைபந்தாட்ட போட்டி என்பன இமையாணன் இளைஞர், மாலுசந்தி மைக்கல், கரணவாய் கொலின்ஸ் ஆகிய மைதானங்களில் இடம்பெறவுள்ளது என இளைஞர் விளையாட்டுக் கழக உத்தியோகத்தர் வ.மனோராஜ் அறிவித்துள்ளார். (அ-3-24)



வட இந்து மகளிர் கல்லூரி அணி


பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான 19 வயது பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் முதலாம் இடத்தைப் பெற்று சம்பியனாகிய வட இந்து மகளிர் கல்லூரி அணியினரையும் இரண்டாம் இடத்தைப் பெற்ற பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ்.செல்வதீபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கு த.தே.கூட்டமைப்பு எதையும் பெற்றுக் கொடுக்காது

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்.மாவட்டத்தில் மட்டுமல்லாது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் வாழ்வின் எழுச்சியின் ஊடாக சமுர்த்தி திட்டம் விரிவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அச்சுவேலி இராஜமாணிக்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற யாழ்.மாவட்டத்தில் புகைத்தலுக்கு எதிரான சமுர்த்தி கொடி தினம் மற்றும் புத்தாண்டு சேமிப்பு திட்டத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம் மாவட்டத்தில் ஒரு கால கட்டத்தில் சமுர்த்தி திட்டத்தை நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்ற எண்ணம் அப்போதைய அரசிற்கு இருந்ததில்லை. இருந்த போதிலும் அரசுடன் கலந்துரையாடி நாட்டின் ஏனைய பகுதிகளைப் போன்று இம் மாவட்டத்திலும் சமுர்த்தி திட்டத்தை நடைமுறைப்படுத்தியிருந்தோம்.

இதனூடாக யுத்த பாதிப்புக்களிலிருந்து எமது மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியுமென்ற நம்பிக்கை எமக்குள்ளது.

இந்நிலையில் வாழ்வின் எழுச்சி திட்டத்தின் கீழ் சமுர்த்தியை உள்ளடக்கியதாக பல்வேறு செயற்றிட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனிடையே யாழ்.மாவட்டத்தில் மட்டுமல்லாது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு சமுர்த்தி திட்டம் விரிவாக்கப்பட்டு வாழ்வின் எழுச்சி திட்டத்தின் ஊடாக உதவித் திட்டங்களை வழங்க எமது அரசு தயாராகவுள்ளது.

வாழ்வின் எழுச்சி செயற்றிட்டங்களுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் எதிர்ப்பு தெரிவித்து தடுக்க முற்பட்ட போதிலும் அரசு பாராளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் அதனை நிறைவேற்றி மக்களுக்கான பணிகளை முன்னெடுத்து வருகிறது. இன்றுள்ள அமைதிச் சூழலை குழப்பும் வகையில் சுயலாப அரசியல்வாதிகள் செயற்பட்டு வருகின்ற போதிலும் இது குறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

ஊடகங்களில் செய்திகளுக்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கருத்துக்களை தெரிவித்து வருகின்றார்களே தவிர மக்களுக்காக அவர்கள் எதையும் பெற்றுக் கொடுத்ததுமில்லை, கொடுக்கப் போவதுமில்லையென்றும் சுட்டிக் காட்டினார். (அ-6)

# 13 ஆவது திருத்தத்தை தமிழர்களுக்கு வழங்கினால் அதுவே அரசுக்கு சாவுமணி

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரிப்பு

இந்தியாவுக்கு அடிபணிந்து 13 ஆவது திருத்தத்தை தமிழ் மக்களுக்கு வழங்கினால் அதுவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கு சாவுமணியாகும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் டாக்டர் குணதாச அமரசேகர தெரிவித்தார்.

'வடபகுதி தமிழ் மக்கள் பாதைகளை கேட்கவில்லை. வாழ்வாதாரத்தையே கேட்டனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெளிவுபடுத்துகையில், சர்வதேச நாடுகளின் யுத்த நிறுத்த கோரிக்கையை நிராகரித்து அதனை முன்னெடுத்து விடுதலை புலிகளை ஜனாதிபதி ஒழித்தார்.

அதேபோன்று கடும் போக்கை கடைப்பிடித்து 13 ஆவது திருத்தத்தையும் ஜனாதிபதி தமது அரசாங்கத்திற்கு இருந்த மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பயன்படுத்தி ஒழித்திருக்க வேண்டும். அதனை செய்யாததன் பலாபலனே இன்று ஐ. நாவில் எதிரொலிக்கின்றது.

இதனை அமுல்படுத்துவதற்காகவே இந்தியாவின் ஆலோசனையின் பிரகாரம் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் பிரேரணையை முன்வைத்துள்ளது என்றார். (அ-2)

# அரசாங்கம் வணிக வங்கிகளிடமிருந்து கடன் பெற்றுள்ளது- மத்திய வங்கி

அரசாங்கம் வணிக வங்கிகளிடமிருந்து பெருமளவு கடன்களைப் பெற்றுக் கொண்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் வரையில் அரசாங்கம் வணிக வங்கிகளிடமிருந்து 21.6 பில்லியன் ரூபா கடன்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

அரசாங்கம் வணிக வங்கிகளிடமிருந்து பெற்று கொண்ட கடன் தொகை 44 வீதத்தினால் உயர்வடைந்துள்ளது. இவ்வாறு அரசாங்கம் வணிக வங்கிகளிடமிருந்து கடன் பெற்றுக் கொள்வது நாட்டின் பொருளாதாரத்திற்கு பாதக விளைவுகளை ஏற்படுத்தும் என பொருளியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசாங்கம் அதிகளவில் கடன் பெற்றுக் கொள்வதனால் தனியார் துறையினருக்கான கடன்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

இதனால் நாட்டின் உள்நாட்டு முதலீடுகள் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

நாணய மிதப்பு கொள்கையை தொடர்ந்தும் பேணவிருப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளில் இருந்து முதலீடுகளை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் இந்த தீர்மானத்தை தொடர்ந்தும் பேணவுள்ளோம். வேகமான பொருளாதார வளர்ச்சிக்கு சேமிப்பும் முதலீடும் அவசியமாகிறது.

இந்த நிலையில் சேமிப்பு உள்நாட்டில் இல்லாத நிலையில் வெளிநாடுகளில் இருந்து அவற்றை பெற்றுக் கொள்ள இந்த திட்டம் வழி செய்யும் என்றார். (அ-2)

# திடீரென தீப்பற்றிக் கொண்டது கடை; பெறுமதியான பொருட்கள் எரிந்தன

## 15 இலட்சம் ரூபா என் மதிப்பீடு

(யாழ்ப்பாணம்)

வாகன இருக்கைகள் தயாரிக்கும் கடையொன்று எரிந்ததில் 15 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

இத் தீவிபத்துச் சம்பவம் நேற்றுக் காலை 7.30 மணியளவில் யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளி வாசல் வீதியிலமைந்துள்ள குஷன் கடையொன்றில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் வழமை போல தனது கடையினை பூட்டி விட்டுச் சென்ற கடையின் உரிமையாளர் நேற்று காலை வேளையில் தனது கடையினை திறப்பதற்கு வந்த வேளையில் கடை எரிவதனை பார்த்து கூக்குரலிட்டு தீயினை அணைக்க முயன்றுள்ளார்.

இதற்கு முன்னதாக அப் பகுதியிலுள்ள ஏனைய வியாபாரிகள் குறித்த கடை எரிவதனை கண்ட பிற்பாடு கடை உரிமையாளருக்கு தகவல் வழங்கியிருந்ததோடு சுவாலை விட்டெரிந்த தீயினையும் அணைக்க முயன்றுள்ளனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த யாழ்.மாநகர சபையின் தீயணைப்பு படைப்பிரிவின் பணியாளர்கள் மேற்கொண்ட தீவிர முயற்சியினால் குறுகிய நேரத்திலேயே சுவாலை விட்டெரிந்த தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

குறித்த கடை சீற் (இருக்கை) அடிக்கும் கடையாக காணப்பட்டதனால் கடை முழுவதும் குஷன் பஞ்சினால் நிறைந்து காணப்பட்டது. இதனால் தீ ஆரம்பத்தில் கட்டுக் கடங்காமல் நீலச் சுவாலையுடன் கரும் புகையுடன் பற்றியெரிந்தது.

எனினும் குறித்த நேரத்திற்குள் அங்கு வந்திருந்த யாழ்.மாநகர சபையின் தீயணைப்பு படைப்பிரிவினரால் தீ அருகிலுள்ள கடைகளுக்கு பரவாமல் தடுக்கப்பட்டது. கடையினுள் காணப்பட்ட பெறுமதிமிக்க குஷன் பொருட்கள், இயந்திரம் என்பன எரிந்து நாசமாகியுள்ளன.

இதில் 15 இலட்சம் ரூபா பெறுமதியுடைய பொருட்கள் எரிந்து நாசமடைந்துள்ளதாக கடையின் உரிமையாளர் தெரிவித்தார்.

குறித்த தீ விபத்து மின்னொழுக்கினால் ஏற்பட்டு இருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது. (அ-4)

# திருட்டு மின்சாரம் பெற்ற இருவருக்கு அபராதம்

(கரவெட்டி)

துன்னாலை வடக்கு பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற இருவருக்கு 2 இலட்சத்து 16 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வடமராட்சி பிரதேசத்தில் கடந்த 23 ஆம் திகதி முதல் கொழும்பில் இருந்து வந்த சட்டவிரோதமான மின்சாரத்தை தடுக்கும் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது கடந்த 28 ஆம் திகதி துன்னாலை வடக்கு பகுதியில் மேற்குறித்த இருவரும் சிக்கிக் கொண்டனர்.

குறித்த இரு நபர்களையும் கடந்த முதலாம் திகதி பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

இதில் முதலாவது நபருக்கு 2 இலட்சம் ரூபா விதிக்கப்பட்டது. இதில் மின்சார சபைக்கு நட்டஈடாக 80 ஆயிரம் ரூபாவும் நீதிமன்றத்திற்கு அபராதமாக ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் அபராதம் செலுத்த உத்தரவிட்டார்.

மற்ற நபருக்கு அபராதமாக 10 ஆயிரம் ரூபாவும் நட்டஈடாக 6 ஆயிரம் ரூபாவும் செலுத்த நீதவான் உத்தரவு பிறப்பித்தார். (அ-3-24)

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## மன்னியுங்கள்! மன்னிப்பு பெறுவீர்கள்



மற்றவர்களை நாம் மனமார மன்னிக்காவிட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்கமாட்டார் என்று இயேசு கூறும் வேதாகமப் பகுதி நமக்கு இன்று தரப்படுகின்றது.

மன்னியுங்கள்! மன்னிப்பு பெறுவீர்கள். மன்னிப்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. ஆனால், மன்னித்தவர்கள் மகான்களாக மாறி இருக்கிறார்கள். வரலாற்றில் இடம் பிடித்திருக்கிறார்கள். உண்மையே வெல்லும் என்று காந்தி அடிகளை கோட்சே சுட்டுக் கொன்றான். அவனை ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுங்கள் என்றார் மகாத்மா.

அடிமை விலங்கொடித்து அன்பு செய்த ஆபிரகாம் லிங்கனை பூத் என்பவன் சுட்டான்.அவன் விருப்பம் போல் செய்யட்டும். விட்டு விடுங்கள் என்றார் லிங்கன்.

திருத்தந்தை இரண்டாம் ஜான் போலை 1981 இல் ஆக்கா என்பவன் சுட்டான். சிறைக்குச் சென்று அவனைச் சந்தித்து வேதாகமத்தை அவனுக்கு பரிசாக கொடுத்தார். திருத்தந்தை வத்திகானின் இரகசிய தகவல்களை வெளியிட்டவரை 16 பெனடிற் சிறைச்சாலை சென்று தந்தைக்குரிய பாசத்துடன் உரையாடி மன்னித்தார். மார்ட்டின் லூதர் கிங், ஸ்டுவர்ட் ஸ்டெயின்ஸ் என்று பலபேர் தங்கள் உயிருக்கே உலை வைத்தவர்களை மன்னித்திருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக இயேசுவை சிலுவையில் அறைந்தார்கள். பிதாவே தாங்கள் செய்வதென்ன என்று அறியாத இவர்களை மன்னியும் என்றார் ஈயேசு.


ஒருவரை எத்தனை முறை மன்னிக்க முடியும்? நானும் மன்னித்துக் கொண்டே இருக்கின்றேன். அவர் தொடர்ந்து எனக்கு தீமை செய்து கொண்டே இருக்கிறார் என்று பல நேரங்களில் நாம் கூறுகின்றோம். மன்னிப்பதற்கு அளவே இல்லை என்பதை இயேசு ஏழு முறை மட்டுமல்ல எழுபது தடவை ஏழு முறை மன்னிக்க வேண்டுமென்று கூறுகிறார். அன்பின் உச்சக்கட்டமே மன்னிப்பு.எனவே, இப்போதே நாம் மன்னிக்க முடியாத தருணங்களை ஆண்டவரின் முன்னிலையில் நினைவில் கொண்டு வருவோம். நாமும் மனதார அவர்களை மன்னித்து ஆசி கூறுவோம். இது எல்லோருக்கும் எளிதான காரியமல்ல. ஆனால், தொடர்ந்து இறைவனிடம் ஜெபிக்கும் போது இறைவன் நம் மனக்காயங்களையும் வெறுப்புகளையும் மாற்றி இறையருளை பொழிந்து மன்னிக்கும் மனப்பான்மையை நமக்கு தந்தருளுவார். நம் அன்பு இயேசு எப்போதும் நம்மை மன்னிக்க தயாராக உள்ளார். நாமும் நமது அயலவர்களை மன்னிப்போமா?

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க
சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# போதும், புகழாதே!



ஜெயபுரத்து மன்னன் விஜயேந்திரன். அவன் எப்போதும் தன்னை யாராவது புகழ்ந்துகொண்டே இருக்கவேண்டும் என்று விரும்புபவன். அப்படிப் புகழ்பவனுக்கு அவன் பரிசுகளை அளித்துவிடுவான். அதனால் அரசாங்க ஊழியர்கள் போட்டி போட்டுக்கொண்டு விலையுயர்ந்த பரிசுகளாக பெற்றுக் கொண்டேயிருந்தார்கள். இது அனுபவமிக்க முதலமைச்சர் வித்தியாதரருக்கு சற்றும் பிடிக்கவில்லை.

ஒருநாள் அவர் மன்னரிடம் உங்களைப் புகழ எவ்வளவோ பேர்கள் முன்வருவது இயல்பே. ஆனால் இந்தப் புகழ்ச்சியைக் கேட்கக் கேட்க உங்களுக்கு தான் என்ற மமதை ஏற்பட்டுவிடும். மமதை அறிவை மழுங்கச் செய்துவிடும். அதனால் உங்களது ஆட்சியில் பல குறைகள் இடம் பெற்றுவிடும். மக்கள் அவதிப்படுவார்கள். எனவே புகழ்ச்சியைக் கேளாமல் நீங்கள் உங்கள் குற்றம் குறைகளைக்கூறுபவர்களுக்கு மட்டும் பரிசளியுங்கள் என்றார்.

மன்னன் வித்தியாதரரிடம் மிகவும் மதிப்புக்கொண்டவன். எனவே அவன் இனிமேல் தன்னைப் புகழ்பவர்களுக்கு பரிசு கிடையாது. தனது குறைகளைக் கூறுவோருக்கே பரிசு


## அம்புலிமாமா கதைகள்

என்றும் அறிவித்தான். அப்படியும் அவனை எல்லோரும் புகழ்ந்தார்களே ஒழிய யாருமே அவனது குறைகளைக் கூறவில்லை. இதை முதலமைச்சரிடம் கூறி இப்படிப் புகழும் நம் ஊழியர்கள் அவ்வாறு செய்யாதிருக்க ஒரு வழியைச் சொல்லுங்கள் என்று கேட்டான்.

முதலமைச்சரும் யாருமே ஒருவரை வீணாகப் புகழமாட்டார்கள். ஏதோ ஒரு காரணத்தை மனதில் வைத்துக்கொண்டே புகழ்வார்கள். அது என்ன என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும் என்றார். மறுநாள் மன்னன் தன்னை எப்போதும் புகழ்ந்துகொண்டே இருக்கும் பணியாளிடம் இதோ பார் நீ ஏன் என்னைப் புகழ்ந்து கொண்டேயிருக்கிறாய் என்று கேட்டான்.

அவனும் பணிவுடன் அரசே யாரிடமும் குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. நீங்களோ பெரிய மனிதர். நான் சாதாரணமானவன். எனவே நான் தங்களது குறைகளைக் கண்டு சொல்ல முடியாது. ஆனால் புகழ்வது இப்படியில்லை. எனவே உங்களுக்கு இருக்கும் நல்ல குணங்களைக் கூறிப் புகழ்கிறேன் என்றான்.

மன்னனும் நீ புகழ்வதற்கு நான் பொருளாக எதையும் கொடுக்க முடியாமல்



போனாலும் உன் ஏதாவது ஒரு விருப்பத்தை நிறைவேற்றுகி றேன். நீ என்ன விரும்புகிறாய் என்று கேட்டான். அப்பணியாளும் என் குடும்பம் பெரிது. என் தம்பியின் குடும்பத்தையும் என் குடும்பத்தோடு சேர்த்து வைத்துக்கொண்டு மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறேன். என் தம்பிக்கு ஏதாவது அரசாங்க உத்தியோகம் கொடுத்தால் தங்கள் பெயரை என்றென்றும் சொல்லிக்கொண்டு சுகமாக வாழ்வோம் என்றான். மன்னனும் அப்பணியாளனின் தம்பிக்கு அரசாங்க வேலை போட்டுக்கொடுத்தான்.

மன்னனின் இச்செயலை அறிந்த பல பணியாட்களும் மன்னனைப் புகழ்ந்து தம் விருப்பங்களை நிறைவேற்றிக்கொண்டார்கள். திடீரென நிலைமை மாறியதைக் கண்ட முதலமைச்சர் அவர் செய்வது சரியல்ல என எச்சரித்து அவர்கள் உங்கள் குறைகளை தாட்சண்யம் கருதிக் கூறுவதில்லை. ஆனால் வேறு யாருடைய குறை பற்றிக்கேளுங்கள் உடனே சொல்லிவிடுவார்கள் என்றார். மன்னனும் அதைச் செய்வதாகக் கூறினான்.

மறுநாள் மன்னன் இராமன் என்ற வேலையாளிடம் நீ நம் தோட்டக்காரன் சோமுவைப்போல ஏன் என்னைப் புகழவில்லை என்று கேட்டான். இராமனும் சற்றும் தயங்காமல் அந்த சோமு சொல்வதையெல்லாம் நம்பாதீர்கள். அவன் அண்டப்புளுகன். நான் உள்ளதை உள்ளபடி கூறுகிறேன். இது தான் எனக்கும் அவனுக்கும் உள்ள வித்தியாசம் என்றான்.

மன்னன் அவனை அனுப்பிவிட்டு தோட்டக்கார சோமுவை அழைத்து என் அறையைச் சுத்தம் செய்யும் இராமன் என்னைப் புகழ்வதைப்போல நீ ஏன் என்னைப் புகழ்வதில்லை என்று கேட்டான். சோமுவும் இராமனா? அவன் கடுகை மலைபோலாக்கி அளப்பவன் ஆயிற்றே. அவன் உங்களிடம் இருந்து என்னென்னவோ எதிர்பார்க்கிறான். எனக்கு அப்படியெல்லாம் ஆசையில்லை. அவன் பேராசை பிடித்தவன் என்றான்.

அதன்பின் மன்னன் முதலமைச்சரை அழைத்து என்னைப் புகழ்பவர்கள் எல்லாம் சுயநலம் கருதியே புகழ்கிறார்கள் என்பது தெரிந்துவிட்டது. சுயநலம் கருதாமல் ஒருவரைப் புகழக்கூடியவர் யாராவது இருக்கிறார்



களா என்று கேட்டான். முதலமைச்சரும் என் ஊரில் ஆதித்தனார் என்னும் பண்டிதர் இருக்கிறார். எப்போதும் யாரையும் புகழ்வதே அவரது வேலை. அதற்காக அவர் எதையும் எதிர்பார்ப்பதுமில்லை என்றார்.


மன்னனும் இப்படியும் ஒருவரா என்று கேட்கவே முதலமைச்சரும் நீங்கள் எங்கள் ஊருக்குப்போய் சிறிது நாட்கள் ஆதித்தனாருடன் இருங்கள். உங்கள் விருப்பமும் நிறைவேறும். நாட்டிற்கும் நன்மை ஏற்படும் என்றார். மன்னனும் முதலமைச்சரின் ஊருக்குப் போய் ஆதித்தனாரைக்கண்டான்.

ஆதித்தனார் அவனைக்கண்டதும் அவனது அழகிய தோற்றத்தைப் புகழ்ந்தார். பின்பு அவனது பெயரைப் புகழ்ந்தார். பின்பு அவன் அணிந்திருந்த ஆடைகளைப் புகழ்ந்தார். பின்பு அவன் முகத்தில் தென்பட்ட உணர்ச்சிகளையும் அவன் நடக்கும் விதத்தையும் புகழ்ந்தார். அதைக் கேட்ட மன்னன் தன்னிடம் இவ்வளவு சிறப்புக்கள் உள்ளனவா என்று எண்ணி உச்சி குளிர்ந்து போனான். இப்படியே சில நாட்கள் கழிந்தன. ஆதித்தனார் தினமும் புதுப்புது விடயங்களைக் கண்டு வானளாவ அவனைப் புகழ்ந்து கொண்டேயிருந்தார். மன்னன் தும்மினாலும் இருமினாலும் கொட்டாவி விட்டாலும் அவற்றையெல்லாம் அவர் புகழ்ந்தார்.

மன்னன் இதை எல்லாம் கேட்டுக் கேட்டுச் சலித்துப்போய் ஒருமுறை அவரைக் கண்டபடி திட்டினான். ஆனால் அவரோ அவன் எவ்வளவு அழகாகத் திட்டுகிறான் என்று புகழ்ந்தார். அதைக்கேட்ட மன்னன் இப்படியே நீங்கள் எவ்வளவுகாலம் புகழ்ந்துகொண்டேயிருப்பீர்கள் என்று கேட்டான். அவரும் என்று சூரியன் ஓய்வு எடுத்துக்கொண்டு போய் விடுகிறானே அதுவரை புகழ்ந்து கொண்டேயிருப்பேன் என்றார்.

அப்போது அவன் உடனேயே முதலமைச்சரை அவரது ஊருக்கு வரச்சொன்னான். அவர் வந்ததும் மன்னன் என்னை எப்படியாவது அழைத்துப்போய்விடுங்கள். இனி ஒரு நிமிடமும் யாரும் என்னைப் புகழக் கேட்டுக்கொண்டிருக்க மாட்டேன் என்றான்.

அமைச்சரும் சிரித்துக்கொண்டே ஆதித்தனார் மாபெரும் பண்டிதர். எல்லாம் கற்றவர். அவர் தன்னை பிறர் புகழக்கூடாது என்பதற்காக பிறரைப் புகழ்ந்துகொண்டேயிருக்கிறார். இதனால் சலிப்படைந்த இந்த ஊர் மக்கள் யாரும் இவர் முன் நிற்பது கூட இல்லை. தமது வேலைகளை அக்கறையுடன் செய்கிறார்கள். இதனால் ஊர் செழிப்பாயும் சுகவாழ்வு கொண்டதாயும் உள்ளது. பண்டிதர் பிறர் தம்மைப்புகழக் கூடாது என்று எண்ணி ஊருக்கு நன்மை செய்தார். அது போல நீங்களும் பிறர் புகழ்வதைக் கேளா



மல் இருந்தால் நாடு சுகவாழ்வு பெறும் என்றார். மன்னன் விஜயேந்திரனின் மனக் கண் திறந்தது. அன்று முதல் அவன் புகழ்ச்சிகளைக் கேளாமல் தனது ஆட்சியில் முழுக்கவனம் செலுத்தி நாட்டை முன்னேறச் செய்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

## 64

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!



"சின்னப்பாண்டி...! நீ நல்ல வனப்பா. சொல்றதும் நல்ல வார்த்தைதான். ஆனா பொழப்புக்குப் பொருந்தலையே. எல்லாருக்கும் சோறு போட்டுட்டு ஈரத்துணிய வகுத்துல போட்டுப் படுத்திருக்கானப்பா இத்துப் போன விவசாயி!"

பரமனாண்டி கேட்ட கேள்விக்குக் கண்ணைத் துடைச்சுட்டுச் சிரிச்சுட்டான் சின்னப்பாண்டி:

"ஈரத்துணிய எடுக்கப் போராடணுமே தவிர, அது மேல ஒரு சவத்துணியும் பொத்திட்டுப் போயிடக் கூடாது மாமு!"

"அந்த காலத்துலேயே பஞ்சம் பொழைக்க ஊருவிட்டு ஊரு போன கதை இருக்கா இல்லையா தம்பி?" ஒத்த வீட்டு மூளி சடைச்சுப் பேசிட்டா.

"உழுக நிலம் இருக்கு
ஒண்ட நிழல் இருக்கு
எருமைத் தயிரு இருக்கு
ஏண்டி போற ரங்கூனுக்கு?

இப்படி ஒரு நாட்டுப் பாட்டும் அந்தக் காலத்துல இருந்தே இருக்கா இல்லையா மூளியக்கா?"

கெத்துன்னு சிரிச்சிருச்சு கூட்டமே.

"அஞ்சாயிரத்துக்கோ ஆறாயிரத்துக்கோ வாங்குன நெலத்த ஆறு லச்சத்துக்குக் கேக்கிறான் மில்லுக்காரன். வித்துக் கடனைக் கட்டிட்டுப் பட்டணம் போயிப் பொழைக் கலாமுன்னு பாத்தா- கருத்தமாயி மகனே... குறுக்குச் சாலு ஓட்டுறியேப்பா..." கெடாவீரன் கேக்கவும் ஒட்டியிருந்த சிரிப்பு ஓடியே போயிருச்சு சின்னப்பாண்டி மூஞ்சிய விட்டு.

"இந்த மண்ணு- இந்தத் தண்ணி- இந்தக் காத்த விட்டுட்டுப் பொழப்பு தேடிப் போன கூட்டம்தான் பட்டணங்கள்ல சாக்கடை ஓரமா சேரிகள உண்டாக்கிச் செத்துக்கிட்டிருக்கு... உங்களுக்கு ஒரு விவரம் சொல்றேன் கேளுங்க... ஆசியாவிலேயே பெரிய சேரி மும்பைதானாம். அதுக்குள்ள ஐந்நூறு பேருக்கு ஒரு கக்கூஸாம். ஆப்பிரிக்காச் சேரி இன்னும் மோசமாம். தண்ணி அங்க கடவுள் மாதிரியாம்; பாக்கவே முடியாதாம். பிளாஸ்டிக் பையில மலம் கழிச்சு அதுக்குண்டான பொட்டியில அஞ்சல் பண்ணணுமாம். நீங்களும் அப்படி ஒரு துன்பத்துக்கு ஆளாகப் போறீக? வேணாம் பெருசு வேணாம்..."

"ஏப்பா சின்னப்பாண்டி...! நாய் கடிக்கக்கூட எலும்பு இல்ல என் ஒடம்புல. விவசாயம் பண்ணியே விடியாமக் கெடக்கு எம் பொழப்பு. இன்ஜினியருக்குப் படிக்கணுங்கிறான் என் பய.

நெலத்த விக்காம என்ன பண்ணச் சொல்ற?" பொன்னுமுத்துப்பிள்ளை கேட்ட கேள்வி ஊருக்கே நியாயமாப் பட்டுச்சு.

அதுவரைக்கும் பொறுமையாயிருந்த சின்னப்பாண்டி சிலீர்னு கோவிச்சுட்டான்.

"உங்க பயல நீங்க படிக்க வச்சா ஒரு வேலையில்லாத பட்டதாரி நாலு வருசம் கழிச்சு உண்டாவான். நீங்க நெலத்த வித்துட்டா ஒரு வேலையில்லாத குடும்பம் இன்னைக்கே உருவாயிரும். பரவாயில்லையா?"

கொஞ்சம் கொஞ்சமாக் கட்சி மாறுது கூட்டம். மதில்மேல் பூனையெல்லாம் சின்னப்பாண்டி பக்கமே தாவுதுக.

"படிச்சபய சொல்றதுல நியாயம் இருக்கப்பா. குளம் போனாக் கெணறு தோண்டலாம்; நெலம் போனா என்ன பண்றது?"

"எல்லாப் பொழப்புலயும் கஷ்ட நஷ்டம் இருக்கு. நம்ம பொழப்புலயும் இருக்கு. அதுக்கு பயந்தா முடியுமா? மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்தறதா?"

"ஊறெல்லாம் கூடி ஒண்ணா முடிவு எடுப்போம். விக்க வேணாம் நெலத்த.



# முட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்தறதா?

எல்லாரும் பேசி முடிக்க, அதுல ஒரு சிக்கல் இருக்கேன்னு" இழுத்தாரு பரமனாண்டி. என்னான்னு திரும்புனாக எல்லாரும்.

ஒரு அஞ்சாறுபேரு கை நீட்டி முன்பணம் வாங்கிப்புட்டோம். அதான் ஒரு இழுவையா இருக்கு.

"முன்பணம்தான. கிரயம் இல்லையே"

"இல்ல; கிரயம் இல்ல"

"அப்பத் திருப்பிக் குடுத்துட்டாப் போச்சு"

"கொடுப்பீங்கடி கொடுப்பீங்க"- நாக்க மடிச்சுத் துருத்திக்கிட்டே வெள்ளாட்டங் கிடையில வெறிநாய் புகுந்த மாதிரி கூட்டத்தை வெலக்கி வாரான் முத்துமணி.

சலசலன்னு ஓடி வந்த தண்ணி மதகுல முட்டி நின்னு போன மாதிரி கலகலன்னு இருந்த சபை கம்முன்னு ஆகிப் போச்சு. தடுமாறி, அம்பலக் கல்லுல தானும் ஏறி நின்னுட்டான் முத்துமணி. கை கழுவியும் போகாத மீன்வாசனை மாதிரி அவன் அன்னைக்கு அடிச்ச சாராயம் லேசா வீசுது அவன் மேல.

"பெரிய மனுசன் கூட்டுன கூட்டத்துக்குப் பெருசுக கூடி வந்துருக்கீகளாக்கும். என்னியக் கூப்புட வேணாமா? நானும் ஒரு பெரிய மனுசன் இல்லையா இந்த ஊருல? அது யாரய்யா அது? குடுத்த காசத் திரும்பித் தாரேங்கிற குபேரன்"

தொண்டையச் செருமிக்கிட்டுக் கெடாவீரன் பேச ஆரம்பிச்சாரு:

"யப்பா முத்துமணி... நான் மட்டுமில்ல; ஊரே ஒண்ணுகூடி முடிவெடுத்துருக்கமப்பா. நிலத்த விக்கிறதில்ல; முன்பணத்தத் திருப்பிக் குடுத்துறப் போறோம்"

"அய்யா கெடாவீரரே...! கருவாடு மீனாகிப் போச்சுன்னு சொன்னா மூணுகிலோ போடுங்கற முட்டாப்பய நானுன்னு நெனச்சுட்டீகளா? வார்த்த மாறாதீங்க; மரியாதை கெட்டுரும்"

"நிலத்த வித்தாத்தானண்ணே மரியாதை போயிரும்; பணத்தத் திருப்பிக் கொடுத்தா மரியதை போயிராது"- சின்னப்பாண்டி சீறிட்டான்.

அண்ணன், தம்பி ரெண்டுபேரும் ஊர் மந்தையில உரசவும் கூன் விழுந்து கிடந்த கூட்டம் நிமிந்து உக்காந்துச்சு.

"வாடா என் கூடப் பெறந்த கோடாலி. நீ தான் இந்த மொட்டை மாட்டுக்கெல்லாம் கொம்பு சீவிவிட்டவனா? ஏய் வேணாம்டா; அவுக பொழப்புல மண்ணடிக்கப் பாக்காத. என்னமோ அவுக யோகம்... விக்காத பூமிக்கு வெல கூடி வந்திருக்கு. விக்கவிட மாட்டீங்கறியே"

"வித்துட்டா அவுக எங்க போவாக?"

"வட்டிக்கு விடச் சொல்லு. நகத்துல அழுக்கு ஒட்டாம உக்காந்து திங்கச் சொல்லு!"

"வட்டிக்கு விடறதும் வட்டிக்கு வாங்குறதும் ஒரு பொழப்பாண்ணே? வட்டிக்கு வாங்குன நம்ம தாத்தன் இதே மந்தையில வேட்டிய உருவுன கதைய நீ மறந்துட்டியா? அந்த அசிங்கம் நம்ம ஊருல இன்னொரு குடும்பத்துக்கு ஏற்படணுமா?"

"இவுக கடன் வாங்கி மட்டும் அவமானப்படலாம்; வட்டிக்கு விட்டு வாழக்கூடாதா? சொல்றான் பாரு மானம் காக்க வந்த மருதுபாண்டி. நீ பேசலடா. வெள்ளக்காரி பேய் புடிச்சு ஒன்னிய இந்த ஆட்டு ஆட்டுது"

"ஏய் நிறுத்துங்கப்பா... எங்க பொழப்புக்காக அண்ணந்தம்பிக முட்டிக்கிறாதீக" கட்டைத் தொண்டையில கணீர்னு பேசுனாரு நாயக்கரு.

"ஏ பெருசு... !முன்பணம் கொடுத்துட்டேன்; நெலத்த விக்கலேன்னு வச்சுக்க... மானத்த விக்க வேண்டி வரும் பாத்துக்க!"

"அவங்க மானம் போனா நம்ம மானமும் சேந்துதாண்ணே போகும். நம்ம ஊருக்கு முன்னாலயே விவசாயம் உண்டாயிருச்சு. சொல்லப்போனா ஒவ்வொரு ஊரையும் உண்டாக்குனதே விவசாயம்தான். விவசாயத்தையும் அழிய விடமாட்டோம்; நிலத்தையும் விக்கவிட மாட்டோம்!"

"சொல்றேன் கேளுங்கய்யா. பருத்தி விளையாத காட்டுக்குப் பவுன்விலை கெடைச்சிருக்கு. வித்துருங்க. இப்படி ஒரு சந்தர்ப்பம் இனிமே வராது!"

"வேணாம்; இப்படி ஒரு சந்தர்ப்பம் வரவே வேணாம். அவங்கள விக்க விடமாட்டேன். போ; உன் வேலையப் பாரு போ"

"ஒன்னக் கொல்றதுதாண்டா என் வேல"

சின்னப்பாண்டி மேல மளார்னு தவ்வி அவன் நெஞ்சுச் சட்டையப் புடிச்சுக் கசகசன்னு கசக்கி முறுக்கிட்டான் முத்துமணி.

"ஏ...ஏ...ஏய்...விடுங்கப்பா"

கூட்டமே எந்திரிச்சுக் கத்தவும் கசமுசா ஆகிப்போச்சு. சின்னப்பாண்டி சட்டைய இடது கையில புடிச்சு இறுக்கி வலது கையத் தூக்கி அஞ்சு வெரலயும் உள்ளங்கைக்குள்ள உருட்டித் தெரட்டி, சின்னப்பாண்டி மூஞ்சில முத்துமணி ஓங்கிக் குத்தப் போகவும் அம்பு மாதிரி ஓடி வந்து அம்பலக்கல்லுல விழுந்து, முறுக்கி நின்ன முத்துமணி கையத் தடுத்துச் சின்னப்பாண்டிக்கும் முத்துமணிக்கும மத்தியில நெடுஞ்சுவர் மாதிரி நின்னுட்டான் சொள்ளையன்.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியர்க்குரு யாருக்கு வரும்?

வெப்பம் அதிகமாகவும் காற்றில் ஈரப்பதம் அதிகமாகவும் உள்ள பகுதிகளில் வசிப்பவர்களுக்கு தோலில் ஏற்படும் முக்கிய பாதிப்பு வியர்க்குருதான்.

வியர்க்குரு எல்லோருக்குமே வரலாம். என்றாலும் அதிகமாக யாருக்கு வியர்வை



வருமோ அவர்களுக்கு வியர்க்குருவும் அதிகமாக வரலாம்.

உடல் பருமனாக உள்ளவர்களுக்கு வியர்க்குருவும் அதிகமாக ஏற்படும்.

சில குடும்பங்களில் எல்லோருக்குமே வியர்க்குரு காணப்படும்.

பருத்தி உடைகளைத் தவிர்த்து நைலோன் உடைகளை அதிகமாக வெயில் காலங்களில் அணிபவர்களுக்கு வியர்க்குரு வரலாம்:

அதிக வெப்பம் நிறைந்த, காற்றோட்டம் குறைவாக உள்ள பகுதிகளில் வேலை செய்பவர்களுக்கு வியர்க்குரு ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம்.

### எங்கு தோன்றும்?

உள்ளங்கை மற்றும் உள்ளங்கால் தவிர பிற இடங்களில் எங்கு வேண்டுமானாலும் தோன்றலாம். அதற்குத் தடையேதும் இல்லை.

தோன்றிய பின்னர் சில நாட்கள் முதல் சில மாதங்கள் வரை இதன் ஆயுட்காலம் நீடிக்கலாம்.

வியர்க்குரு ஒருவர் உடலின் மீது வாழும் வரை தொந்தரவுகளைக் கொடுத்துக் கொண்டேதான் இருக்கும். இவை கொடுக்கும் முதல் தொந்தரவு அரிப்பு. அடுத்து எரிச்சல், பின்னர் நமைச்சல்.

இதன் தொடர் விளைவுகளாக கிருமித் தொற்று ஏற்பட்டு அழற்சி, ஒவ்வாமை போன்ற பாதிப்புகளும் ஏற்படலாம். இதைத் தவிர்க்க வேண்டுமானால் வியர்க்குரு ஏற்படாமல் தடுக்க வேண்டும்.

### வியர்க்குரு ஏற்படாமல் எப்படி தடுக்கலாம்?

வியர்க்குரு ஏற்படாமல் தடுப்பதற்கு முதலில் வியர்வை அதிகம் ஏற்படாமல் தடுக்க வேண்டும். இதன்மூலம் வியர்க்குரு ஏற்படுவதைத் தடுத்து நிறுத்தி விடலாம். இதற்கு வெயிலில் அலைவதைத் தவிர்க்க வேண்டும்.

குளிர்சாதன அறைகளில் பணி புரியலாம். அல்லது காற்றோட்டம் நிறைந்த இடங்களில் பணிபுரிய வேண்டும்.

எளிதில் ஜீரணமாகக்கூடிய உணவுகளைத் தேர்தெடுத்துச் சாப்பிட வேண்டும்.

மது, அதிகமாக கோப்பி, தேநீர் ஆகியவற்றைப் பருகுவதை நிறுத்த வேண்டும்.

மேலும், கொழுப்பு நிறைந்த உணவுகளான மாமிசம், முட்டை ஆகியவற்றைத் தவிர்த்துவிட வேண்டும். அதேபோன்று மசாலா, அதிகம் கலந்த காரவகை உணவுகளையும் தவிர்க்க வேண்டும்.

இவர்கள் செயற்கை ஆடைகளான நைலோன், டெர்லின், பொலிஸ்டர் முதலி ஆடைகளுக்குப் பதிலாக பருத்தியினாலான மெல்லிய ஆடைகளை அணிந்து கொள்ள வேண்டும். அவற்றை மிகவும் இறுக்கமாக இல்லாமல் தளர்வாய் அணிய வேண்டும். தேங்காய் எண்ணெயை சிறிதளவே தடவ வேண்டும். அவ்வாறு செய்தால் வியர்க்குரு ஏற்படாமல் தடுத்துவிடலாம் எனக் கருதப்படுகிறது.


இவர்களுக்கு விற்றமின் ஏ மருந்தை 50 ஆயிரம் 1.u என்னும் அளவில் தினமும் இருவேளை கொடுப்பது நல்ல பயனை அளிக்கும் எனக் கருத்தப்படுகிறது.

### சிகிச்சைகள்:

சலிசிலிக் அமிலம், காம்பர், மென்தால், கிளிசரின், ஸ்பிரிட் ஆகியவை கலந்து தயாரிக்கப்பட்ட மருந்தும் வியர்க்குருவை ஒழிக்கப் பயன்படும். பாதிக்கப்பட்ட பகுதிகளில் இம் மருந்தை தினமும் இருவேளை வீதம், ஒரு வாரம் தடவ நிவாரணம் கிடைக்கும். அல்லது தினம் இரண்டு முறை நல்ல தண்ணீரில் குளித்து வந்தால் ஏழு நாட்களில் நிவாரணம் கிடைக்கும்.

# குதிக்கால் வலி பற்றிய ஒரு மருத்துவப் பார்வை...

மனித உடல் என்பது எலும்பு என்ற கம்பிகளாலும் தசைகள் என்ற சீமெந்து கலவைகளாலும் ஆனது. இந்த உடலின் பலமும் தாங்கும் திறனும் ஒன்றையொன்று சார்ந்து




இருக்கிறது. மனிதன் தன் வாழ்க்கைப் பயணத்தில் பாதியை கடக்கும் போது தசைகளும் தளர்கின்றன. கூடவே எலும்புகளும் பலமிழக்கின்றன. எலும்புகளின் அடர்த்திகுறைகிறது. எனவே, அவன் எஞ்சியுள்ள தன் பயண நாட்களை தளர்வுடனும் சோர்வுடனும் வலியுடனும் பயணிக்க வேண்டிய நிலையில் இருக்கிறான். இந்த நிலையை தவிர்க்க சில வழிமுறைகளை கடைப்பிடித்தால் போதும்.


நடுத்தர வயது மனிதனுக்கு சுமாராக கல்சியச் சத்து தேவை. இதை சரியாக உள்வாங்கிக் கொள்ள விற்றமின் டியும் தேவை. இரத்தத்தில் யூரிக் அமிலம் அதிகமானால் அது எலும்புகளை பலவீனப்படுத்தும். மாவுச்சத்து, கொழுப்பு பொருட்கள் போன்றவை அதிகமானால் உடலில் கொழுப்பு சத்து அதிகமாகும். உடல் எடை கூடும். தொல்லைகள் தொடரும். எனவே, அமிலச்சத்து உள்ள உணவுகளான மாவு, கொழுப்பு, புரதம் இவைகளை சரியான அளவு மட்டுமே உண்ண வேண்டும். கல்சியம், விற்றமின் ஈ, குளிர்மையான உயிர்ப்பான தூய பழங்கள், காய்கறிகள், கீரைகள் அதிகமாக உண்ண வேண்டும். இதன்மூலம் என்பின் வன்மை தன்மையை பாதுகாக்க முடியும்.

உடல் எடையின் பெரும்பகுதி குதிக்கால்களினாலேயே தாங்கப்படுகிறது. அந்த எலும்பு மூலமாக அதற்குக் கீழ் உள்ள தசைப் பகுதியில் தாங்கப்படுகிறது. எந்த தசைப் பகுதியிலும் தொடர்சியாக அழுத்தம் கொடுத்தால் அந்த பகுதி புண்ணாகிப் போகும். அல்லது சிதைந்து போகும்.

வயது கூடும் போது உடலில் இரத்த ஓட்டங்கள் குறையும் போது இந்த குதிக்கால் செயற்பாடுகளிலும் குழப்பங்கள் வருகின்றன. அந்த குஷன் போன்ற பகுதி இரத்த ஓட்டம் குறைவதாலும் தொடர்ச்சியான பலமான அழுத்தத்தாலும் பாதிக்கப்பட்டு புண்ணாகிறது.

### இக்குதிக்கால் வலிக்கான தீர்வாக

முதலில் அதிக நேரம் நிற்பதை தவிர்க்க வேண்டும். குஷன் செருப்புகளை (வீட்டிற்குள்ளும் கூட) பயன்படுத்த வேண்டும். சுடு நீரில் பாதக்குளியல் அவ்வப்போது செயலாம். காலை எழுந்தவுடன் பாதங்களுக்கு வாம் அப் பயிற்சி கொடுக்க வேண்டும். எழுந்து நின்று கொண்டு இடவலமாக உள்ளங்காலை புரட்ட வேண்டும். பின், முன்னும் பின்னுமாக காலை புரட்ட வேண்டும். பின்பு நடை பயிற்சி, முடிந்தால் குதித்தல், மெது




ஓட்டம், சைக்கிள் ஓட்டுதல் போன்ற பயிற்சிகளை மேற்கொள்ளலாம்.

தொடர்ச்சியாக அரைமணி நேரத்திற்கு மேல் நிற்கக்கூடாது. நிற்க, நடக்க, உடகார என வேலைகள் மாறிமாறி இருப்பது போல் அமைத்துக் கொள்ள வேண்டும்.

இக்குதிக்கால் வலிக்கு ஊசி மருந்து செலுத்துதல், அறுவைச்சிகிச்சை போன்ற மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.




# சர்வதேச நகர்வுகளை கொண்டு அரசாங்கம் செயற்பட வேண்டும்

## ஆங்கில வார இதழ் சுட்டிக்காட்டு

சர்வதேச நகர்வுகளை கொண்டு எதிர்காலத்தில் செயற்பட வேண்டியவற்றை மஹிந்த ராஜபக்ஷவின் இலங்கை அரசாங்கம் தீர்மானிக்க வேண்டியுள்ளதாக ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத் தொடரின் பேரவையின் அமர்வுகள் இலங்கை அரசாங்கத்தின் மீது பாரிய குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளன. இதன்போது அமெரிக்காவினால் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக யோசனை ஒன்றும் முன்வைக்கப்படவுள்ளது.

இந்நிலையில் மெதமுலன்ன என்ற மஹிந்த ராஜபக்ஷவின் உள்ளூர் கொள்கையை வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லும் நிலைப்பாட்டுக்கு தடை ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் அரசாங்கம் தற்போதைய தமது நிலைப்பாட்டை தொடர்ந்தும் கொண்டு செல்ல முடியுமா என்பதை தீர்மானிக்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியுள்ளதாக ஆங்கில இதழ் குறிப்பிட்டுள்ளது.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 22 ஆவது மனித உரிமைகள் அமர்வின் போது அமெரிக்காவினால் கொண்டு வரப்படவுள்ள யோசனையின் நடைமுறைப்படுத்தல் அடுத்த வருடம் நடைபெறவுள்ள அமர்வின் போது மீள் பரிசீலிக்கப்படவுள்ளது.

இலங்கை அரசாங்கம் தமது நட்பு நாடுகளான ரஷ்யா, சீனா ஆகியவை மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்காத நிலையில் தமது நிலைப்பாட்டுக்கு ஆதரவை ஏனைய நாடுகளிடம் இருந்து பெற்றுக் கொள்வதில் இடர்களை எதிர்கொள்கிறது.

எனவே, இந்த முறை அமெரிக்கா கொண்டு வரும் இலங்கைக்கு எதிரான யோசனைக்கு அதிக நாடுகள் ஆதரவு வழங்கும் என்பதை இலங்கை அரசாங்கம் தெரிந்து வைத்துள்ளது.

இதற்கு உதாரணமாக அமைச்சர் சமரசிங்க, நவநீதம்பிள்ளை தொடர்பில் எழுப்பிய குற்றச்சாட்டுக்களை ஜேர்மனின் தூதுவர் கண்டித்தமை குறிப்பிடத்தக்க அம்சமாக அமைந்திருந்தது.

இதனை தவிர நடைமுறையில் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகள் திருப்திகரமானதாக அமையவில்லை. இதன்காரணமாக இந்த வருட இறுதியில் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் அமர்வுக்கு பாதிப்பு ஏற்படலாம்.

அத்துடன் அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளராக பசில் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டமை கட்சிக்குள்ளும் பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளதாக ஆங்கில இதழ் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

# எயார் லைன்ஸை அமைக்கிறது கோப்

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முன்னிலைப்படுமாறு கோப் எனப்படுகின்ற பொது வர்த்தகம் தொடர்பிலான நாடாளுமன்றக் குழுவின் உறுப்பினர் ரவி கருணாநாயக்க அறிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் கடந்த வருடம் 29 மில்லியன் ரூபா நட்டம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் இரண்டு ஆண்டுகளில் அந்த நிறுவனம் மேலும் 34 தொடக்கம் 35 மில்லியன் ரூபாய் நட்டமடையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் இதனை தவிர்க்கும் வகையிலான திட்டங்கள் எதனையும் அந்த நிறுவனம் தம்வசம் கொண்டிருக்கவில்லை. இது தொடர்பில் விசாரணை செய்யவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை எதிர்த்து ஜெனீவாவில் போராட்டம்

ஐரோப்பிய வாழ் இலங்கையர்கள் ஜெனீவாவில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாட்டில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றுவதனை எதிர்த்து இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பு காரியாயலயத்திற்கு எதிரில் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

கெபதிகொல்லாவ, துடுவெள பிரதேச மக்கள் புலிகளினால் கொல்லப்பட்டதாகவும் அரந்தாலாவையில் பௌத்த பிக்குகள் கொல்லப்பட்டதாகவும் குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமெழுப்பத் திட்டமிட்டுள்ளனர்.

இது தொடர்பான புகைப்படங்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் தற்போதைய சமாதான சூழலை முழுமையாக அனுபவிப்பது வடக்கு மக்களே

## அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறுகிறார்

(அடம்பன்)

**ஜெனீவாவுக்கு சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு வீட்டை நிர்மாணிப்பதற்கு ஒரு கல்லைக்கூட பெற்றுக் கொடுக்கவில்லை. அவ்வாறு பெற்றுக் கொடுத்தார்களா? என்பது தொடர்பில் ஜெனீவாவில் விளங்கப்படுத்த முடியுமா என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.**

பயங்கரவாதிகளினால் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களை அவர்களது சொந்த மண்ணில் மீள்குடியேற்றியே தீருவோம் என்றும் அவர் சூளுரைத்தார்.

அடம்பன் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட குடிநீர் விநியோகத்திட்டத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் உரையாற்றுகையில்,

இலங்கையில் வாழும் மக்கள் மூன்று தசாப்தங்களான பயங்கரவாத செயற்பாடுகளினால் பாதிப்புக்குள்ளாகியிருந்தனர். அந்த நிலையினை இந்த நாட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாற்றியமைத்து சகலரும் அனுபவிக்கக் கூடிய சமாதானத்தை ஏற்படுத்தி தந்துள்ளார். அந்த சமாதானத்தை குறிப்பாக வட மாகாண மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

வெளிநாடுகளில் இருந்து பெறப்படுகின்ற நிதிகளில் அதிகமானவை வடமாகாணத்தின் அபிவிருத்திக்கே செலவிடப்படுகின்றது.

வடக்கில் புலிகளினால் முற்றாக அழித்து துவம்சம் செய்யப்பட்ட பல கட்டடங்களை மீள் புனரமைத்துள்ளோம். பாதைகள் நவீனமயப் படுத்தப்பட்டுள்ளன, மதவாச்சி- தலைமன்னார் புகையிரதப் பாதை நிர்மாணப் பணிகள் வேகமாக இடம்பெறுகின்றன.

அதேபோல் புத்தளம்- மன்னார் ஊடான யாழ்ப்பாண பாதைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. நவீன வைத்தியசாலைகள், பிரதேச செயலகக் கட்டடங்கள் மற்றும் தேவையான பாடசாலை கட்டடங்கள் என்பன இன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவைகளெல்லாம் இங்கு வாழும் மக்களுக்காகவே என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இலங்கையில் 80 சதவீதமாக வாழும் பௌத்தர்களால் வழிபடும் தலதாமாளிகையின் நிர்மாணத்துக்கு கூட வழங்கப்படாத நிதிகள் மடு தேவாலய புனரமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனை உலகில் கத்தோலிக்க மக்களது பிரதான வணக்க தலமாக மாற்ற வேண்டும் என்பதுதான் எமது பிரதான நோக்கமாகும்.

அதேபோன்று தமிழ் மக்களது பிரசித்தி பெற்ற 5 திருத்தலங்களில் ஒன்றான மன்னார் திருக்கேதீஸ்வரம் கோயில் புனரமைப்புக்கு என 350 கோடி ரூபாய் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

அன்று மெனிக்பாமில் இருந்த மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கை எடுத்த போது அவர்களை மீள்குடியேற்ற விடாமல் சர்வதேச நிறுவனமொன்றின் பிரதிநிதி அம்மக்களை ஏற்றிச் செல்ல தயாராக இருந்த பஸ் வண்டிக்கு முன்பாக வந்து நின்று செயற்பட்டதை நினைவுகூர விரும்புகின்றேன்.

அவ்வாறு அதற்கு பயந்து இம்மக்களை மீள்குடியேற்றம் செய்யாமல் இருந்திருந்தால் இன்னும் அவர்கள் அகதி முகாமில் வாழ நேரிட்டிருக்கும். அதனையும் காரணமாக கொண்டு ஜெனீவாவுக்கு சென்று அரசாங்கத்திற்கு எதிராக செயற்படும் சதித்திட்டத்தை தற்போது அங்கு சென்றுள்ள தமிழ்க் கூட்டமைப்பின் இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் செய்திருப்பர்.

தேர்தல் காலங்களில் இங்கு வந்து மக்களின் இரத்தத்தை சூடேற்றி அவர்களை பிழையாக வழிநடத்தி அதன் மூலம் தமது இருப்பை தக்க வைத்துக் கொள்ள முனையும் இது போன்ற அரசியல்வாதிகள், சமாதானத்தை, இனவுறவை விரும்பும் அப்பாவி மக்களை இனக் கூறுகளாக பிரித்தாள நினைக்கும் எண்ணங்களை கைவிடுமாறு கேட்கின்றேன் என்றார். (அ-2)

# இலங்கை அரசாங்கம் தமிழகத்துடனான இராஜதந்திர உறவை பேண வேண்டும்

## அசோக் கே காந்தா அட்வைஸ்

இலங்கை அரசாங்கம் இந்தியாவுடன் நேரடி இராஜதந்திர தொடர்புகளை பேணுகின்ற போதும் தமிழகத்தை தாண்டியே அது புதுடில்லியுடனான உறவை பேண வேண்டும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் இடம்பெறுகின்ற ஆர்ப்பாட்டங்கள் மற்றும் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் குறித்து இலங்கை அரசாங்கம் கருத்தில் கொள்வதில்லை. தமது இராஜாங்க செயற்பாடுகளை இலங்கை புதுடில்லியுடனே மட்டுப் படுத்திக் கொண்டுள்ளது.

இந்த நிலையிலேயே உயர்ஸ்தானிகர் இந்த கருத்தை முன்வைத்துள்ளார். இலங்கை அரசாங்கம் புதுடில்லியுடன் கொண்டுள்ள தொடர்பை விட தமிழகத்துடன் மேற்கொள்ள வேண்டிய இராஜதந்திர உறவு முக்கியமானது என்று அவர் தெரிவித்துள்ளார். இலங்கை தமிழகத்தின் ஊடாக மத்திய அரசாங்கத்திடம் செல்வதாலேயே பல்வேறு பிரச்சினைகளில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# தி.மு.கவுக்கும் காங்கிரசுக்கும் இடையில் பாரிய உட்பூசல்கள்

இலங்கை தமிழர்களின் பிரச்சினையை மையமாக வைத்து திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் இந்திய ஆளும் கட்சியான காங்கிரசிற்கும் இடையில் உட்பூசல்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமிழர்களுக்கான தீர்வு, ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு இந்தியாவின் ஆதரவு மற்றும் தமிழக மீனவர்களின் விடயங்களை முன்வைத்து நாளை மறுதினம் வியாழக்கிழமை திராவிட முன்னேற்றக் கழகம் புதுடில்லியில் டெசோ மாநாட்டை நடத்தவுள்ளது.

இதற்கு அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக இந்திய எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா கட்சிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தி.மு.கவின் நாடாளுமன்ற குழுத் தலைவர் டீ.ஆர்.பாலு தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் தாம் பல்வேறு விடயங்கள் தொடர்பில் தொடர்ந்து தி.மு.கவின் உறுப்பினர்களை சந்தித்து வருவதாக பாரதீய ஜனதா கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருப்பதாக கூறப்படுகின்றது.

இந்த நிலையில் மத்திய அரசாங்கத்துக்கும் திராவிட முன்னேற்றக்கழகத்துக்கும் இடையில் இந்த விடயத்தில் உட்பூசல்கள் இடம்பெறுவதாகவும் இது தொடர்பில் காங்கிரஸின் உயர் மட்டத்தில் இருந்து கருணாநிதிக்கு அதிருப்தி வெளியிடப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-2)

# நாம் குழம்பவுமில்லை நம்மிடம் குழப்பமுமில்லை

## தமிழின உணர்வாளர்களுக்கு மாவை கருத்து




ஜெனீவா ஐ. நா முன்றலில் கவனயீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இளைஞனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா தலைமையிலான குழுவினர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

ஜெனீவா அலுவலகத்திற்கு முன்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் தமிழ் இன அழிப்பிற்கு சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் வகையில் இடம்பெறும் கவனயீர்ப்பு நிகழ்வில் இலங்கையிலிருந்து சென்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், பா. அரியநேந்திரன், சீ. யோகேஸ்வரன், சி.சிறிதரன் ஆகியோர் இலங்கையின் இன அழிப்பு, இனச்சுத்திகரிப்பை பிரதிபலிக்கும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள புகைப்படங்களைப் பார்வையிட்டனர்.

இதேவேளை இச் செயற்பாட்டை முன்னெடுத்து வரும் தமிழ் இன உணர்வாளனுடனும் கருத்துப் பரிமாறலிலும் ஈடுபட்டனர்.

அவ் உணர்வாளர் கூறுகையில், யார் தமிழன் ஆண்டாலும் எம் உயிரை தியாகம் செய்ய நாம் தயார். இந் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இளைஞனிடம் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மண்ணில் இருந்து நாம் மக்களுடன் உள்ளோம். உங்கள் பலம் என்றும் எமக்கு தேவை; சர்வதேசம் எம்மைச் சூழ்ந்துள்ளது.

இன்று சில செய்திகள் திரிபுபட்டு வருவதனால்தான் எம்மிடம் சில வேறுபாடு. இதனால் யாரும் குழம்பவும் இல்லை எம்மிடம் குழப்பமும் இல்லை எனக் குறிப்பிடுகிறார். (அ-2)





நெடுந்தீவு மேற்கு கரமத்தை முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவ நிகழ்வில் முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதராய் தேரில் ஆரோகணித்து வருவதையும் தேர் வீதியுலா வருவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க-இலங்கை உறவு முறிந்துபோனது ஏன்...?

அமெரிக்கா- இலங்கை உறவுகளுக்கு, போரின் போது இடம்பெற்ற குற்றங்களுக்கு பொறுப்புக்கூறும் விவகாரம்தான் பெரும் சிக்கலாக மாறியுள்ளது என்று, சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் பணிகளை முடித்துத் திரும்பிய அமெரிக்க தூதுவர் பற்றீசியா புரெனிஸ் முன்னர் குறிப்பிட்டதாக ஒரு விக்கிலீக்ஸ் தகவல் வெளியாகியுள்ளது. விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்கு வரும்வரை அமெரிக்க- இலங்கை உறவுகள் ஒன்றும் மோசமான கட்டத்தை அடைந்திருக்கவில்லை. மிகவும் நன்றாகவேதான் இருந்தது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்கு வந்தபோது அதற்காக மகிழ்ச்சி தெரிவித்த நாடுகளில் அமெரிக்காவும் ஒன்று. ஆனால், அதற்குப்பின்னர்தான் காட்சிகள் மாற ஆரம்பித்தன.

இந்த நான்கு ஆண்டுகளில் கீரியும் பாம்பும்போல இந்த நாடுகள் மாறிவிட்டன. அமெரிக்கா பல சமயங்களில் அதிகாரபூர்வமாக கருத்து வெளியிடும் போது, அடக்கி வாசித்துக் கொண்டாலும், இலங்கையின் அரசியல் தலைமைகள் ஒன்றும் அப்படி நாவை அடக்கிக் கொள்வதில்லை. அவ்வப்போது கிடைக்கின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் அமெரிக்காவை, அதன் நடவடிக்கைகளை தாராளமாகவே விமர்சிக்கின்றன.

போர் முடிவுக்கு வந்த காலகட்டத்தில்தான், கொழும்பில் தூதுவராகப் பணியாற்றிய றொபேட் ஓ பிளேக் தமது பணியை முடித்து திரும்ப வேண்டிய நிலையில் இருந்தார். அவர், போர் முடிவுக்கு வந்தவுடன் வெளியிட்ட ஒரு அறிக்கையில் மீறல்களுக்குப் பொறுப்புக் கூறுவதும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதும் இலங்கையின் நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்கு அவசியமானது என்று அவர் குறிப்பிட்டிருந்தார். இன்றுவரை இதுவே இலங்கை தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாடாக இருந்து வருகின்றது.

போர் இறுதிக்கட்டத்தை எட்டிய போதே, அதில் மோசமான மீறல்கள் இடம்பெறுவதை அமெரிக்கா அறிந்து கொண்டிருந்தது. ஆனால், அப்போது அதை வெளிப்படையாக எதிர்க்கவில்லை. போர் முடிவுக்கு வந்தவுடன் தான், பிளேக் அந்தப் பிரச்சினையைக் கிளப்பத் தொடங்கினார். அவர் கொழும்பில் பணியை முடித்தவுடன், வோஷிங்டன் திரும்பி, இராஜாங்கத் திணைக்களத்தில் வேறு எந்தப் பொறுப்பிலாவது நியமிக்கப்பட்டிருந்தால், சிலவேளைகளில் இலங்கை தொடர்பான அமெரிக்க நிலைப்பாடு இந்தளவுக்கு இறுக்கமானதாக இருந்திருக்காது.

அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் முற்கணிப்பிடும் ஆற்றல் பிளேக்கிடம் உள்ளது என்பதற்கு இரண்டு உதாரணங்கள் உள்ளன.

முதலாவது, ஏற்கனவே குறிப்பிட்டதுதான். அதாவது போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுதல்தான். இலங்கையுடனான நெருக்கத்தைத் தீர்மானிக்கும் விடயமாக இருக்கப் போகிறது என்ற கணிப்பு. அது போர் முடிந்துவிட்டதாக இலங்கை அரசினால் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டதும், அமெரிக்காவின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் அந்த விடயம் தெளிவாகவே கூறப்பட்டது.

அது அரசியல் ரீதியான பிளேக்கின் முற்கணிப்பு ஆற்றல்.

இரண்டாவது, 2007 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வன்னியின் மேற்குப் புறத்தில் மன்னாரில் இலங்கை இராணுவம் விடுதலைப்புலிகளுக்கு எதிரான தாக்குதல்களைத் தொடங்கிய போது, கொழும்பில் இருந்து இராஜாங்கத் திணைக்களத்துக்கு ஒரு செய்தியை அனுப்பியிருந்தார். இலங்கை இராணுவம் சிறியளவில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளத் தொடங்கியுள்ள இந்தத் தாக்குதல்கள், பாரிய போராக வெடிக்கும் என்றும், விடுதலைப்புலிகளை அழிவுக்குள் தள்ளும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.



சிறு சிறு குழுக்களாக இராணுவ அணிகள் விடுதலைப்புலிகள் மீது நடத்தும் தாக்குதல்கள், வி.புலிகளுக்கு நெருக்கடியாக அமையும் என்று மன்னார் களமுனையில் போர் தீவிர கட்டத்தை அடையும் முன்னரே பிளேக் எச்சரித்திருந்தார். அந்தச் செய்தி அனுப்பப்பட்ட காலம், விடுதலைப்புலிகள் அழிக்கப்படுவர் என்று எவருமே கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாத காலம்.

போர் முனையில் இலங்கை இராணுவம் தீவிரமான வெற்றிகளையும் பெறவில்லை. வி.புலிகளுக்கெதிரான போரின் மூலோபாயத்தை சரியாக இராணுவம் வடிவமைத்திருக்கவுமில்லை. வி.புலிகளுக்கெதிரான பிரதானமான போர் என்பது, வடக்கில் முகமாலையில் தான் வெடிக்கும் அல்லது ஓமந்தையில்தான் வெடிக்கும் என்று பரவலாக நம்பப்பட்டுக்கொண்டிருந்த காலம் அது. அப்போதே பிளேக், மன்னாரில் தொடங்கப்படும் சிறிய சிறிய தாக்குதல்கள் விடுதலைப் புலிகளை அழிவுக்குள் தள்ளும் பெரும் போராக வெடிக்கும் என்று எதிர்வு கூறும் வகையில் கணிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், போர் முடிவுக்கு வந்தப்பின்னர், கொழும்பில் பணியை முடித்துத் திரும்பிய பிளேக்கிற்கு மீண்டும் கொழும்பு விவகாரங்களை கையாளும் பதவியான, தெற்கு- மத்திய ஆசியப் பிராந்தியங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலர் பதவி கொடுக்கப்பட்டது. இது பிளேக்கின் கணிப்புகளுக்கு உட்பட்டதாக அமெரிக்க கொள்கை வகுக்கப்பட்டதற்கு இன்னும் வசதியாகிப் போனது. இந்த நிலையில் போர் நடந்த போதே பொதுமக்க்ளுக்கு பாரிய `அழிவுகள் ஏற்படுகின்றது என்பதை அமெரிக்கா அறியாதிருந்தது என்று எந்தவகையிலும் கருதமுடியாது. ஆனாலும், போரை நிறுத்தும் விடயத்தில், அமெரிக்காவினால் அவ்வளவு செல்வாக்குச் செலுத்த முடியாதிருந்தது. அதற்குக் காரணம் இந்தியாவின் முழுமையான ஆசீர்வாதம்.

அதேவேளை, போரை நிறுத்துவதற்கு அமெரிக்கா தனது முழுப் பலத்தையும் பயன்படுத்தியிருக்கவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கடந்த வாரம் கொழும்பு வந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் முக்கிய அங்கமான யு எஸ் எய்ட் மூத்த அதிகாரியான டெனிஸ் றோலின்ஸிடம் போரில் எத்தனை பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்ற மதிப்பீட்டை அமெரிக்கா செய்துள்ளதா? என்று கேள்வி எழுப்பியதற்கு அப்படி எந்த மதிப்பீடும் செய்யப்படவில்லை என்று பதிலளித்திருந்தார்.

போர்க்குற்றங்கள் இடம்பெற்றன என்பதை உறுதிப்படுத்தும் அமெரிக்கா, தோராயமாக ஒரு எண்ணிக்கையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கக் கூடும் என்று நிச்சயம் கணித்திருக்கும். அது இல்லாமல் போர் முடிவுக்கு வந்த கையுடன் அது ஒருபோதும் பொறுப்புக் கூறலை வலியுறுத்தியிருக்க வாய்ப்புகளில்லை.

இறுதிப்போர் இடம்பெற்ற பகுதிகளில் ஐ.நாவின் செய்மதியும் படம்பிடித்தது. அமெரிக்காவின் செய்மதியும் படம்பிடித்தது. இவற்றின் மூலம் அமெரிக்காவுக்கு நம்பகமான பல தரவுகள் கிடைத்திருக்கக் கூடும். அண்மையில், மேஜர் ஜெனரல் கிரிசாந்த டி சில்வா தலைமையிலான இராணுவ நீதிமன்றம், போரின் போது பொதுமக்கள் மீது, இராணுவம் ஆட்லறித் தாக்குதலை நடத்தவில்லை என்று தமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. ஆனால், ஐ.நா.வினது, அமெரிக்காவினது செய்மதிகள் இராணுவத்தினது ஆட்லறி நிலைகளையும், இவை இலக்கு வைத்த இடங்களையும் நிச்சயம் பதிவு செய்திருக்க வாய்ப்புகள் உள்ளன.

எனவே, பொறுப்புக்கூறலை அமெரிக்கா, சர்வதேச சமூகத்தின் கையில் கொடுக்க முடிவு செய்துவிட்டால், அரசாங்கம் திடுக்கிடும் பல ஆதாரங்கள் வெளிவரக்கூடும். அது பாலச்சந்திரன் பற்றிய ஒளிப்படங்கள் ஏற்படுத்திய அதிர்ச்சியைவிட இன்னும் அதிகமான பேரதிர்ச்சிகளையும் கொடுக்கலாம்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் சீரான நிலையில் இருந்த இலங்கை அமெரிக்க உறவுகள் இப்போது, நெருக்கடி நிலையை அடைந்திருப்பதற்கு பற்றீசியா புரெனிஸ் குறிப்பிட்ட காரணம் சரியானது.

அதாவது, பொறுப்புக்கூறல்தான், அமெரிக்க- இலங்கை உறவுகளில் விரிசலை ஏற்படுத்தியுள்ளது. இல்லாவிட்டால் போர்நிறுத்த காலத்தில் இலங்கைப் படைகளை மறுசீரமைத்தல் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு நவீனமயப்படுத்துவதற்கு உதவிய அமெரிக்கா இவ்வாறு எதிர்த்து நிற்க வேண்டியதில்லை. அதைவிட, மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம், 2007 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க இணங்கியதன் விளைவாக 2008 இல் விடுதலைப்புலிகளின் நான்கு ஆயுதக் கப்பல்கள் பற்றிய தகவல்களை அமெரிக்கா வழங்கியது. அமெரிக்கா கொடுத்த தகவல்களின் அடிப்படையில்தான், அவற்றை இலங்கைக் கடற்படை `தாக்கி அழித்தது. விடுதலைப்புலிகளை அழிப்பதிலும், அவர்களுக்கு ஆயுத வளங்களை கிடைக்காமல் தடுப்பதிலும் அக்கறை காட்டி இலங்கையுடன் நெருக்கமாக நின்ற அமெரிக்கா இப்போது தொலைவில் நிற்கிறது.

இதற்கு பற்றீசியா குறிப்பிட்ட பொறுப்புக்கூறல் மட்டும்தான் காரணமா? அதற்கு அப்பாலும் வேறு காரணங்கள் உள்ளனவா? என்ற கேள்வி இருக்கத்தான் செய்கிறது.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளியவளை மத்தி காணியில் இராணுவ முகாம் அமைக்க முயற்சி

## மக்களை வெளியேற கோருகிறது இராணுவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளியவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட முள்ளியவளை மத்தி பிரதேசத்திலுள்ள மக்கள் குடியிருப்பு நிலங்களில் இராணுவ முகாம் அமைக்கவுள்ளதாகவும் அவர்கள் குடியிருக்கும் பிரதேசம் அரசிற்கு சொந்தமான காணிகள் எனவும் கூறி அப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள குடிசைகளை அகற்றுமாறு படையினர் கூறி வருவதாக அப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் குறித்த பகுதிக்கு வந்த படையினர் இப் பிரதேசத்தில் உள்ள 5 ஏக்கர் நிலப்பரப்பு அரசுடைமை எனவும் அப்பிரதேசத்தை தவிர்த்து குடிசைகளை அமைத்து குடியிருக்குமாறும் அறிவுறுத்தியுள்ளனர்.

இரு சீருடை தரித்த படையினரும் சாதாரண உடையில் வந்த படையினர் இருவருமே மேற்குறித்த பகுதி 552 ஆவது படையணியின் படை முகாம் அமைப்பதற்கு ஒதுக்கப்பபட்டதால் அப்பிரதேசத்தில் தற்போது காணப்படும் குடியிருப்புக்களை அகற்றுமாறு தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் குடியிருப்பை அண்டி பல கிலோமீற்றர் அளவில் காணிகள் காணப்படும் போதும் குறித்த பகுதியிலேயே இராணுவமுகாம் அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமையால் மக்கள் விரக்தியடைந்துள்ளனர்.

மேலும் காணிகள் தேவையெனில் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்வதைவிடுத்து மக்களின் குடியிருப்புக்கள் அமைந்துள்ள இடத்தில் முகாம்களை அமைக்கப்போவதாக மக்களிடம் அறிவுறுத்துவதால் மக்கள் மேலும் அச்சமடைந்துள்ளனர்.

யுத்தத்திற்குள் மிகவும் ஒடுக்கப்பட்டு அனைத்தையும் இழந்து தமது சொந்தக் காணிகளுக்குள் குடியேறியுள்ள மக்கள் இக் காணிகளிலிருந்து தாம் விரட்டப்படுவோமானால் குடியேற வேறு நிலம் இல்லை என்றதோடு தாம் பல ஆண்டுகளாய் குடியிருந்த காணிகளை எவ்வாறு விட்டுச் செல்வது என ஏக்கம் கொண்டுள்ளனர். (அ-5-267)

# ஆளும் கட்சிக்குள் முரண்பாடுகள்

## மேயர் முஸம்மில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆளும் கட்சிக்குள் உள்முரண்பாடுகள் வெடித்துள்ளதாக கொழும்பு மாநகரசபை மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஆளும் கட்சிக்குள் முரண்பாடுகள் உக்கிரமடைந்துள்ளன. அண்மையில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆளும் கட்சியை சாடியிருந்தார்.

ஐக்கிய மக்களின் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சி வலுவிழக்கத் தொடங்கியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மரண அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகவும் இவ்வாறான அச்சுறுத்தல்களைக் கண்டுமக்கள்சேவையை இடைநிறுத்தப் போவதில்லை எனவும் மைத்திரிபால சிறிசேன அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

எவ்வாறான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் மக்கள் சேவை தொடரும் என அவர் தெரிவித்திருந்தார். (அ-2)

# வர்த்தக நிலையங்கள் 11 ஆம் திகதி மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

இந்துக்களின் சிவராத்தி தினம் எதிர்வரும் 10 ஆம் திகதி அனுசரிக்கப்படவுள்ள நிலையில் மறுநாள் திங்கட்கிழமை நெல்லியடி வர்த்தக சங்கத்திற்கு உட்பட்ட வர்த்த நிலையங்கள் அனைத்தும் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5-19)

# சுகாதார மற்றும் கல்வித்துறைகளை சீர்குலைக்க சிலர் முயற்சி- பசில்

சுகாதாரம் மற்றும் கல்வித்துறைகளை சீர்குலைக்க சிலர் முயற்சிப்பதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கடந்த கால பத்திரிகைகளில் சுகாதாரம் மற்றும் கல்வித்துறை தொடர்பில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. கல்வித்துறையையும் சுகாதாரத் துறையையும் இழிவுபடுத்தும் வகையில் செய்திகள் வெளியிடப்படுகின்றன.

சுகாதாரம் மற்றும் கல்வித்துறையை பாதுகாக்க அரசாங்கம் தொடர்ச்சியாக முயற்சி எடுத்து வருகின்றது. குறித்த இரண்டு துறைகளையும் மேம்படுத்த வரவு செலவுத்திட்டத்தில் பாரியளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# காணி உரிமையாளரை இனம் காண்பிக்கவும்

(அரியாலை)

அரியாலை பகுதியில் நாயன்மார்கட்டு முறிவு, நெரிவு வைத்தியசாலைக்கென வழங்கப்பட்ட காணியினை அவ்வைத்தியசாலைக்கு நம்பிக்கை சொத்தாக ஆவணம் வழங்குவதற்கும் பொது தேவைக்காக பயன்படுத்துவதற்கும் அக்காணியை சுவீகரிக்க வேண்டியுள்ளது.

அதன் பொருட்டு அக்காணிக்கான உரிமையாளர்களை அடையாளம் காண வேண்டியுள்ளது. எனவே, இக்காணியின் உரிமையாளர்கள், வாரிசுகள், உறவினர்கள் யாராவது இருப்பின் நல்லூர் பிரதேச செயலகத்திற்கு கடமை நேரத்தில் சமுகமளிக்குமாறு நல்லூர் பிரதேச செயலாளர் பி.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (அ)

# இலங்கையை இந்தியா ஆதரிக்காது-கருணாரட்ன

(கொழும்பு)

மனித உரிமைப் பேரவை மாநாட்டில் இந்தியா, இலங்கைக்கு ஆதரவளிக்காது என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா தலைமையிலான நாடுகள் இலங்கைக்கு எதிராக முன்வைக்கவுள்ள தீர்மானத்திற்கு ஆதரவாகவே இந்தியா வாக்களிக்கும். இந்த விடயத்தில் இலங்கை இந்தியாவின் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியாது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைப் பரிந்துரைகள் உரிய முறையில் அமுல்படுத்தப்பட்டிருந்தால் இவ்வாறான நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்காது.

கடந்த ஆண்டு மனித உரிமைப் பேரவை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இலங்கை மதிப்பளிக்கத் தவறியுள்ளது.

இதன் காரணமாக இம்முறையும் உலக நாடுகள் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றுகின்றன என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# உரிமை கோரப்படாத சடலங்களை பொறுப்பேற்க கோரிக்கை

யாழ்.போதனா வைத்தியசாலையில் உரிமை கோரப்படாத சடலங்கள் மூன்று உள்ளதாக பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அதன் விபரங்கள் வருமாறு,

தர்மபுரம் கிளிநொச்சியை சேர்ந்த எஸ்.இராஜகோபால் (வயது 58) மற்றும் வர்ணகுலசூரியர், சபாபதிப்பிள்ளை வீதி சுன்னாகத்தை சேர்ந்த அன்ரனி பெனடிக்ற (வயது 66) ஆகிய மூன்று சடலங்கள் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. எனவே, அச்சடலங்களை உரிமையாளர் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (அ)




★ 1770 - பாஸ்டன் படுகொலை: பாஸ்டனில் அமெரிக்கர்களுக்கும் பிரித்தானியப் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட கலவரத்தை அடுத்து ஐந்து அமெரிக்கர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★ 1793 - பிரெஞ்சுப படைகள் ஆஸ்திரியாவினால் தோற்கடிக்கப்பட்டன.

★ 1824 - பிரித்தானியர் பர்மாவின் மீது போர் தொடுத்தனர்.

★ 1940 - சோவியத் உயர்பீடம் 40ஆயிரத்து 100 போலந்துப் பிரஜைகளுக்கு மரண தண்டனை அளித்து கையொப்பமிட்டது.

★ 1964 - இலங்கையில் அவசரகாலச் சட்டம் அமுலாகியது.

★ 2008 - இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன் படுகொலை செய்யப்பட்டார்.

### பிறப்புகள்

★ 1871 - ரோசா லக்சம்பேர்க், மார்க்சிஸ மெய்யியலாளர் (இ.1919)

★ 1886 - டொங் பிவு, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய உறுப்பினர் (இ.1975)

★ 1913 - கங்குபாய், இந்துஸ்தானி இசைப் பாடகி (இ.2009)

★ 1934 - டானியேல் கானிமென், நோபல் பரிசு பெற்ற இஸ்ரேலியர்

★ 1973 - த.ஜெயசீலன், ஈழத்து எழுத்தாளர்


### இறப்புகள்

★ 1878 - ரி.சின்னத்தம்பி, உடுப்பிட்டியைச் சேர்ந்த ஈழத்துப் புலவர்

★ 1953 - ஜோசப் ஸ்டாலின், சோவியத் தலைவர் (பி.1878)

★ 1966 - அன்னா அக்மதோவா, ரஷ்யக் கவிஞர் (பி.1889)

### ரோசா லக்சம்பேர்க்



ரோசா லக்சம்பேர்க் இவர் 1870 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ஆம் திகதி போலந்தில் பிறந்த ஒரு ஜேர்மனிய மார்க்சிஸவாதியும் சோசலிச மெய்யியலாளரும் ஒரு புரட்சியாளரும் ஆவார்.

செங்கொடி என்ற இதழை ஆரம்பித்தவர் இவரே. முதலாம் உலகப் போரில் ஜேர்மனி பங்குபற்றியதை ஜேர்மனி சமூக மக்களாட்சிக் கட்சி ஆதரித்ததைத் தொடர்ந்து இவர் மற்றொரு மார்க்சிஸவாதியான கார்ல் லீப்னெக்ட்டுடன் இணைந்து புரட்சிகர ஸ்பார்டாசிஸ்ட் முன்னணி என்ற அமைப்பை உருவாக்கினார்.

ஸ்பார்டாசிஸ்ட் லீக் தலைமையில் ஜனவரி 1919 இல் நடத்தப்பட்ட பேர்லின் புரட்சி தோல்வியில் முடிந்தது. ரோசா லக்சம்பேர்கின் ஆதரவினாலான இப்புரட்சி ஃப்ரீகோர்ப்ஸ் என்ற வலதுசாரி துணை இராணுவக்குழுவினரால் நசுக்கப்பட்டது. 1919 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி துணை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட லக்சம்பேர்க் ஒட்டோ ரூஞ்ச் என்பவனால் துப்பாக்கியால் அடித்துக் காயப்படுத்தப்பட்டு லெப் ஹெர்மன் சூக்கோன் என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரது உடல் பெர்லினில் லாண்ட்வெர் கால்வாயில் எறியப்பட்டது. கார்ல் லீப்னெக்ட் சுட்டுக் கொல்லப்பட்டு பெயர் குறிப்பிடப்படாமல் சவச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. இதனை அடுத்து ஜேர்மனியப் புரட்சி முடிவுக்கு வந்தது. நான்கு மாதங்களுக்குப் பின்னர் 1919 அம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி லக்சம்பேர்கின் உடல் கண்டுபிடிக்கப்பட்டு பெர்லின் மருத்துவமனையில் அடையாளம் காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் வெளிநாட்டுக்கு செல்ல கல்வி அமைச்சின் அனுமதி பெற வேண்டும்

## கல்வியமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

**வெளிநாட்டு பயிற்சிகளுக்கும் கலந்துரையாடல்களுக்கும் கல்வி அமைச்சின் அனுமதியின்றி பாடசாலை மாணவர்களை அழைத்துச் செல்ல முடியாதென கல்வியமைச்சு அறிவித்துள்ளது.**

இதற்கமைய பாடசாலைகளில் இடம் பெறும் இணைப் பாடவிதான செயற்பாடுகளான விளையாட்டுப் போட்டிகள், நடனம், சங்கீதம், சித்திரம் மற்றும் ஏனைய பயிற்சிகளுக்கு வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்வதாக இருந்தால் கல்வி அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வியமைச்சினால் ஏற்கனவே வெளியிடப்பட்ட 2003/20 ஆம் இலக்க சுற்றறிக்கையை மீளவும் வலியுறுத்தி சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கல்வியமைச்சின் செயலாளர் கோத்தபாய ஜயரட்னவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

கல்வி அமைச்சின் எழுத்துமூல அனுமதியின்றி வெளிநாடுகளுக்கு பாடசாலை மாணவர்களை அனுப்பும் பாடசாலை அதிபர்களுக்கெதிராக மிகக் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்ட சங்கங்கள் அல்லது இயக்கங்களால் பாடசாலை பிள்ளைகளை வெளிநாட்டு போட்டிகளில் பங்கு பற்றுவதற்கு அனுப்பும் போது அவர்களுக்கு செலவிடப்படும் தொகையை அச்சங்கங்கள் பொறுப்பேற்க வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் மாணவர்களிடம் பணம் அறவிடக்கூடாது.

பாடசாலை மட்ட சங்கங்களினால் மாணவர்களை வெளிநாட்டிற்கு அனுப்ப வேண்டிய தேவை இருப்பின் குறித்த போட்டியில் நடப்பு ஆண்டில் அல்லது முன்னைய ஆண்டில் வயதுக்குழுக்களில் தேசிய மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இதற்கான நிதியை பாடசாலை திரட்டும் முறை பற்றி அறிவிக்க வேண்டும். இதற்கென மாணவர்களிடம் நிதி அறவிடக்கூடாது. வெளிநாட்டு பயிற்சி, பங்குபற்றலுக்கென குறித்த நாட்டினால் அழைப்பு விடுக்கப்பட்ட கடிதம், பயணத்தை ஒழுங்கு செய்கின்ற சங்கம் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டமையை உறுதிப்படுத்தும் கடிதம் என்பன கல்வி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இவை தவிர வெளிநாட்டில் பயிற்சிக்கென செல்லும் மாணவர் பற்றிய மருத்துவ அறிக்கையை பெற்றுக் கொள்வதுடன் அம் மருத்துவ அறிக்கையை விளையாட்டுத் துறை அமைச்சின் மருத்துவ பணிப்பாளர் அங்கீகரிக்க வேண்டும்.

இவ்வாறான விதிமுறைகளுக்கு புறம்பாக செயற்படும் அதிபர், ஆசிரியர்களுக்கெதிராக மிகக் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

# 2012 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின்படி தேர்தல்

2012 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் அடிப்படையில் வடக்கில் தேர்தல் நடத்தப்படும் என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எந்தவொரு தேர்தலை நடத்தவும் மூன்று மாத கால அவகாசமே தமக்குத் தேவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.


பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் தேர்தலை நடத்துவதில் சிக்கல் கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் வடக்கு மாகாணதத்தில் தேர்தல் நடைபெறும் என ஜனாதிபதி அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும், வட மாகாணசபைத் தேர்தல்கள் எப்போது நடைபெறும் என்பது குறித்த உத்தியோகபூர்வத் தகவல்கள் இது வரையில் வெளியிடப்படவில்லை. (அ-2)

# சமுர்த்தி திட்டத்தின் மூலம் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுப்பு

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு



போதைப் பொருள் பாவனையை முற்றாக ஒழித்து மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார். இம்மாவட்டத்தில் போதைப் பொருள் மற்றும் புகைத்தலை ஒழிக்க வேண்டுமென்ற நோக்குடன் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கடந்த 2012 ஆம் ஆண்டு எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டு முன்னெடுக்கப்பட்ட கொடித்தின நிதி சேகரிப்பிற்கு மக்கள் பெருமளவு ஆதரவை வழங்கியிருந்தனர்.

இந்நிதி எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அதை நிறைவேற்றும் வகையில் போதைப்பொருள் பாவனையை ஒழித்து மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். சமுர்த்தி திட்டத்தின் ஊடாக இம் மாவட்டத்தில் நாம் பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும் வகையில் கிராமங்கள் தோறும் அவற்றின் தேவைகளை இனம்கண்டு முன்னுரிமையடிப்படையில் நிறைவேற்றி வருகின்றோம்.

மேலும் புகைத்தல் மற்றும் போதைப் பொருள் பாவனைக்கு எதிராக நாடளாவிய ரீதியில் 2012 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட நிதி சேகரிப்பில் யாழ்.மாவட்டம் முதலிடம் பெற்றிருந்தமையும் யாழ்.மாவட்டத்தில் 52 ஆயிரத்திற்கும் அதிகமானோர் சமுர்த்தி பய னாளிகளாக பயனடைந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் பிரதேச செயலகங்கள் ஊடாக குறித்த தினத்திற்கான நிதி சேகரிப்பில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்ட பிரதேச செயலகங்களுக்கும் பல்வேறு செயற்றிட்டங்களுக்கு பங்களிப்பு வழங்கிய உத்தியோகத்தர்களுக்கும் இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நினைவுப் பரிசில்கள் வழங்கி கௌரவித்தார். யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் கே.மகேஸ்வரன், சமுர்த்தி இணைப்பாளர் ரகுநாதன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ-6-19)

# ஜெனீவாவை நோட்டமிட்டு விட்டு நாடு திரும்பினார்- சமரசிங்க

## மீண்டும் ஜெனீவா செல்வார்

ஜெனீவாவில் நடைபெறும் மனித உரிமைப் பேரவையின் 22 ஆவது மாநாட்டில் பங்கேற்பதற்காக சென்றிருந்த மனித உரிமை தொடர்பான ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி அமைச்சர் மஹிந்த சமரசிங்க நேற்று முன் தினம் நாடு திரும்பியதாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு தெரிவித்தது.

மனித உரிமை பேரவை மாநாட்டில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான குழு பங்கேற்றது.

அமைச்சர் சமரசிங்க தலைமையிலான குழு ஜெனீவாவில் வைத்து ஏனைய நாட்டு பிரதிநிதிகளுடன் சந்தித்து இலங்கைக்கு எதிராக கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ள பிரேரணை தொடர்பில் பேச்சு நடத்தியதாகவும் அமைச்சு உயரதிகாரி ஒருவர் கூறினார். அதற்கு எதிராக வாக்களிக்குமாறு அவர் கோரியுள்ளார்.


அமைச்சருடன் ஜெனீவா சென்றுள்ள இலங்கைக்குழுவினர் தொடர்ந்து அங்கு தங்கியுள்ளதோடு அமைச்சர் சமரசிங்க அடுத்த வாரம் மீண்டும் ஜெனீவா செல்ல உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.


இங்கு ஒருவாரம் தங்கியிருக்கும் அமைச்சர் இலங்கைக்கெதிராக அமெரிக்கா கொண்டு வர உள்ள பிரேரணைக்கு முகம் கொடுப்பது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் அதிகாரிகளுடன் பேசவுள்ளதாகவும் தெரியவருகிறது. (அ-2)

# கொலைகள் தொடர்பில் விசாரணை வேண்டும்

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு

படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இளைய புதல்வன் பாலச்சந்திரன் உட்பட கொலையுண்ட எமது மக்கள் அனைவரினது தொடர்பிலும் நீதி விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி கோரிக்கை விடுத்துள்ளார். பாலகன் பாலச்சந்திரன் முதுகில் அல்லாமல் நெஞ்சிலே குண்டு பாய்ந்த அடையாளத்தை கண்டவுடன் அதிர்ந்து போனேன். என்னை அறியாமலேயே கண்ணீர் சிந்தி விட்டேன் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)





மு/விசுவமடு மகா வித்தியாலயத்தில் பாடசாலை மட்ட இல்லங்களுக்கிடையிலான தமிழ்த் தினப்போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முல்லை. வலய தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பீதாம்பரம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட பாண்டியன் இல்லத்திற்கு வெற்றிக் கேடயத்தைப் வழங்கி வைப்பதைப் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# BATTLE OF THE NORTH

வடக்கின் மாபெரும் போர் என வர்ணிக் கப்படுவது யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியாகும்.

இலங்கையிலே மிகவும் பிரபல்யமான நூற்றாண்டைக் கடந்து கிரிக்கெட் ரசிகர்களால் கொண்டாடப்படும் ஒரு விழாவாகவே இவ்வடக்கின் மாபெரும் போர் நடத்தப்படுகின்றது.

இலங்கையில் மட்டுமல்லாது வெளிநாடுகளில் கூட இக்கிரிக்கெட் போருக்கு ரசிகர்கள் உண்டு. ஒவ்வொரு வருடமும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்கள், இரு பாடசாலை பழைய மாணவர்கள், கிரிக்கெட் ரசிகர்கள், நலன்விரும்பிகள் என அனைவராலும் இக்கிரிக்கெட் போர் ஒரு கொண்டாட்டமாகவே கொண்டாடப்படுவது வழமை.

இம்மாதம் 7,8,9 ஆம் திகதிகளில் வடக்கின் மாபெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்குமிடையிலான 107 ஆவது மாபெரும் கிரிக்கெட்போட்டி இரு பாடசாலை ரசிகர்கள் மத்தியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இக்கிரிக்கெட் போரானது 1904 ஆம் ஆண்டு முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து 107 ஆவது வருடமாக இரு பாடசாலை சமூகத்தினராலும் பல சிரமங்களின் மத்தியில் ஒரு விழாவாக இம்முறையும் நடத்தப்படுகின்றது.

100 வருடங்களுக்கு மேலாக இம்மாபெரும் கிரிக்கெட் போர் தொடர்ந்து நடத்தப்படுகின்றது என்றால் இக்கிரிக்கெட் போட்டிக்கு ரசிகர்கள் தொடர்ந்து கொடுக்கின்ற ஆதரவே என்று கூறமுடியும்.

இரு பாடசாலை சமூகத்தினரால் விளையாட்டினை ஊக்கப்படுத்த நட்புரீதியாக இக்கிரிக்கெட் போட்டி ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் இப்போட்டியானது தற்பொழுது இலங்கையில் பிரபல்யமடைந்தது மட்டுமல்லாது வெளிநாடுகளில் ரசிகர்கள் உள்ளார்கள் என்ற அளவிற்கு பிரபல்யமான ஒரு கிரிக்கெட் போட்டியாகும்.

வடக்கின் மாபெரும் போர் என அனைத்துக் கிரிக்கெட் ரசிகர்களாலும் வர்ணிக்கும் அளவில் இக்கிரிக்கெட்போட்டி பிரபல்யமான ஒன்றாகும். இம்முறை நடத்தப்படுவது 107 ஆவது வடக்கின் மாபெரும் கிரிக்கெட் போராகும்.

இதுவரை காலமும் நடத்தப்பட்ட போட்டியில் மொத்தமாக யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 33 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 27 போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளது. 38 போட்டிகள் சமனிலையில் முடிபடைந்துள்ளது. 7 போட்டிகளில் முடிவு பெறப்படவில்லை. ஒரு போட்டி கைவிடப்பட்டது.

■ கணேசமூர்த்தி மதீசன்

## சதம் கடந்தவர்கள்

| ஆண்டு | பெயர் | ஓட்டங்கள் | கல்லூரி |
|---|---|---|---|
| 1990 | எஸ்.சுரேன்குமார் | 145 | சென்.ஜோன்ஸ் |
| 1992 | இ.ரகுதாஸ் | 143 | மத்திய கல்லூரி |
| 1982 | பி.பிரகலாதன் | 125 | மத்திய கல்லூரி |
| 2005 | ஏ.மயூரதன் | 122 | சென்.ஜோன்ஸ் |
| 1947 | ரி.கதிர்காமர் | 113 | சென்.ஜோன்ஸ் |
| 1922 | ஆர். வேக்மீஸ்ரர் | 113 | சென்.ஜோன்ஸ் |
| 1955 | ஆர்.கே.வி. பிரேமச்சந்திரா | 110* | மத்திய கல்லூரி |
| 1937 | ஆர்.ஆர்.ஸ்கௌட் | 106 | சென்.ஜோன்ஸ் |
| 1999 | பி.கேதீசன் | 106 | மத்திய கல்லூரி |
| 1921 | சி.ஏ.டி சேனநாயக்கா | 104 | சென்.ஜோன்ஸ் |
| 1945 | ஏ.ராமலிங்கம் | 103 | மத்திய கல்லூரி |
| 1978 | டி.எம்.ரட்ணராஜ் | 102 | சென்.ஜோன்ஸ் |
| 1981 | எஸ்.சீவநாயகம் | 102* | சென்.ஜோன்ஸ் |
| 1921 | ஏ.பி.செல்வரதன் | 101 | சென்.ஜோன்ஸ் |
| 1993 | கே.சுரேஸ் | 101* | மத்திய கல்லூரி |
| 1995 | எஸ்.பி. நிரோசன் | 101* | சென்.ஜோன்ஸ் |
| 1999 | கே.பிரகாசன் | 100 | சென்.ஜோன்ஸ் |
| 1971 | ரி.ரி.மகேந்திரன் | 100* | மத்திய கல்லூரி |

## அணியின் அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை

| ஆண்டு | கல்லூரி | ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1993 | மத்திய கல்லூரி | 354- 9 விக்கெட் |
| 1992 | மத்திய கல்லூரி | 344 |
| 1999 | சென்.ஜோன்ஸ் | 326-6 விக்கெட் |
| 1990 | சென்.ஜோன்ஸ் | 311-5 விக்கெட் |
| 1982 | மத்திய கல்லூரி | 309-5 விக்கெட் |
| 1928 | சென்.ஜோன்ஸ் | 303-9 விக்கெட் |
| 2008 | மத்திய கல்லூரி | 301-8 விக்கெட் |




## சிறந்த விக்கெட் பெறுபேறுகள்

| ஆண்டு | பெயர் | விக்கெட் | கல்லூரி |
|---|---|---|---|
| 1951 | வி.சண்முகம் | 9-26 | மத்திய கல்லூரி |
| 1950 | இ.ஜி.தேவநாயகம் | 9-33 | சென்.ஜோன்ஸ் |
| 1926 | கே.நாகலிங்கம் | 8-18 | சென்.ஜோன்ஸ் |
| 1960 | ஏ.எல். சௌமேந்தர் | 8-18 | சென்.ஜோன்ஸ் |
| 1960 | ஏ.பி.சிகராஜசிங்கம் | 8-22 | மத்திய கல்லூரி |
| 1909 | கே.சொர்ணலிங்கம் | 8-32 | சென்.ஜோன்ஸ் |

## சிறந்த இணைப்பாட்டப் பதிவு

- 1999 ஆம் ஆண்டு ஏ.ரி. கௌரிபாலன் மற்றும் கே.பிரகாசன் 200 ஓட்டங்கள் முதலாவது இன்னிங்ஸ் 4 ஆவது விக்கெட்டுக்காக
- 2006ஆம் ஆண்டு ரி.நிரூபன் மற்றும் ஜி.சஞ்சீவன் 181 ஓட்டங்கள் முதலாவது இன்னிங்ஸ் 7 ஆவது விக்கெட்டுக்காக
- 2001ஆம் ஆண்டு எஸ்.ராஜாராம் மற்றும் பி.லவேந்திரா 135 ஓட்டங்கள் முதலாவது இன்னிங்ஸ் 3 ஆவது விக்கெட்டுக்காக
- 1993ஆம் ஏ.ஆகாஷ் மற்றும் கே. பிரகாஸ் 130 ஓட்டங்கள் முதலாவது இன்னிங்ஸ் 3 ஆவது விக்கெட்டுக்காக

# வடக்கின் மாபெரும் போர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷியாக்கள் மீது குண்டுத்தாக்குதல்; குழந்தைகள் உட்பட 48 பேர் உயிரிழப்பு!

## பதற்றத்தில் உறைகிறது கராச்சி

**பாகிஸ்தானின் சிந்து மாகாண தலைநகர் கராச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பயங்கர குண்டுவீச்சு தாக்குதலில் 48 பேர் பலியாகியதோடு 140 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**




பாகிஸ்தானில் வசிக்கும் ஷியா பிரிவினரை குறிவைத்து சமீப காலமாக கொடூர தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கடந்த ஒரு வாரமாக ஷியா பிரிவினர் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல்கள் ஓரளவுக்கு கட்டுக்குள் இருந்த நிலையில் கராச்சியில் ஷியா மக்கள் அதிகமாக வசிக்கும் குடியிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட வெடிகுண்டு தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட 48 பேர் உடல் சிதறிப் பலியாகினர்.மேலும் 140 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று மாலை 7 மணியளவில் கராச்சி நகரில் உள்ள அப்பாஸ் டவுன் பகுதியில் ஷியா பிரிவினர் தொழுகை நடத்திய மசூதி அருகே இந்த குண்டுத்தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இத்தாக்குதலில் சுமார் 150 கிலோ வெடிமருந்துகள் மற்றும் பால் பேரிங்கொண்டு தயாரிக்கப்பட்ட குண்டு பாவிக்கப்பட்டதாகவும் இக்குண்டு வெடித்த ஓசை 10 கிலோமீற்றர் தூரம் வரை எதிரொலித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குண்டுவெடிப்பு நிகழ்ந்த இடத்தில் உள்ள இக்ரா டவர்ஸ், ராபியா பிளவர் சிட்டி ஆகிய அடுக்குமாடி கட்டடங்களின் இரண்டு மாடி பகுதிகள் இடிந்து விழுந்ததோடு பல கடைகள் மற்றும் கார்கள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த இயக்கமும் பொறுப்பேற்றுக்கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் மக்கள் தொகையில் 20 சதவீதமாக இருக்கும் ஷியா பிரிவினர் மீது அவ்வப்போது போராளிகள் நடத்திய தாக்குதல் சம்பவங்களில் கடந்த ஆண்டில் மட்டும் சுமார் 2 ஆயிரத்து 300 பேர் பலியாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள குவெட்டா நகரில் ஷியா பிரிவினர் மீது நடத்தப்பட்ட தொடர் தாக்குதல்களில் சுமார் 200 பேர் கொல்லப்பட்டதை தொடர்ந்து இந்தப் படுகொலைக்கு எதிர்ப்பு தெரிவித்த அப்பகுதி மக்கள் தாக்குதலில் இறந்தவர்களின் உடல்களை புதைக்க மறுத்து போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து தாக்குதல்களை முறியடித்து ஷியா மக்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்க அரசு முன் வரவேண்டும் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து கடந்த வாரம் பாகிஸ்தான் விமானப் படை நடத்திய தேடுதல்வேட்டை மற்றும் தாக்குதல்களில் பல்வேறு போராளி முகாம்கள் அழிக்கப்பட்டன. இந் நிலையிலேயே மீண்டும் இத்தாக்குதல் ஷியாக்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ-5)



வங்கதேச தலைநகர் தாகாவுக்கு விஜயமொன்றை மேற்கொண்ட இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை அந்நாட்டு ஜனாதிபதி ஜில்லூர் ரஹ்மான் நேரில் வந்து சிவப்பு கம்பள வரவேற்பு அளிப்பதைப் படத்தில் காணலாம்.

# சீனாவில் நிலநடுக்கம்; 3, 200 வீடுகள் தரைமட்டம்

சீனாவின் யுனான் மாகாணத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 5.5 அலகுகளாகப் பதிவாகியுள்ளது.

இந்நிலநடுக்கத்தால் 30 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதுடன் 3 ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜிஸான் நகர்ப் பகுதியில் 9 அடி ஆழத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாகவும் குறிப்பாக மியன்மாரின் எல்லையில் உள்ள சீனப் பகுதியான எரியுவான் மாவட்டத்தில் கடும் சேதம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இங்குள்ள 3 ஆயிரத்து 200 வீடுகள் சேதமடைந்தன. இதில் 700 வீடுகள் முற்றிலுமாக இடிந்து விழுந்துள்ளது.

இதேவேளை, இப்பகுதியைச் சேர்ந்த 55 ஆயிரம் பேர் உணவு, குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்காமல் தவிக்கின்றனர்.

இந்த நிலநடுக்கத்துக்குப் பின் தொடர்ந்து 34 முறை பின்னதிர்வுகள் ஏற்பட்டன. இந்நிலையில் யுனான் மாகாண அரசு அதிகாரிகள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்காக 6 ஆயிரம் கூடாரங்கள் அமைப்பதற்கும் உணவு உடைகளை வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-5)

# வைத்தியசாலையில் எலிசபெத் மகாராணி

பிரித்தானிய மகாராணி எலிசபெத் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

ராணி இரண்டாம் எலிசபெத் (வயது 87) இவருக்கு கடந்த வெள்ளியன்று திடீர் வயிற்றுவலி ஏற்பட்டதையடுத்து உடல் சோர்வடைந்தார். பின்னர் லண்டனில் உள்ள மன்னர் ஏழாம் எட்வேட் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவர் வாயுக்கோளாறினால் அவதியுற்று வருவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். தற்போது தொடர்ந்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (அ-5)

# பாடசாலை வாகன விபத்தில் 12 குழந்தைகள் பரிதாப மரணம்

(ஜலந்தர்)

பஞ்சாப் மாநிலம் ஜலந்தர் மாவட்டத்தில் பாடசாலை வாகனமும் செங்கல் ஏற்றி வந்த பாரவூர்தியும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளான கோர விபத்தில் வாகன சாரதி மற்றும் 12 குழந்தைகள் உடல் நசுங்கி பலியாகினர்.

ஜலந்தர் மாவட்டத்தில் அகால் அகடமியில் படித்து வந்த பாடசாலை குழந்தைகள் 30 பேர் நேற்று காலை பாடசாலை வாகனங்களில் பயணித்துக் கொண்டிருந்தனர்.

இதன்போது ஜாகிர் கிராமம் அருகே வாகனம் சென்று கொண்டிருந்தபோது எதிரே செங்கல் ஏற்ற வந்த பாரவூர்தியுடன் எதிர்பாராத விதமாக மோதியது.

இந்த விபத்தில் வாகனத்தின் இடது பக்கம் பலமாக சேதமடைந்தது. அப்பகுதியில் அமர்ந்திருந்த வாகன சாரதி அதே இடத்தில் உடல் நசுங்கி உயிரிழந்தார்.

குழந்தைகளில் 7 பேர் சம்பவ இடத்தில் பரிதாபமாக உயிரிழந்தனர். உயிருக்கு போராடிக் கொண்டிருந்த 10 இற்கும் மேற்பட்ட குழந்தைகளை அருகில் இருந்தவர்கள் மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலன் அளிக்காமல் 4 குழந்தைகள் உயிரிழந்தனர்.

இதேவேளை, தப்பியோடிய பாரவூர்தி சாரதியை பொலிஸார் தேடி வருகிறார்கள். மேலும் இந்த பகுதி அடிக்கடி விபத்து நடக்கும் பகுதி என பொலிஸார் தெரிவித்தனர்.(அ-5)

# இராணுவம்-தீவிரவாதிகள் மோதல்; துப்பாக்கி சமரில் 20 தீவிரவாதிகள் பலி!



ஆபிரிக்க கண்டத்தில் கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் சரி சமமாக வாழ்ந்து வரும் நாடுகளில் நைஜீரியாவும் ஒன்று.

இந்நிலையில் மதச் சார்பற்ற ஆட்சி நடைபெற்று வரும் நைஜீரியாவில் ஷரீஆ சட்டங்களுக்குட்பட்ட இஸ்லாமிய ஆட்சியை நிறுவ வேண்டும் என்ற நோக்கத்தில் போக்கோ ஹரம் என்ற பெயரில் தீவிரவாதிகள் ஆயுதமேந்தி போராடி வருகின்றனர்.

இவர்கள் வழிபாட்டு தலங்கள் மீது தாக்குதல் நடத்துவது, கிறிஸ்தவர்கள் வசிக்கும் பகுதிகளில் வெடிகுண்டு தாக்குதலை நடத்துவது போன்ற தீவிரவாத செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் போக்கோ ஹரம் தீவிரவாதிகளின் ஆதிக்கம் நிறைந்த பகுதியாக கருதப்படும் மைடுடுரி அருகே உள்ள மோங்குனோ கிராமத்தை நேற்று முன்தினம் 3 வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் வந்த தீவிரவாதிகள் சுற்றி வளைத்ததுடன் அங்கிருந்த இராணுவ வீரர்களின் தங்குமிடம் மீதும் அவர்கள் சரமாரியாக துப்பாக்கித் தாக்குதல் நடத்தினர்.

இதனையடுத்து இராணுவம் நடத்திய பதில் தாக்குதலில் 20 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக அப்பகுதியின் இராணுவ செய்தி தொடர்பாளர் கேணல் சாகிர் மூசா தெரிவித்துள்ளார். (அ-5)

# முபாரக் மீதான மேன்முறையீட்டு வழக்கு ஏப்ரல் மாதம் ஆரம்பம்

எகிப்து நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கின் மீதான வழக்கின் மறு விசாரணை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி ஆரம்பமாகுமென கெய்ரோ மேல் முறையீட்டு நீதிமன்றம் நேற்றைய தினம் அறிவித்துள்ளது.

தனது ஆட்சிக்கு எதிராக போராடியவர்களை கொன்று குவித்ததாக முபாரக்கின் மீது நடைபெற்ற வழக்கு விசாரணையில் குற்றம் நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது. இதனையடுத்து கெய்ரோ சிறையில் தண்டனை அனுபவித்து வந்த அவர் சமீபத்தில் கீழே விழுந்து நெஞ்சு எலும்புகள் உடைந்து காயம் ஏற்பட்டால் இராணுவ வைத்தியசாலையில் அவர் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில் முபாரக்கின் விசாரணை நியாயமான முறையில் நடைபெறவில்லையெனவும் எனவே மறுவிசாரணை நடத்த வேண்டும் என்று முபாரக் சார்பில் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த நீதிபதி அஹமத் அலி அப்துல் ரஹ்மான் முபாரக் மீது மறுவிசாரணை நடத்த அனுமதி அளித்தார். கடந்த விசாரணையின் போது சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களை தவிர புதிய சாட்சிகளை சேர்க்கக்கூடாது என்ற நிபந்தனையுடன் மறுவிசாரணை நடத்தப்படலாம் என நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டார். இந்த உத்தரவைய டுத்து முபாரக் மீதான வழக்கின் மறுவிசாரணை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி முதல் தொடங்கும் என கெய்ரோ மேல் முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

போராட்டக்காரர்களை கொல்ல உத்தரவிட்ட வழக்குடன் சுமார் 10 இலட்சம் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக பெற்ற ஊழல் வழக்கு தொடர்பான புதிய விசாரணையும் முபாரக்கிற்கு எதிராக ஏப்ரல் 13 முதல் தொடங்கப்படும் என தெரிகிறது. இதே வழக்கில் ஸ்பெயின் நாட்டில் வசிக்கும் முபாரக்கின் நண்பர் சலீம் என்பவரும் குற்றவாளியாக இணைக்கப்பட்டுள்ளார். (அ-2)

# நான் சர்வாதிகாரி அல்ல; ஜனாதிபதி சர்தாரி தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் சர்வாதிகாரியாக வேண்டும் என்ற எண்ணம் என்னிடம் சிறிதும் இல்ல என பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் தற்போது ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியின் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் ஆட்சி நடைபெற்று வருகிறது. அதன் பதவிக்காலம் எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. அதைத் தொடர்ந்து அங்கு மே மாதத்தில் பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தேர்தல் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. அதில் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி கலந்து கொண்டு பேசியிருந்தார்.

அதில் நான் பாகிஸ்தானின் சர்வாதிகாரியாக வேண்டும் என்று ஒருபோதும் எண்ணியதில்லை. அதில் எனக்கு எப்போதும் விருப்பம் கிடையாது.

ஜனநாயகத்தின் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. எனவே தேர்தலில் வெற்றி பெறுபவர்களிடம் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்து விட்டு அரசில் இருந்து வெளியேறி விடுவேன் என்று தெரிவித்துள்ளார். (அ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பகைவனால் ஏற்படும் தீமையைக் காட்டிலும் அடக்கமில்லாத மனமே ஒருவனுக்கு அதிக தீமையைச் செய்யும். -ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மார்தட்டி நின்றானை தொடை காட்டிக் கொன்றான்

உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளினதும் பலங்களும் பலவீனங்களும்தான் அவற்றின் வெற்றிக்கும் தோல்விக்கும் அடிப்படைக் காரணம்.

தனது பலம் எது பலவீனம் எது என்பதை எவனொரு வன் சரிவரப் புரிந்து கொண்டுள்ளானோ அவனே வாழ்க்கையை வெற்றி கொள்கின்றான்.

இந்த நியதியை புரிந்து கொள்வதில் இலங்கையில் இருக்கக்கூடிய சிங்கள, தமிழ் மக்களிடமும் ஆட்சியாளர்களிடமும் நிறையவே பலவீனம் உண்டு.

தமிழ் மக்களுக்காக போராட்டம் நடத்திய விடுதலைப் புலிகள் தம் தொடர்பில் வெளிவரும் விமர்சனங்களை அறவே விரும்பவில்லை. இஃது அவர்களிடம் இருந்த மிகப் பெரிய பலவீனமாகும்.

விமர்சனங்களில் கருத்தாழம் மிக்க ஆலோசனைகளும் இடம்பெற்றிருக்கும் அந்த ஆலோசனைகளே சுய மதிப்பீட்டுக்கு உதவுவன. இருந்தும் தங்களை விமர்சிப்பவர்கள் தமிழினத்துக்கு எதிரானவர்கள் என்ற புலிகளின் முடிபு அவர்கள் விசுவாசமான பலரை இழக்க வேண் டியதாயிற்று.

அதேநேரம் கயவர்களை நம்புகின்ற கொடுமையும் நடந்தாயிற்று. இவைதான் புலிகள் என்ற அமைப்பு தோல்வியுறக் காரணம்.

கயவர்களை உறவாக்கினாலும் பரவாயில்லை. விசுவானவர்களை இழந்தது இருக்கிறதே அது இரட்டிப்பான பலவீனம்.

இதேபோன்றுதான் இப்போது இலங்கை அரசும் செயற் படுகின்றது. புலிகளைத் தோற்கடித்து விட்டோம் என்ற வீறாப்பு சர்வதேசத்தையும் உதாசீனம் செய்ய வைக்கிறது.

இலங்கையில் மனித உரிமைகள் மிகவும் மோசமாக மீறப்படுகின்றன என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு கூறினால், நீ யார் அதைக் கூறுவதற்கு என்று கேட்கும் அளவில் இலங்கை அரசின் பலவீனம் முற்றிப்போயுள்ளது.

ஏற்கெனவே ஜெனிவாவில் நிறைவேற்றப் பட்ட தீர்மானம் பற்றி இம்மியும் கவனம் செலுத்தாது உதாசீனப்படுத்துகின்ற இலங்கை அரசின் போக்கு, நிலைமை இறுக்கப் போகிறது என்பதையே சுட்டும்.

உலகில் இருக்கக்கூடிய சில அதர்மத்தனமான நாடுகளின் ஆதரவை வைத்துக் கொண்டு சர்வதேச சமூகத்தை உதாசீனப்படுத்துவது இலங்கை அரசிடம் இருக்கக்கூடிய மகா பலவீனம்.

இந்த பலவீனத்துக்கு மருந்து உண்டா என்றால் ஜெனிவாவில் முன்வைக்கப்படுகின்ற தீர்மானத்தை – அதில் எடுத்துரைக்கப்பட்ட பரிந் துரைகளை உடனடியாக அமுல்படுத்துவதே நல் மருந்தாகும் எனினும் அது நடக்கப்போ வதில்லை. என்பது நிறுத்திட்டமான உண்மை.

என்ன செய்வது! கண்ண பரமாத்மாவிடம் உதவி கேட்பதற்காக முதலில் சென்ற துரியோதனனுக்கு கண்ணனின் கால்மாடு தெரியவில்லை.

பரவாயில்லை, தலைமாட்டில் இருந்தாலும் கண்ணா! போர்க்களத்தில் என்னுயிரை நீ காப்பாற்ற வேண்டும் என்று கேட்கவாவது தெரிந்திருக்க வேண்டும். அதுவும் தெரியவில்லை.

வெறுமனே மார்தட்டி என்னை எதுவும் செய்ய முடியாது என்று நினைத்த துரியோதனனுக்கு தனது பலம் – தனது ஜீவபலம் தன் தொடையில் உண்டென்பதும் தெரியாமல் போனது. இதுதான் துரியோதனனின் பெரும் பலவீனம்.

கோபாவேசத்துடன் கண்மண் தெரியாமல் துரியோதனன் நிற்க பார்த்தனுக்கு அவன் சாரதி, துரியோதனனின் தொடையைக் காட்டுகின்றான். அந்தோ தொடையில் அடிவிழ மார்தட்டியவன் கீழே விழுகின்றான்.

இதுதான் பலவீனத்தின் நிலைமை. இதைப் புரிந்து கொள்வது, புரிந்து செயற்படுவது புத்திசாலித்தனம். இல்லையேல் அடி எங்கு விழும் என்பதை விழுந்த பின்புதான் தெரிந்து கொள்ள முடியும்.

# இந்திய தமிழர்களையும் இலங்கை வாழ விடாமல் செய்கிறது-பா.ஜ.க

(சென்னை)

இலங்கை அரசாங்கமானது இந்திய தமிழர்களையும் வாழ விடாமல் தொடர்ச்சியாக அட்டூழியங்களை செய்து வருவதாக தமிழக பா.ஜ.க. தலைவர் பொன். இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார். இது குறித்து பா.ஜ.க. தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

தமிழக மீனவர்கள் 22 பேர் இலங்கை இராணுவத்தினரால் கைது செய்யப் பட்டுள்ளனர். இந்தக் கொடுமை தொடர் கதையாகவே நீண்டு கொண்டிருக்கிறது.

இலங்கை வாழ் தமிழர்களைத் தான் வாழ விடாமல் வஞ்சிக்கிறது என்ற நிலைமையில் தமிழக மீனவர்களையும் அடிக்கடி பிடித்து வைத்துக் கொள்வதும் அவர்களது உடைமைகளை பறிப்பது மான தன் அட்டூழியத்தை தொடர்கிறது.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான போர் முடிந்து விட்ட நிலையிலும் கூட அமைதியை நிலை நாட்ட வேண்டிய தருணத்தில் இத்தகைய வெறிச் செயல்களில் ஈடுபடும் இலங்கை அரசின் செயல் மிகவும் கண்டிக்கத் தக்கது.

அப்பாவி மீனவர்கள் மீதான வன்முறை வெறியாட்டம் தொடர்ந்து கொண்டுள்ளது.

நமது கடல் பிரதேசத்தில் மீன் பிடிக்கக் கூட உரிமை இல்லையாவென் தமிழக மீனவர்கள் குமுறி கொந்தளிக்கும் நிலை உருவாகியுள்ளது மிகவும் மிகுந்த வேதனைக்குரியது.

இது குறித்து பல்வேறு அரசியல் தலைவர்களும் சமூக ஆர்வலர்களும் மீனவ நண்பர்களும் பல முறை கவலை, கண்டனம் தெரிவித்தபோதும் கூட மத்திய அரசு மௌனமாக இருக்கிறது.

பிடித்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 22 பேரை விடுவிக்க மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழக அரசும் இதில் தலையிட்டு மத்திய அரசை வற்புறுத்தி தமிழக மீனவர்களை விடுவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தமிழக பாரதிய ஜனதாக் கட்சி சார்பில் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# ஆர்.பி.ஜி.குண்டுகள் கொழும்புத்துறையில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழவிடுதலைப்புலிகளால்புதைத்து வைக்கப்பட்டிருந்த பல ஆர்.பி.ஜி. குண்டுகள் யாழ்ப்பாணம் கொழும்புத்துறையிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இம்மீட்புச் சம்பவம் நேற்றுக்காலை கொழும்புத்துறை உதயபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நீண்ட காலத்தின் பின்னர் பாரிய வெடிபொருள் மீட்புச்சம்பவம் இதுவென யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த் வெற்றுக்காணியினை உரிமையாளர் துப்புரவு செய்யும் போது குண்டுகள் புதைக்கப்பட்டும், வெளித்தெரியும் நிலையிலும் காணப்பட்டுள்ளன.

உடனடியாக இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கும், கொழும்புத்துறை இராணுவத்தினருக்கும் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு சென்ற யாழ்ப்பாணம் விசேட அதிரடிப்படையினரும், இராணுவத்தினரும் இணைந்து ஆர்.பி.ஜி. குண்டுகளை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட இக்குண்டுகள் தமிழீழ விடுதலைப் புலிகளினுடையதாக இருக்கலாம் எனவும் குண்டு மீட்கப்பட்ட பகுதி 1990ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு படையரணாக காணப்பட்டது எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்ட இக்குண்டுகள் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளதாகவும் அவை யாழ்.நீதிமன்றின் அனுமதியுடன் செயலிழக்கம் செய்யப்படும் எனவும் யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, அண்மையில் கூட மணியந்தோட்டம் கடற்பரப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தயாரிப்பில் உருவான ஒரு மீற்றர் நீளமுடைய குண்டொன்றும் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-4)

## சட்டவிரோத மின்சாரம் குருநகரில் 6 பேருக்கு வழக்கு

(கரவெட்டி)

யாழ்.குருநகர் பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம்பெற்ற 6 பேருக்கு எதிராக யாழ்.நீதிமன்றத்தில் எதிர்வரும் 8ஆம் திகதி வழக்குகள் தொடரப்படவுள்ளது.

கொழும்பில் இருந்து வந்த விசேட சட்டவிரோத மின்சாரத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது கடந்த 28ஆம் திகதி குருநகர் பகுதியை சேர்ந்த 6 பேருக்கு எதிராக வழக்குகள் பதியப்பட்டு ள்ளது.

அதே போன்று இக்குழுவினரின் முன்னைய தேடுதலின் போது சுன் னாகத்தில் 4 பேர், தெல்லிப்பழையில் 5 பேர், ஆனைக்கோட்டையில் 5 பேர் ஆகியோருக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டு நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்றத்தால் அபராதங்களும் நட்ட ஈடுகளும் கடந்த முதலாம் திகதி அறவிடப்பட் டுள்ளது.

சட்ட விரோரத மின்சாரத்தை இல்லாதொழிக்கும் வகையில் விசேட மின்சார சபை யினரின் தேடுதல் வேட்டை யாழ். மாவட்டம் பூராகவும் மும்முரமாக விஸ்தரிக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-3,24)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஐய்னார்புரம் அ.த.க பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி பாரதிபுரம் வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற அதிபர் க.இராசேந்திரம்,

சிறப்பு விருந்தினராக கரைச்சி கோட்ட கல்விப் பணிப்பாளர் த.அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (செ-11)

## இமையாணன் ம.வி கழக உதைபந்தாட்டப் போட்டி

(கரவெட்டி)

இமையாணன் மத்திய விளையாட்டு கழகத்தின் வடமராட்சிக்கு உட்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான 11பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணிக்கு கொற்றாவத்தை சிவானந்தா அணியை எதிர்த்து அல்வாய் பாரதி அணி மோதவுள்ளது.

இரண்டாவது போட்டியில் பி.ப 4 மணிக்கு கலட்டி ஐக்கிய அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை ஆதி சக்தி அணி மோதவுள்ளது. (அ-3,24)

## யுத்தம் முடிபுக்கு வந்ததை மேற்குலகு விரும்பவில்லை

### அமைச்சர் அமரவீர

(கொழும்பு)

இலங்கையில் யுத்தம் முடிபுக்குக் கொண்டு வரப்பட்டமை தொடர்பில் மேற்குலக நாடுகள் அதிருப்தி கொண்டுள்ளதாக இடர் முகாமைத் துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தங்காலையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், சில மேற் குலக நாடுகள் பயங்கரவாதம் இல்லாதொ ழிக்கப்பட்டமையினால் இலங்கை மீது காழ்ப்புணர்ச்சி கொண்டுள்ளன.

இலங்கையில் யுத்தத்தை முடிபுக்கு கொண்டு வந்த இராணுவ வீரர்களுக்கு எதிராக சில மேற்குலக நாடுகள் பல்வேறு சதி முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன.

யுத்தம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டதன் மூலம் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன என்றார். (அ-2)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### சாதனை படைப்பது எப்படி?



✦ ஒழுக்கம் நிறைந்த மனிதனே நிஜமான கல்விமான்.

✦ தன்னம்பிக்கையை இழப்பது தெய்வ நம்பிக்கையை இழப்பதற்குச் சமம்.

✦ குற்றம் காண்பதைவிட குணத்தைக்காண்பதுதான் உயர்ந்த குணம்.

✦ பெற்றுக்கொள்பவன் அல்ல கொடுப்பவனே பேறு பெற்றவன்.

✦ தன்னலத்தை ஒழிப்பதில்தான் மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது. உன்னைத்தவிர வேறு யாராலும் உன்னை மகிழ்விக்க முடியாது.

✦ தன்னை மறந்து பணியாற்றும்போதுதான் கடமையில் சாதனை படைக்க முடியும்.

✦ கோபப்படும் மனோபாவம் கொண்டவனே தனது பணியில் தீவிரமாக செயற்படமுடியும்.

✦ எல்லோருக்கும் ஒரே மாதிரியான இன்பம் தரும் பொருள் உலகத்தில் இல்லவே இல்லை.

✦ கருணை நிறைந்தவர்களாக மாறுங்கள். ஏனெனில் கருணையே இனிய சொர்க்கம்.

✦ எல்லாவற்றையும் ஆராய்ந்து பாருங்கள். ஆனால் உங்கள் கருத்தில் உறுதியாக இருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலுவான நிலையில் இந்தியா!

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் மோதும் 2 ஆவது டெஸ்ட் போட்டி ராஜீவ்காந்தி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

2ஆவது நாள் ஆட்ட நேரமுடிவில் 1 விக்கெட் இழப்புக்கு 311 ஓட்டங்களை பெற்ற இந்திய அணி நேற்று மதிய நேரத்திற்கு சற்றுப் பின் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 503 ஓட்டங்களைப் பெற்றது.

2 ஆம் நாள் ஆட்டமுடிவில் களத்தில் இருந்த விஜய்யும், புஜாராவும் நேற்று (3ஆம் நாள்) சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். நேற்றைய போட்டியில் சிறப்பாக விளையாடிய விஜய் 361 பந்துகளைச் சந்தித்து 23 பவுண்டரி, 2 சிக்ஸ் உள்ளடங்கலாக 167 ஓட்டங்களைப் பெற்றபோது மேக்ஸ்வெல் பந்தில் ஆட்டமிழந்தார். அப்போது அணியின ஒட்ட எண்ணிக்கை 387 ஆக இருந்தது. 2ஆவது விக்கெட்டுக்காக இந்த ஜோடி 370 ஓட்டங்களைக் குவித்து இந்திய அணியை வலுவான நிலைக்கு இட்டுச் சென்றது.


அடுத்து களம் வந்த சச்சின் புஜாராவுடன் இணைந்தார். இருவரினதும் சிறிது நேர ஆட்டத்தின் மூலம் 199 ஓட்டங்களை எட்டிய புஜாரா பவுண்டரி அடித்து இரட்டை சதத்தை பூர்த்தி செய்தார். 11ஆவது டெஸ்டில் விளையாடும் புஜாராவுக்கு இது 2ஆவது இரட்டை சதம். இதற்கு முன்பு கடந்த ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக அகமதாபாத் டெஸ்டில் 206 ஓட்டங்களை பெற்றிருந்தார். இரட்டை சதம் அடித்த சிறிது நேரத்தில் புஜாரா ஆட்டம் இழந்தார். அவர் 341 பந்துகளில் 30 பவுண்டரி 1 சிக்ஸ் உள்ளடங்கலாக 204 ஓட்டங்களைப் பெற்றபோது பேட்டின்சன் பந்தில் ஆட்டம் இழந்தார். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 393 ஆக இருந்தது. 4ஆவது விக்கெட்டுக்கு சச்சினுடன், வீராட் கோலி ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி மதிய நேர இடைவேளை வரை இருந்தது.

மதிய உணவு இடைவேளையின் போது இந்திய அணி 3 விக்கெட்டுகளை இழந்து 400 ஓட்டங்களை குவித்திருந்தது. மதிய உணவு இடைவேளைக்கு பிறகு இந்திய அணியின் விக்கெட்டுக்கள் அடுத்து வீழ்த்தப்பட்டன. ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் சச்சின் 7 ஓட்டங்களுடன் பேட்டின்சன் பந்தில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த அணித் தலைவர் டோனி சிறிது நேரம் தாக்கு பிடித்து விளையாடி 44 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அப்போது இந்திய அணி 5 விக்கெட்டை இழந்து 460 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அதன் பின் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் விக்கெட்டை பறிகொடுக்க இந்திய அணி 503 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இந்த ஓட்டமானது அவுஸ்திரேலிய அணிமுதல் இன்னிங்சில் பெற்ற ஓட்டத்தை விட 266 கூடுதலாகும். (அவுஸ். முதல் இன்னிங்ஸ்-237)

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக மக்ஸ்வெல் 4 விக்கெட்டுக்களையும், டோகற்றி 3 விக்கெட்டுக்களையும், பற்றின்சன் 2 விக்கெட்டுக்களையும், சிடில் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 2 ஆவது இன்னிங்சுக்காக களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 56 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை அடுத்தடுத்து இரு விக்கெட்டுக்களை பறிகொடுத்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் வோனர் 26 ஓட்டங்களையும், ஹியூக்ஸ் ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த வொட்சன் களத்திலே நின்ற எட் கோவனுடன் இணைந்து ஆடி வருகின்றார்.




நேற்றைய ஆட்ட நேர முடிவில் அவுஸ்திரேலிய அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. வீழ்த்தப்பட்ட இரு விக்கெட்டுக்களையும் அஸ்வின் கைப்பற்றியிருந்தார். களத்திலே எட் கோவன் 26 ஓட்டங்களுடனும் வொட்சன் 9 ஓட்டங்களுடன் உள்ளனர்.

4 ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## கிளார்க்கின் முடிவு துணிச்சலானது

### - கவாஸ்கர் புகழாரம்



ஐதராபாத்தில் நடைபெற்றுவரும் 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியா 9 விக்கெட் இழப்புக்கு 237 ஓட்டங்களுடன் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

இந்த முடிவு துணிச்சலானது என்று இந்திய அணியின் முன்னாள் தலைவரும் தொலைககாட்சி வர்ணனையாளருமான கவாஸ்கர் பாராட்டியுள்ளார். அவுஸ்திரேலியாவின் ஓட்டம் குறைவாக இருந்தது. கடைசி விக்கெட் ஜோடி கூடுதலாக ஓட்டம் சேர்த்தால் அணியின் ஓட்டம் உயரும்.

ஆனால் முதல்நாள் ஆட்டம் முடிவதற்கு 4 ஓவர்கள்தான் இருந்தன. இந்த நான்கு ஓவர்களில் இந்திய அணியின் சில விக்கெட்டுக்களை வீழ்த்தலாம் என்ற எண்ணத்தில் கிளார்க் இந்த முடிவை எடுத்திருக்கலாம். இது அனைவருக்கும் ஆச்சரியத்தை அளித்தது. கிளார்க்கின் இந்த முடிவு துணிச்சலானது என கவாஸ்கர் பாராட்டியுள்ளார.

# இலங்கை கிரி. வீரர்களின் பிரச்சினை முடிவுக்கு வந்தது



இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் மற்றும் அதனைத் தொடர்ந்தான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட தொடர் ஆகியவற்றின் இலங்கையின் முன்னணி வீரர்கள் 23 பேர் பங்குகொள்வதற்கு இலங்கைக் கிரிக்கெட் சபை தடை விதித்திருந்தது.

இலங்கைக் கிரிக்கெட் சபை வழங்கிய ஒப்பந்தத்தை ஏற்பதற்கு மறுப்புத் தெரிவித்ததன் காரணமாகவே இந்தத் தடை விதிக்கப் பட்டது.

வீரர்கள் இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் பங்குகொள்ளும் காலப்பகுதிக்கான ஊதியம் அவர்களது வருடாந்த ஊதியத்திலிருந்து கழிக்கப்படும், ஐசிசி தொடர்களில் பங்குபற்றுவதற்காக கிரிக்கெட் சபைக்கு ஐசிசி வழங்கும் தொகையில் 25 சதவீதம் வீரர்களுக்கு வழங்கப்படுவது நிறுத்தப்படும், வீரர்களின் மனைவிமாருக்கு வருடமொரு முறை வெளிநாட்டுத் தொடர்களுக்கு வழங்கப்படும் வெளிநாட்டுச் சுற்றுலாவிற்கான வாய்ப்பு நீக்கப்படும் உட்பட சில விடயங்கள் தொடர்பாகவே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வீரர்கள் மறுத்திருந்தனர்.

இதன் காரணமாக இத்தொடரில் இலங்கையின் அனுபவமற்ற, புதிய அணியொன்று விளையாடும் சூழ்நிலை எழுந்துள்ளது

இந்நிலையில் இலங்கையின் பிரதம தேர்வாளர் சனத் ஜெயசூரியவிற்கும், வீரர்களுக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பினையடுத்தே இந்த முறுகல் நிறைவுக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




# ரி-20 தொடரை இழந்தது சிம்பாவே

மேற்கிந்தியத் தீவுகள் உடனான 2ஆவது மற்றும் கடைசி ரி-20 போட்டியிலும் சிம்பாவே அணி தோல்வியடைந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 158 ஓட்டங்களை பெற்றது. போலார்ட் 24 பந்தில் 45 ஓட்டங்களும் (3 பவுண்டரி, 3 சிக்சர்), சிம்மன்ஸ் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

தொடர்ந்து ஆடிய சிம்பாப்வே அணி 6 விக்கெட்டுகளை இழந்து 117 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. இதனால் மேற்கிந்தியத் தீவுகள் 41 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்தில் மகசட்கா அதிக பட்சமாக 53 ஓட்டங்களைப் பெற்றார் எடுத்தார். சாடுவேல் பத்ரி 3 விக்கெட்டும், வெய்ன் பிராவோ 2 விக்கெட்டும் எடுத்தனர்.

ஏற்கனவே முதலாவது 20 ஓவர் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி பெற்றிருந்தது. இந்த வெற்றி மூலம் 2-0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது. ஒருநாள் தொடரையும் 3-0 என்ற கணக்கில் மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றி இருந்தது குறிப்பிடத்தக்கது.

இரு அணிகள் இடையேயான 2 டெஸ்ட் கொண்ட தொடரில் முதல் டெஸ்ட் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

# றெயினோஸ் முதல் வெற்றி! நடிகைகள் வீரர்களை கட்டி அணைத்து வாழ்த்து!!

சினிமா நட்சத்திரங்கள் விளையாடும் சிசிஎல் கிரிக்கெட் போட்டிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. சென்னையில் நடைபெற்ற போட்டியொன்றில் சென்னை ரைனோஸ் அணியை எதிர்த்து பெங்கால் டைகர்ஸ் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்கால் அணி முதலில் துடுப்பெடுத்தாடி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் சென்னை ரைனோஸ் அணி சார்பாக விக்ராந்த் 2விக்கெட்டுகளையும், ரிஷிகாந்த், சாந்தனு, விஷால் தலா ஒரு விக்கெட்டுகளையும் சாய்த்தனர்.


எளிய இலக்கு என்கிற குஷியோடு அடுத்து களம் இறங்கியது சென்னை அணி. விக்ராந்தும், ஜீவாவும் தொடக்க ஆட்டக்காரர்களாக இறங்கினார்கள். விக்ராந்த் ஆரம்பத்திலேய அதிரடி ஆட்டத்தை ஆரம்பித்தார். ஜீவா 12 பந்துகளில் 6 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அதன்பின் களமிறங்கிய விஷ்ணுவும், விக்ராந்தும் இருவரும் இணைந்து ஆட்டமிழக்காமல் 11.1 ஓவரிலேயே 110 ஓட்டங்களைப் பெற்றனர். விக்ராந்த், 51 ஓட்டங்களும் விஷ்ணு 43 ஓட்டங்களும் எடுத்தனர். இதன்மூலம் சென்னை அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த ஆண்டு சிசிஎல் போட்டியில் முதல் வெற்றியை ருசித்த மகிழ்ச்சியில் ஹீரோக்கள் ஆட்டம் போட்டனர். நடிகைகள் காஜல் அகர்வால், சோனியா அகர்வால், ஸ்ருதி, லட்சுமிராய், ராதிகா, ஆகியோர் வீரர்களுக்கு கட்டியணைத்து தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.




இதுவரை நடந்த ஆட்டங்களில் கேரள ஸ்டிரைக்கர்ஸ் 6 புள்ளிகளுடன் முதல் இடத்தில் இருக்கிறது. கர்நாடகா புல்டோசர் 5 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தில் இருக்கிறது. தெலுங்கு வாரியர்ஸ், மராத்தி, பெங்கால் டைகர்ஸ் ஆகியவை தலா 4 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் இருக்கிறது. சென்னை ரைனோஸ் 3 புள்ளிகளுடன் நான்காவது இடத்தில் இருக்கிறார்கள.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஜாவா ஹாட்ரிக் கோலால் மான்செஸ்டர் யுனைட்டட் வெற்றி



நார்விச் சிட்டி அணிக்கெதிரான பிறீமியர் லீக் கால்பந்து போட்டியில் கஜாவா ஹற்ரிக் கோல் அடித்து அசத்த மான்செஸ்டர் யுனைட்டட் அணி வெற்றிபெற்றது.

பிறீமியர் லீக் கால்பந்து போட்டி இங்கிலாந்தின் பல்வேறு பகுதியில் நடக்கிறது. இதன் லீக் போட்டியில் நார்விச் சிட்டி, மான்செஸ்டர் யுனைட்டட் அணிகள் மோதின.

போட்டியின் முதல் பாதியில் கடைசி நிமிடத்தில் மான்செஸ்டர் யுனைட்டட்அணிக்கு கஜாவா(45) ஒரு கோல் அடித்தார்.

நார்விச் சிட்டி அணி வீரர்களால் கோல் ஏதும் அடிக்கமுடியவில்லை.

பின்பு இரண்டாவது பாதியிலும் அசத்திய மான்செஸ்டர் யுனைட்டட் அணிக்கு தொடர்ந்து இரண்டு கோல் அடித்த கஜாவா(76,87) ஹ ட்ரிக் கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

கடைசி நிமிடத்தில் ருனே(90) மற்றொரு கோல் அடித்தார். இதற்கு நார்விச் சிட்டி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை.

முடிவில், மான்செஸ்டர் யுனைட்டட் அணி 4-0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

## இலங்கை தூத...

தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண் டும். ஈழத்தமிழர்கள் தங்கள் எதிர்கால த்தை தாங்களே நிர்ணயம் செய்து கொள்ளும் வகையில் ஐ.நா.மூலம் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பன உட்பட 5 கோரிக்கைகள் முன் வைத்தே இந்த போராட்டத்தை நடத்தினர்.

கறுப்புக்கொடி ஏந்தியவாறு இலங்கைக்கு எதிராக கோஷம் எழுப்பியவாறே தூதரகத்தை நோக்கி சென்றனர்.

அப்போது இலங்கை தேசியக் கொடி மற்றும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் உருவபொம்மைகள் தீயிட்டு எரிக்கப்பட்டன.

இந்நிலையில், முற்றுகையிட சென்ற தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடு மாறன், பெரியார் தி.க. தலைவர் ஆனூர் ஜெகதீசன், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் நிறுவனர் தி.வேல்முருகன் உள்ளிட்டபல அமைப்புகளின் தலைவர்கள், தொண்டர்கள் என ஆயிரக் கணக்கானோர் தடுத்து நிறுத்தப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். (செ-11)

## அரசின் தாமத...

இதற்கிடையில் தாம் அரசாங்கத்துடன் தொடர்ந்தும் தொடர்பில் இருப்பதாகவும், கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் அரசு தம்மை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்திருந்தமை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனினும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அமுலாக்கம் மற்றும் ஐக்கிய நாடுகளின் தொழில்நுட்ப குழுவினது அறிக்கை என்பன இன்னமும் கிடைக்காத நிலையில் தமது விஜயத்தை பிற்போட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் எதிர்வரும் மாதங்களில் ஜெனிவாவில் உள்ள இலங்கையின் நிரந்தப் பிரதிநிதிகளை சந்தித்து தமது இலங்கை விஜயம் தொடர்பில் தீர்மானிக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

## 2 பள்ளிவாசல்கள்...

தொழுகையில் ஈடுபட்டுவருவதாக பள்ளிவாசல் நிர்வாகியொருவர் தெரிவித்துள்ளார்.

இப்பள்ளிவாசலை அகற்றுமாறு ஒரு மாதத்திற்கு முன்னர் சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சு தங்களுக்கு அறிவித்திருந்ததாகவும் அவர் மேலும் குறிப்பிடுகின்றார்.

மஹர பள்ளிவாசல் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் நபர்கள் பள்ளிவாசல் சுவரில் பன்றியை வரைந்து ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் ஹலால் பன்றி என எழுதிவிட்டு சென்றுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் நடைபெறுவதாக காவல்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம்களுக்கு எதிராக எந்தவொரு செயல்பாடுகளுக்கும் இடமளிக்கப்படமாட்டாது என அரசாங்க தரப்பிலிருந்து அவ்வப்போது உறுதிமொழிகளும் உத்தரவாதங்களும் வழங்கப்பட்டு வந்தாலும் இத்தகைய சம்பவங்கள் தொடர்வதாக முஸ்லிம்கள் பலரும் கவலையுடன் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

முஸ்லிம் அமைப்புகளின் தகவல்களின் படி அண்மைக்காலங்களில் பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்கள் சில இடங்களில் இடம் பெற்றுள்ள போதிலும் எவரும் கைதானதாக தகவல்கள் இல்லை என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.(செ-11)

## அமைச்சர் சமரசிங்க...

தெரிவிக்கபடுகின்றது.

மனித உரிமை பேரவையில் கூட்டத் தொடரில் உலகளாவிய மதிப்பாய்வு கூட்டத் தொடர் எதிர்வரும் 15ஆம் திகதியே ஆரம்பமாகின்றது.

அந்த கூட்டத்தொடரில் பங்கேற்பதாக அவர் மீண்டும் ஜெனிவாவுக்கும் செல்வார் என்று தெரியவருகின்றது.

இலங்கை தொடர்பிலான கருத்துக்களை ஜெனிவா கூட்டத் தொடரின்ஆரம்பத்தில் முன்வைப்பதற்கு அவருக்கு 20 நிமிடங்கள் மட்டுமே கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (செ-11)

## மகிந்த மீது நடவடிக்கை...

கடிதத்தின் முதல் பக்கத்தில் ஈழ தமிழர்கள் வெல்லட்டும்; இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒழிக என்று எழுதப்பட்டிருந்தது.

மேலும் கடிதத்தில் கூறியிருப்பதாவது...

இலங்கையில் ஒரு லட்சத்து 76 ஆயிரம் தமிழர்களை கொன்று குவித்த இலங்கை ஜனாதிபதி மகிந்தவை தண்டிக்க வேண்டும். அதற்காக ஐ.நா மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவு தர வேண்டும். மேலும் எனது ஈழத்தமிழ் சமுதாயம் தனி நாடு பெற்று எனது உயிரின் மக்கள் நன்றாக நல்வாழ்வு பெறவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

எனது தாய், மனைவி, மகள், மருமகன் மகன்களுக்கு எத்தனையோ துன்பங்களைக் கொடுத்து விட்டேன். நீங்கள் எனக்குக் கிடைத்தது பெரும் பாக்கியம். எனது இறுதிச் சடங்கை தற்போது உள்ள வீட்டில் வைத்து என் மீது இந்திய தேசியக் கொடியை போர்த்தி எடுத்து நல்லவாறு சுடுகாட்டில் என்னை எரித்து என் நினைவாக சிறுகட்டிடம் கட்ட வேண்டும். இவ்வாறு அந்த கடிதத்தில் உருக்கமாக கூறியுள்ளார்.

முன்னதாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மணி கூறுகையில்,

ஊழலுக்கு எதிராக அன்னா ஹசாரே போராடி வருகிறார். அவர் வழியில் ஊழலற்ற இந்தியா உருவாக்க வேண்டும். சுனாமி வீடு கட்டும் திட்டத்தில் ஊழல் நடந்துள்ளது. இது பற்றி உரிய விசாரணை நடத்தி குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும்.

இலங்கை அரசிற்கு எதிராக ஐ.நா சபையில் அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை இந்தியா ஆதரித்து அவரைத் தண்டிக்க வேண்டும். இலங்கைத் தமிழர்களுக்கான எனது உயிரைக் கொடுப்பதில் பெருமை அடைகின்றேன் என்றார். (செ-11)

## ஆட்சி மாற்றத்திற்காகவே...

முன்னதாக கிளிநொச்சி இரணைமடுவில் அமைந்துள்ள மாவட்ட பாதுகாப்பு படைகளின் தலைமையகத்தில் அந்த மாவட்டத்தின் கட்டளைத் தளபதி உள்ளிட்ட உயரதிகாரிகள் அவரை வரவேற்றனர்.

இரணைமடுவில் ஏ9 வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இராணுவத்தினருக்கான நலன்புரி கடைத்தொகுதியை அவர் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தன் பின்னர், இரணைமடு படைத் தலைமையகத்தில் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் மத்தி யில் உரையாற்றினார்.

நல்லிணக்க ஆணைக்குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கமைய இராணுவ விசாரணைகள் நடத்தப்பட்டன.

அந்த விசாரணைகளில் இராணுவத்தினர் குற்றமற்றவர்கள் என்பது வெளிப்பட்டிருக்கின்றது. இது தொடர்பிலான அறிக்கையும் வெளியிடப்பட்டிருக்கின்றது என்றும் இராணுவத் தளபதி தெரிவித்திருக்கின்றார்.

யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளிலும், மீள் கட்டுமானப் பணிகளிலும், அபிவிருத்தி வேலைத் திட்டங்களிலும் இராணுவத்தினர் பெருமளவில் பணியாற்றி வருகின்றார்கள்.

நூறு வீதமான தமிழ் மக்களைக் கொண்ட கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவு மாவட்டங்களில் இராணுவத்தினர் தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுக்கும் வகையில் தமது கடமைகளைப் பொறுப்போடு மேற்கொள்ள வேண்டும் என்று இராணுவத் தளபதி வலியுறுத்தியிருக்கின்றார்.

இலங்கை மனித உரிமைகளை மீறியிருப்பதாக ஜெனிவா மாநாட்டில் குறை கூறப்பட்டிருகின்றது. பலநாடுகள் இது குறித்து அங்கு விவாதிக்கின்றார்கள். அப்பாவிகளை இராணுவத்தினர் கொன்றார்கள் என்றும், பெண்கள் மீது பாலியல் குற்றங்கள் புரிந்தார்கள் என்றும், அங்கு குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்றது.

அதே நேரம் சனல் 4 தொலைக்காட்சியும், சிறுவர்களைக் கொன்றதாகவும் மற்றும் கொலைகளைச் செய்தாகவும் குற்றங்களைச் சுமத்தியிருக்கின்றது. அங்கு அவர்கள் பல்வேறு விடயங்கள் பற்றி பேசுகின்றார்கள்.

இவைகுறித்த எமக்கு எதுவுமே தெரியாது. இந்தக் குற்றங்கள் பற்றி எங்களுக்கு எவருமே இதுவரையில் சொன்னதும் கிடையாது. இந்தக் குற்றங்கள் தொடர்பாக எம்மிடம் யாரும் முறையிடவுமில்லை.

இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திலேயே இந்தக்காரியங்கள் இடம்பெற்று வருகின்றன.

அதே நேரம் சில நாடுகள் இலங்கையில் ஓர் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்வாறு செயற்படுகின்றன.

பிரிட்டனின் சனல் 4 தொலைக் காட்சி நிறுவனம், சிறுவன் ஒருவனைக் கொன்றது தொடர்பாகக் குற்றம் சுமத்தி வீடியோ காட்சிகளை வெளியிட்டிருக்கின்றது.

இந்தச் சம்பவங்களுக்கும் எமக்கும் எந்த சம்பந்தமில்லை என்று இராணுவத்தினர் சார்பில் எமது ஜனாதிபதி மறுப்பு தெரிவித்திருந்தார்.

ஜெனிவாவில் கூறப்படுகின்ற சம்பவங்களுக்கும் எமது இராணுவத்திற்கும் சம்பந்தமில்லை. எமது இராணுவத்தினர் மிகுந்த ஒழுக்கத்துடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு வந்திருக்கின்றனர்.

இராணுவத்தினர் தமது தொழில் தகைமைகளைப் மேம்படுத்திக் கொள்வதற்கு வசதியாக வெளிநாடுகளில் பயிற்சி நெறிகளில் பங்கு கொள்வதற்கான வசதிகளும் செய்யப்பட்டிருப்பதாகவும் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்திருக்கின்றார். (செ-11)

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு கனகம்மா (கண்ணு)

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கனகம்மா அவர்கள் இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-இராசம்மா தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்ற பரராஜசிங்கம் (வவா), நவநீதராஜா (ஜெயா), சுபாஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயச்சந்திரன் (அவுஸ்திரேலியா), யோகேஸ்வரி (யா/மல்லாகம் மகா வித்தியாலய ஊழியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சோனியா, திவ்யா, ரூபி, துபிகா, ஜான்சிகா, கார்த்திக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மார்க்கண்டு, செல்லத்துரை, நவரத்தினம் ஆகியோரின் சகோதரரும், கனகேஸ்வரி, விக்னேஸ்வரி, தில்லைநாதன்(ஜே.பி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று செவ்வாய்க் கிழமை பி.ப.2 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள், மருமக்கள்.


கிளிநொச்சி மத்திய கல்லூரியில்

பிரதி அதிபராகப் பணியாற்றி ஓய்வுபெறும்

திருமதி கெங்காதேவி ஜெயராஜ் (M.Ed,SLPS 2-II )

அவர்களின் சேவைநலன் பாராட்டிதழ்

05-03-2013



ஆசிரியத்துவம் எனும் அளவிடமுடியாத சேவைதனை

அனுசரித்துப்போதல் எனும் அன்பு சால் ஆட்சியால்

ஆண்டுகள் இருபத்தெட்டு ஆண்டு நின்றீர்.

கல்வியில் ஏழ்மை கண்ட மலையகத்தில் "பந்தில" வில் பணிதொடங்கி

யாழ்ப்பாணம், வன்னியில் வட்டக்கச்சி, கரிப்பட்டமுறிப்பு, புதுக்குடியிருப்பு

இத்தனை இடங்களெல்லாம் புவியியலை இன்பமான இயல்பாக்கி

இதமான சேவைசெய்தீர்.

கிளி நகரின் மணிமுடியாய் நின்ற மத்திய கல்லூரியை

பூச்சியத்தில் பொறுப்பேற்று உச்சமாக்க உழைத்து நின்றீர்.

சுடுசொல் பொழியாது வடு சொல் மொழியாது

கனிவான சொல் பகன்று கடும் வேலை வாங்கிநின்றீர்.

ஆசிரியர் குழாத்தினரை தட்டித் தட்டிக் கொத்து

பட்டென வேலைமுடிப்பீர்.

பாடசாலை மட்டுமன்றி வீட்டினிலும் விருந்தமைத்து

ஆசிரிய மாணவரை அன்புடனே அரவணைத்தீர்.

உம் நற்சேவைக்காக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர்கள் சங்கம்

கிளிநொச்சி மாவட்டம்.

(சி-2590)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய நல்லிணக்கத்தில்...

இலங்கையின் அவதான அறிக்கையை தன்னிடம் கையளித்த ஐந்து தூதுவர்களுடன் பேசிய போதே பான் கீ மூன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தூதுவர்களிடம் மூன் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய நல்லிணக்கத்தையும் அதேவேளை நேர்மையான அனைத்தையும் அடக்கிய செயன்முறை ஊடாக பொறுப்புக்கூறும் பிரச்சினையை முடிபு கொண்டு வருவதன் முக்கியத்துவத்தை நான் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளேன்.

இலங்கையில் யதார்த்தமான நல்லிணக்க முனைப்புகள் மேற்கொள்ளப்படவேண்டும். அத்துடன் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பிலான முக்கியத்துவத்தை இலங்கை முழுமையாக புரிந்து செயல்பட வேண்டும்.

எனவே யதார்த்தமானதும் முழுமையானதுமான தேசிய நல்லிணக்க முனைப்புகள் இலங்கைக்கு மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பங்களாதேஷ், நைஜீரியா, றுமேனியா, இலங்கை மற்றும் கொலம்பியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஐவர் இலங்கை பற்றிய அவதானிப்பு அறிக்கையை தயாரித்திருந்தனர்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஐக்கிய நாடுகள் பிரதிநிதிகள் ஊடாக யுத்தத்தின் பின்னர் இலங்கை அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கை குறித்து தாம் விளங்கிக் கொண்டுள்ளதாக மூன் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் நல்லிணக்கமாகியன குறித்த அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (செ-11)

# யாழில் நேற்று...

பிரதேசங்கள் பல தொடர்ச்சியாக பெய்த மழையினால் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இடி, மின்னல் இன்றி பெய்த இம் மழைக்கு காரணம் தாழமுக்கம் என வளிமண்டல வியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலைகள், அரச நிறுவனங்கள் போன்றவற்றிலும் மழையின் தாக்கத்தினை நேற்றைய தினம் உணரமுடிந்து.

யாழ்.நகரில் உள்ள சீர் செய்யப்படாத வீதி களின் போக்குவரத்தும் புரனமைக்கப்பட்டு கொண்டிருக்கும் பிரதான வீதிகளிலும் போக்குவரத்து என்பது பெரும் இடர்பாடாக இருந் தது.

நேற்று மதியத்திற்கு பின்னர் யாழ். நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் வியாபார மின்றி வெறிச்சோடிக் காணப்பட்டன.

எனினும் சிலநாட்களாக நிலவிய கடும் வெயிலை தொடர்ந்து நேற்று மழை பெய்ததால் யாழ்.குடாநாடு குளிர்ச்சியடைந்தது.

இதே வேளை கிளிநொச்சியிலும் பரவலாக மழை பெய்தது. (செ-4-6)


**காணி விற்பனைக்குண்டு**

வட்டுக்கோட்டை மாவடி சந்தி
மூளாய் வீதியில் சந்திக்கு
அண்மையில் பிரதான வீதியுடன் 14
பரப்புக் காணி பழைய வீடு,
கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 075-0414028.
077-0871396.
(சி-2589)

**FRENCH LANGUAGE CENTRE**
சர்வதேச தரத்திலான French வகுப்புக்களை வழங்கும் ஒரே ஒரு நிறுவனம்

**FRENCH CLASSES – பிரெஞ்சு வகுப்புக்கள்**

Canada, French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட சர்வதேச சான்றிதழ்களை (International Certificates) பெற்றுக் கொள்ளலாம்...

ஆசிரியர்: Mr. V. Jegan (Teaching Training in France-2007, University பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)

Batch 1- 16.03.13 Sat. 11am.
Batch 1- 19.03.13 Tue. 11am.
Batch 2- 18.03.13 Mon. 3pm.

No.23, Palaly Road, Jaffna.
(அப்பலோ வைத்தியசாலை முன்பாக ஆரியகுளம்)
TP: 0779 789 456
181, 1st Floor, Main Road, Nelliady.
(சோதி வீதி முன்பாக உள்ள மாடியில்)

இணைவாக • BCLL இன் English Courses, Deutsch, சிங்கள வகுப்புக்களும்....

தற்போது யாழ் நகரில்...

LLB (Hons) in LAW

from UNIVERSITY OF WOLVERHAMPTON




**Why Choose BCAS for Law?**

- > இலங்கையில் ஒரு lawyer ஆக தொழில் புரிவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.
- > 3 வருட LLB (Hons) கற்கை நெறியை யாழ்ப்பாணத்திலேயே பூர்த்தி செய்ய முடியும்.
- > இலங்கை சட்டக் கல்லூரி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) இனால் அங்கீகரிக்கப்பட்டது
- > இலங்கை சட்டக் கல்லூரிக்கு Law college entrance exam இன்றி அனுமதி பெற்றுக்கொள்ளமுடியும்.
- > Attorney படிப்பதற்கு BCAS Campus மேலதிக பயிற்சி வகுப்புக்களை நாடாத்துகின்றது.
- > வயதெல்லை இன்றி அனைவரும் கலந்து கொள்ள முடியும்.

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

For further details :
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
021 2219910 / 0777 102131
www.bcas.lk
Colombo : 077 482 9765 | Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432 | Kurunegala : 077 387 4747

Macro Ads

**யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் மிகப்பெரிய இந்திய கல்விக் கண்காட்சி**

பிரவேசம் இலவசம்

ON THE SPOT ADMISSIONS

edCil

**INDIAN Education Fair**

விஷேடமாக உயர்தரப்பரீட்சையில் தோற்றியோர் மற்றும் உயர்கல்வியினைத் தொடர்வதற்கு ஆர்வமுள்ளவர்களுக்காக

2013 மார்ச் மாதம்
5 மு.ப. 10.30 – பி.ப. 6.30
6 மு.ப. 10.30 – பி.ப. 12.00

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்

**இந்திய கல்விச் சந்தை உங்களுக்கு வழங்குவது என்ன?**

- பட்டதாரி மற்றும் முதுநிலைப் பட்டதாரி கல்வியை வழங்கும் இந்தியக் கல்வி நிலையங்கள்
- இலவச தொழில்சார் வழிகாட்டுதலும் ஆலோசனையும்
- தொழில் பயிற்சி நிலையங்கள்
- தொழில்சார் திட்டமிடல் பற்றிய கருத்தரங்குகள்
- விமானப் போக்குவரத்துத் துறை கல்வி நிலையங்கள்
- வியாபாரப் பாடசாலைகள்
- தகவல் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் கல்லூரிகள்
- தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையங்கள்
- சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ கல்வி நிலையங்கள்
- ஹொட்டேல் முகாமை மற்றும் சுற்றுலா கல்வி நிலையங்கள்
- நிதி மற்றும் வங்கித் தொழில் கல்வி நிலையங்கள்
- கடற் போக்குவரத்துக் கல்வி நிலையங்கள்
- கல்வி ஆலோசகர்கள்
- உள்ளக வடிவமைப்பு மற்றும் கட்டடக்கலை நிலையங்கள்
- செயலக அலுவல் பயிற்சி நிலையங்கள்
- மருத்துவ மற்றும் தாதிமார் கல்வி நிலையங்கள்
- மூன்றாம்நிலை கல்வி நிலையங்கள்
- நுண்கலை மற்றும் நவநாகரிகக் கலை பாடசாலைகள்

ORGANISED BY: edCil – EdCIL (India) Limited, A GOVERNMENT OF INDIA ENTERPRISE
SUPPORTED BY: Consulate General of India Jaffna
PROFESSIONAL EXHIBITION ORGANISER: LECS – LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
OFFICIAL TV


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org